www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20 ரூபா 11/00

பெப் 15-21,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 244

# நாட்டைக் கலக்கிய நான்கு நாட்கள்!

## மர்மமான சடலங்கள்



## காதலர்தின ஸ்பெசல்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

# முரசம்

## தீவு எங்கும் நாற்றம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

சுதந்திரப் பொன்விழா
கொண்டாட்டங்கள்
அந்தரமாக நடந்து முடிந்தன!

பொன்விழாவை
நினைத்த இடத்தில்
நடத்தி முடிக்க முடியாதது
முதற் கோணலாகியது!

இனப்பிரச்சனையும்
அதன் விளைவான போரும்
பற்றி எரிந்து கொண்டிருக்க
பொன்விழா கொண்டாட்டம்
களை கட்டும் என்று
எப்படி எதிர்பார்க்கலாம்?

எதிர்பார்ப்பே
தவறாக இருந்தமையால்
விளைவுகளும் அரசின்
விருப்பம் போல்
அமையாமல் போயின!

பற்றி எரியும்
தேசிய இனப் பிரச்சனையை
பயங்கரவாதப் பிரச்சனையாக
சித்தரித்துக் கொண்டு,
நாடெங்கும் விழா நடத்துவது
சாத்தியமில்லை என்பதையே
நிகழ்வுகள் நிரூபித்துள்ளன!

தலைநகரம்
வெறிச்சோடிக் கிடந்தது!

தடைப்பட்ட சாலைகள்,
மூடப்பட்ட வீதிகள்,
தடுக்கப்பட்ட வாகனங்கள்!

ஏன், பாதசாரிகள்
நடமாடக்கூட
தடை விதிக்கப்பட்டிருந்தது!

உத்தியோக பூர்வமற்ற
ஊரடங்கு ஒன்றை
பிறப்பித்துவிட்டுத்தான்
பொன் விழாவை
தலைநகரில் நடத்தி முடித்தனர்!

மக்களே கலந்துகொள்ளாத
சுதந்திரப் பொன்விழா
இதுவாகத்தான் இருக்கும்!

படையினரும், பொலிசாரும்
மட்டும்தான்
சுதந்திரமாக நடமாடினர்!

பொன்விழா நாளில்
துர்ச் செய்திகள் கூடாது என்று
போர்க்களச் செய்திகளை
அரச செய்தி ஊடகங்கள்
அடக்கியே வாசித்தன!

விருந்தினராக வந்த
வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு-
'நாடு அமைதியாக உள்ளது'
என்று காண்பிக்கவும்
அரசு ஆர்வப்பட்டிருக்கலாம்!

உலை வாயை மூடலாம்;
ஊர் வாயை மூடலாமா?

இனப்பிரச்சனையும்
அதனால் மூண்ட போரும்
ஊர்வாயைவிட
மிக நீளமானவை!

மூடிமறைக்க முடியாதளவுக்கு
நாட்டு நிலவரம்
மிகக் கலவரமாக இருந்ததை
உலகப் பிரமுர்கள்
உணர்ந்தே இருப்பர்!

மக்கள் இல்லாத
கொண்டாட்டங்களும்
உண்மை உரைத்திருக்கும்!

ஆள் நடமாட்டமில்லாத
தலைநகர வீதிகள்
நாட்டின் தலை விதியை-
போர் தலைகீழாக்கியுள்ளது-
என்பதைக் காட்டியிருக்கும்!

பிரதம விருந்தினர்
இளவரசர் சாள்ஸுக்கு
அலங்கார ஊர்திகளின்
அணிவகுப்பைப் பார்வையிடக்கூட
கொடுத்து வைக்கவில்லை!

இளவரசர் சாள்ஸுக்கு
இனப்பிரச்சனை பற்றி
தெரியாமல் இருந்தாலும்,
'இலங்கைத் தீவு
பாதுகாப்பான பூமியல்ல!'
என்பது புரிந்திருக்கும்!

மொத்தத்தில்;
பொன்விழாவைக்கூட
பூரண திருப்தியோடு
அரசாங்கத்தால்
கொண்டாட முடியவில்லை!

இனப்பிரச்சனைக்கு
தேவையானது சத்திர சிகிச்சை!
அதாவது அரசியல் தீர்வு!

அதனைவிடுத்து,
புண்ணுக்கு
புனுகு பூசும் முயற்சிகள்
நோயைத் தீர்க்காது.
மாறாக, புண்ணின் நாற்றம்
தீவு முழுவதும் பரவும்
என்பதையே
அந்தரத்தில் நடந்து முடிந்த
பொன்விழா நிகழ்வுகள்
புட்டு வைக்கின்றன!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## போதும் என்ற மனமே தேவை!



"எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும்-" அனுதினம் நாம் ஆண்டவனிடம் மன்றாடும் இம்மன்றாட்டின் உண்மையான கருத்து என்ன? 'எங்கள் அப்பம்' என்பது எதைக் குறிக்கிறது? சாப்பாட்டை மட்டுமல்ல; நமது லௌகீக தேவைகள், நல்ல ஏற்புடைய தேகசுகம், மானம் மறைக்க உடைகள், நல்லதொரு தொழில் என்பவையுடன் ஏனையவர் எல்லாரிடமும் 'அன்பு' செய்யும் நல்லதொரு மனம்.

'அப்பம்' என்பது அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவு மட்டுமல்ல; நல்லதோர் இதயம்; நலம் காக்கும் மனமும்கூட.

ஆம், விவிலியம் என்ன கூறுகிறது? எல்லா நல்லாசீர்களினதும் நல்லூற்று இறைவனே; நல்லவைகளின் வளம்; எல்லா இன்பங்களினதும் எழிலான அத்திவாரம் அவனே.

சுயதேவையைப் பூர்த்தி செய்து சுகமாக வாழ்வது எளிது. ஆனால் இறைவனே எல்லாவற்றினதும் 'முழுமுதல்' என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இயேசு ஏராளமாகக் கேளுங்கள் என்று சொல்லவில்லை அன்றாட அப்பத்தைத்தான் கூறுகிறார்.

"இன்றைக்கு நாம் இவ்வாறு ஜெபித்தால் போதுமென்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயமாயிருக்கும்!" -(1 தீமோத்தேயு-6:6)

ஏ.பி.வி.கோமஸ்.

## அல்லாஹ்வை 'திக்ரு' செய்வதாலுண்டாகும் மகிமை!

ஒரு முறை நபி மூஸா (அலை) அவர்கள் அல்லாஹுதஆலாவிடம், "யா அல்லாஹ்! நீ எனக்குப் பல உபகாரங்கள் புரிந்திருக்கிறாய். உனக்கு அதிகமாக நன்றி செலுத்தும் வழிமுறையைச் சொல்லித் தருவாயாக!" என்று கேட்டார்கள். அப்பொழுது அல்லாஹுதஆலா, "எந்த அளவு நீர் அதிகமாக என்னை திக்ரு செய்து வருகிறீரோ, அந்த அளவு எனக்கு நன்றி செலுத்தியவராக ஆகிவிடுவீர்!" என்று அருளினான். மற்றோர் அறிவிப்பில், நபி மூஸா (அலை) அவர்கள் "யா அல்லாஹ்! உன்னுடைய அந்தஸ்திற்குத் தக்கவாறு நான் உனக்கு எவ்வாறு நன்றி செலுத்துவது என்பதை எனக்கு சொல்லித் தருவாயாக!" என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ், "உம்முடைய நாவானது சதாவும் திக்ரிலேயே திளைத்திருக்கும்படியாக வைத்துக்கொள்வீராக!" என பதிலளித்தான் எனக் கூறப்பட்டுள்ளது.

1) அல்லாஹ்வுடன், 'மஇய்யத்' எனும் நெருக்கம் பெற திக்ரு உதவுகிறது. திக்ரை மறந்திருப்பது அல்லாஹ்வுடன் பகைமை கொள்வதற்கு அடிப்படையாகிறது.

2) திக்ராகிறது இதய நோய்களுக்கு இதமான மருந்தாகவும், ஒளியாகவும் அமைகிறது.

3) அல்லாஹ்வை திக்ரு செய்பவரின் மீது அல்லாஹ்வின் சலவாத்தும் (ரஹ்மத்தும்) மலக்குகளின் துஆவும் ஏற்படுகின்றன.

4) திக்ருடைய சபைகள் வானவர்கள் கூடும் சபைகளாகும்.

5) தொடர்ந்து திக்ரு செய்து வருபவர்கள் சிரித்தவராகச் சுவர்க்கம் செல்வர்.

தொகுப்பு முஹம்மது நிஸான் ஸனூன்-அக்குரஸ்ஸ.

## கவிதைப் போட்டி இல.241

பரிசுக்குரிய கவிதை

### பசியும் பொதியும்

வந்த சுதந்திரம்
தந்திரமாய்ப் போனது!
மீண்டு(ம்) வருமாம்!
வழியின் மீது விழி...!

க.நாகராசா- நுணாவில்,
சாவகச்சேரி.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**இரக்கமில்லையோ...?!**

பெண்ணைக் கண்டால்
பேயும் இரங்குமாம்!
பெண்ணைக் கண்டு
யுத்தம் இரங்காதா?

சோழியூர் சிவபரீஸ்வரன்- யாழ்ப்பாணம்.

**அச்சம்**

வெஞ்சமரின் ஒலி கேட்டு
வீட்டினுள் பதைத்து
அஞ்சி அமர்ந்தனளோ-இந்த
அருமைக் கன்னியாள்?

பசறையூர்-மல்லிகா பத்மநாதன்.

**காத்திருப்பேன்**

அல்லும்பகலும் அல்லாஹ்-
ரமழான் திங்களின்
நோன்பை
நிறைவு செய்தேன்;
இன்ஷா அல்லாஹ்-
இன்னுமொரு
ரமழான் பிறைக்காய்
காத்திருப்பேன்!

ஏம்புக் லைலா

**முழுமதியோ?**

கார்மேக இருளுக்குள்
கவிந்திருக்கும் முழுமதியோ?

ச.மாலினிகம்-வெலிமடை.



**புரியவில்லை**

நாளை வரை அவலம் என்று
நாங்கள் அன்று நம்பிவந்தோம்!
நாள்தோறும் அவலமென்றால்,
நாங்கள் எங்கே செல்லுவது...?

சிறிவிபாசன் சிவா-
வட்டவளை.

**எச்சரிக்கை!**

பாதியில் இளைப்பாற
இது ஒன்றும்
பாலைவனச் சோலையல்ல!
பயணத்தைத் தொடர்ந்து விடு;
பாதகர் உன்னைத்
தொடரு முன்னர்!

அக்பரர் நகரம் பெ.ஜெயராஜ்.

**பெருநாள்**

பண்டிகைக்கு எடுத்த
உடுப்பு இது-
'இந்து வருடத்திற்கு
முன்பு
அம்மாவிற்கு!


சுபா வரன்-கண்டி.

**ஏக்கம்**

எதன் வரவிற்கு ஏங்கி
மாதவம் செய்கிறாள்-?
எட்டாத தீர்வையா?
சரிந்து செல்லும்
சமாதானத்தையா?..

சி.வேணி-கொழும்பு-15.

## கவிதைப் போட்டி இல.244



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதை களை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 21.02.1998

முகவரி:
கவிதைப் போட்டி இல.244,
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அன்புமிக்க என் அன்பின் முரசே!.



நீ தாங்கி வரும் அனைத்துக் கதைகளும் சூப்பர். அதில் இனிய தொடரான 'மேக்கப் புன்னகை', 'இனி என் முறை', 'பூலான் தேவி' ஆகியவை அசத்துகின்றன. இவற்றைச் சுமந்து வரும் முரசுக்கு வாழ்த்துக்கள்.

ப.சச்சுதா,
மட்/சத்துருக்கொண்டான்.

**காரம்**

'மண்ணாகி விட்ட வாழ்க்கையும் பொன் விழக் கொண்டாட்டங்களும்' காரமாக அமைந்திருக்கிறது. 'வாரிசை வரவேற்பதில் போட்டி.' எதற்குப் போட்டி போடுவது என்றே (எம்) பிரதிநிதிகளுக்குத் தெரிய வில்லை. 'கண்டியில் நுழைந்த குண்டு லொறி' எதிர்க்கட்சிக்கு மெல்லக் கிடைத்த 'அல்வா'தான்.

செல்வி ச.சோமநாதன், கிழக்குப் பல்கலைக் கழகம்.

●●

அன்பின் முரசுக்கு!

நீர் தாங்கி வரும் அனைத்தும் என் மனதைக் கவர்ந்தன. அதில் இனிய தொடரான 'மேக்கப் புன்னகை.' 'இனி என் முறை' ஆகிய இரு தொடர்களும் என்னை அசத்துகின்றன. அவற்றைத் தாங்கி வரும் முரசுக்கு நன்றிகள்.

செல்வி கந்தசாமி ரேணு, வவுனியா.

●●

அன்பின் முரசுக்கு!

பட்டுக்கோட்டை பிரபாகரும், பாலகுமாரனும் வாராவாரம் எங்களை 'சஸ்பென்ஸின்' நுனிக்கே இட்டுச் செல்கின்றார்கள் என்றால், மறுபுறம் அதிரடி அய்யாத்துரையார் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து விடுகிறார்- நாட்டு நடப்புக்களை சுருக்கமாக கூறி!

செல்வி சிவகுரு சசிகலா, தெமோதரை.

●●

இனிய தினமுரசே! நீ அமுதமாய்த் தரும் ஆக்கங்கள் அனைத்தும் வெகு பிரமாதம்! பூலான் தேவியின் தொடர் கதி கலங்க வைக்கிறது. ஏனைய அனைத்தும் அபாரம்.

எம்.எம்.இல்யாஸ், சாய்ந்தமருது-06.

**அறிவித்தல்**

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

## இதுதான் மன நிலை!

தலதா குண்டு வெடிப்பு தொடர்பாக 'முரசு' தெரிவித்த கருத்துக்கள் நன்று. சுதந்திரதினத்தை மதம் ஒன்றின் கலாசாரத்துடன் பிணைத்துக் காட்ட முற்பட்டமை முதல் தவறு. அது ஒன்றே போதும்- இன்றைய அரசாங்கமும் தமிழ் பேசும் மக்கள் தொடர்பாக எத்தகைய மனநிலையைக் கொண்டிருக்கிறது என்பதை புலப்படுத்த!

பி.சரவணபவன், கண்டி.

## காண்பிக்கவில்லை

அன்பு முரசே! நீ சரியாகச் சுட்டிக்காட்டியது போல, கண்டியில் இந்துக் கோயில் தாக்கப்பட்டதையோ, தேர் எரிக்கப்பட்டதையோ இன்றுவரை அரச தொலைக்காட்சி சுமரா காண்பிக்கத் தவறிவிட்டது. இனவிரோதத்தையும், பக்கச் சார்பையுமே அரச செய்தி ஊடகங்கள் பிரதிபலிக்கின்றன. இது ஐக்கிய இலங்கையின் இலட்சணமா?

ஆர்.ஜெயதேவன், கொழும்பு-09.

## கொப்பியும் அடித்து...

முரசே! இனிய முரசே!

உனது கருத்துக்களும், கணிப்புக்களும் உண்மையாவது கண்டு சகிக்க முடியாதவர்கள்தான் சேறு பூசுவர். அவர்கள் யார் என்பதை நாம் அறிவோம். முரசின் பாணியிலேயே எழுத முயன்று தோற்றுப் போனவர்களும் இருக்கின்றனர். முரசைப் பார்த்து 'சுயபிச்சான் கொப்பி' வேலை செய்பவர்களும் முரசைக் கண்டு பொறாமைப்படுவதும் நம் பகுதியில் கண்டோம். இவை யெல்லாம் 'முரசு' பெற்றுள்ள வளர்ச்சியின் அத்தாட்சிகளே!.

க.கனகசிங்கம், மட்டக்களப்பு.

## அனுமதி இல்லையே...

'மண்ணாகிவிட்ட வாழ்வும், பொன்விழாக் கொண்டாட்டங்களும்' அலசல் நெத்தியடி. இளவரசர் சாள்ஸ் வருகைக்கு நக்கீரன் கொடுத்ததும் அவ்வாறே! சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாண சபையினரால் கொண்டுவரப்பட்ட அலங்கார ஊர்திக்கும் அனுமதி இல்லையாமே! சுதந்திர தினம் யாருக்கு? என்பது புரிகிறதல்லவா?

இ.நந்தகுமார், திருமலை.

●●

அன்பு முரசுக்கு!

கண்ணதாசனின் ஆக்கங்களில் தலையாயவற்றைத் தேடித்தரும் முயற்சிக்குப் பாராட்டுக்கள். மகாத்மா காந்தியின் சத்திய சோதனையிலும் சுவாரசியமான பகுதியைத் திரட்டித் தந்திருந்தாய். புதிதாக இடம் பெறும் உலகப் புகழ்பெற்ற படங்கள் பிரமாதம்.

செ.யோகேஸ்வரி, வவுனியா.

## பெரிய கோடு

முரசே! யாழ் மாவட்டத் தேர்தல் உனது கருத்துக்களும் எமது கருத்துக்களும் ஒத்துப் போயின. தேர்தல் முடிவுகள் உனக்கு அதனை புரிய வைத்திருக்கும் அல்லவா? எனது அம்மா மட்டும்தான் வாக்களிக்கச் சென்றிருந்தார். சீட்டு முழுக்க பெரிய கோடாகக் கீறிவிட்டு வரச்சொல்லி அனுப்பினேன். அப்படியே செய்துவிட்டு வந்திருந்தார். (எமது பகுதி நகரசபையில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் செல்லாதவையாகும்).

க.ரதன், சாவகச்சேரி.

## ஸ்கோர்கள்

'எக்ஸ்ரே ரிப்போர்ட்' பிரமாதத்திலும் பிரமாதம். பொய்யான பிரசாரங்களையும், களநிலவர ஸ்கோர் களையும் அப்படியே வெளியிடாமல், அதன் உண்மை, பொய்யையும் சுட்டிக் காட்டும் முரசின் பாணி காலத்தின் தேவை. விருப்பப்படியெல்லாம் 'ஸ்கோர்' சொல்கிறார்கள்.

இ.நித்தியானந்தம், மன்னார்.

அன்பின் முரசே!

கண்டி தலதா மாளிகை தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தவர்கள் இந்து ஆலய தாக்குதலை கண்டிக்க வில்லை என்பது வேதனைக்குரியதும் அதே வேளை வேடிக்கையாகவும் உள்ளது. சில தமிழ்க் கட்சிகள்கூட கண்டிக்கவில்லை என்பதை நீ சுட்டிக் காட்டியது சம்பந்தப்பட்டவர்களிற்கு சாட்டை அடிபோல் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

என் அபிமான முரசே! உரிய நேரத்தில் நியாயமானதை எடுத்துக் காட்டும் உனக்கு என் பாராட்டுக்கள்.

செல்வி ந.ஜினோஜிகா, காரைதீவு-03.

●●

என் இனிய முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் 'காதிலை பூ கந்தசாமி', 'சிந்தியாவின் கேள்வி-பதில்', 'இலக்கிய நயம்' அனைத்தும் சூப்பர். மேலும் உனது ஆக்கங்கள் சிறந்த முறையில் வெளியாவதற்கு நன்றிகள்.

எ.அஜந்தா, வவுனியா.

●●

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட
சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.


www.padippakam.com

www.padippakam.com

# பலமுனைகளில் படை நடவடிக்கை
## புலிகளின் அணிகளைத் திசைதிருப்பும் திட்டம்?

பரந்தன்- கிளிநொச்சி சமரில் புலிகள் தமது மரபுப் போர் பலத்தை நிரூபித்துள்ளனர். பரந்த நகரப் பகுதியில் நிலைகொண்ட அரச துருப்புக்களை பின்வங்கச் செய்துள்ளதுடன், அத் துருப்புக்களுடன் சண்டையிட்டும் வருகின்றனர். இவ்வாறு இராணுவ விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் இருந்து புலிகளின் அணிகளை திசை திருப்ப ஜயசிக்குறுய் படைகளும் நடவடிக்கைகளில் இறங்கின.

புலிகளின் பெரும் பலம் கிளிநொச்சியில் குவிக்கப்பட்டிருந்தபோதுகூட வவுனியா-யாழ் சாலையில் ஜயசிக்குறுய் படைகளால் முன்னேற முடியவில்லை. முன்னேற எடுக்கப்பட்ட முயற்சி புலிகளின் பதிற் தாக்குதல் காரணமாக நிறுத்தப்பட்டது.

ஒலுமடுப்பகுதியில் இருந்து மாங்குளம் நோக்கி முன்னேறுவதுபோல படையினர் எடுத்த நடவடிக்கையும் பயனளிக்கவில்லை.

பரந்தன்-கிளிநொச்சிப் போர்முனையில் பத்தாயிரம் வரையான 'சத்ஜய' துருப்புக்களையும், மறுபுறம் 20 ஆயிரம் வரையான 'ஜயசிக்குறுய்' படையினரையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையில் புலிகள் உள்ளனர்.

கிளிநொச்சி சமரில் ஈடுபடும்போது 'ஜயசிக்குறுய்' படைகள் முன்னேற முற்படலாம் என்று கருதி மோட்டார் தாக்குதல் அணிகளை அங்கு போதியளவு நிறுத்தி உள்ளனராம் புலிகள்.

### பார்வையிட்டனர்

கிளிநொச்சி நகரில் புகுந்தவுடன் வன்னியில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள கிளிநொச்சி நகர மக்களை அழைத்து அவர்களது வீடுகளைப் பார்வையிட புலிகள் அனுமதித்ததாகத் தெரிகிறது.

கிளிநொச்சி நகரை தொடர்ந்து தக்க வைத்தே தீரவேண்டும் என்பது புலிகளின் எண்ணமல்ல என்பதையே அந்த நடவடிக்கை உணர்த்துகிறது. இல்லாவிட்டால் அப்பகுதி மக்களை அவசரமாக அழைத்துக் காண்பித்திருக்க மாட்டார்கள்

வீடுகளைப் பார்வையிட்ட மக்களில் சிலர் அங்கு மீதமிருந்த தமது பொருட்களை எடுத்துச் சென்றுள்ளனர் எனவும் அறியப்படுகிறது.

"பெப்ரவரி 04ல் கிளிநொச்சியை பிடித்து நாம் நினைத்ததை சாதித்துவிட்டோம். தொடர்ந்து படைகளுக்கு எவ்வளவு இழப்பை ஏற்படுத்த முடியுமோ அதனைச் செய்வோம்" என்று புலிகளின் தளபதிகள் அங்கு சென்ற மக்களிடம் கூறியதாகத் தெரிகிறது.

கிளிநொச்சியில் புலிகளின் எதிர்ப்பை முறியடிக்கும் விதமாக, வன்னியில் ஜயசிக்குறுய் படைகளை முழுவேகத்தில் முடுக்கிவிட படை உயர்பீடம் திட்டமிடக்கூடும்.

கொழும்பில் சுதந்திரதின பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட படையினரில் பெரும் பகுதியை வன்னிக்கு அனுப்புவது மூலம் 'ஜயசிக்குறுய்' படைகளை பலப்படுத்த துரித முயற்சிகள் நடப்பதாகத் தெரிகிறது.

ஜயசிக்குறுய் படைகள் பல முனைகளில் இருந்து முன்னேறத் தொடங்கினால், அவற்றை தடுத்து நிறுத்த கிளிநொச்சியில் உள்ள புலிகளின் அணிகளில் பெரும் பகுதி திருப்பி அழைக்கப்படும் என்று படை அதிகாரிகள் சிலர் நினைக்கின்றனர்.

கிளிநொச்சியை பிடிப்பது மட்டுமல்ல, பிடித்து நிலைகொள்ளவும் புலிகளின் அணிகளது கவனம் திசை திருப்பப்படவேண்டும் என்று கருதுகின்றனராம்.

கிளிநொச்சியில் படையினர் பயன்படுத்திய நன்கு அரண் செய்யப்பட்ட காப்பரண்கள் புலிகளின் கையில் சென்றமையும் படையினருக்கு பெரும் தடையாகியதாம்.

### 14 பஸ்களில்

பரந்தன்- கிளிநொச்சி சமரில் படையினர் முன்னூறுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். அதில் பெரும்பாலானோர் படு காயமடைந்தனர் என்று கொழும்பு ஆங்கில இதழ் ஒன்று 08.2.98ல் தெரிவித்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தருவிக்கப்பட்ட 14 பஸ்களில் காயமடைந்தவர்கள் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

தமது தரப்பில் பலியானோர் தொகை தொடர்பாக உத்தியோகபூர்வமாக கூறுவதற்கு படை அதிகாரிகள் எவரும் முன்வரவில்லை. அதிக இழப்புக்கள் ஏற்படாமல் இருந்திருந்தால், ஊகங்களாக வெளியான எண்ணிக்கைகளை உடனடியாக மறுத்திருப்பர். ■

# விமானப் படைத் தளபதிதான் இலக்கு
## மோட்டார் சைக்கிளில் வந்தார்

கொம்பனிவீதியில் பலியான கரும்புலி விமானப்படைத் தளபதியை குறிவைத்தே அனுப்பப்பட்டதாக சில தகவல்கள் கூறுகின்றன.

இலங்கை விமானப் படையினரின் தாக்குதல்கள் தொடர்பாக புலிகள் கடும் புகார்கள் கூறிவருவது தெரிந்ததே.

முன்னர், கடற்படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக புலிகள் கடும் புகார்கள் கூறிவந்தனர். அதன் பின்னரே கடற்படைத் தளபதி கிளன்ஸி பெர்ணான்டோ கொழும்பில் கரும்புலித் தாக்குதலில் பலியானார்.

விமானப்படை தளபதியின் வாகனத் தொடர் நடுவே பாய்ந்து தன்னை வெடிக்க வைப்பதே கரும்புலியின் திட்டமாக இருந்தது. யாழ்ப்பாணத்தில் அமைச்சர் நிமால் டி சில்வாமீதும் அவ்வாறான தாக்குதல் முயற்சிதான் நடந்திருந்தது.

விமானப்படை தலைமையகத்திற்கு விமானப்படைத் தளபதி வந்து செல்லும் நேரத்தை பலநாட்கள் நோட்டம் பார்த்தே தாக்குதல் திட்டமிடப்பட்டிருக்கலாம்.

தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த இடத்திற்கு கரும்புலி வந்து சேருவதற்கு முன்னரே விமானப்படைத் தளபதி சென்றுவிட்டதாகத் தெரிகிறது.

இளைஞர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் கரும்புலியை ஏற்றிவந்தார் என்று சில தகவல்கள் கூறுகின்றன.

### காத்திருந்த இளைஞர்

தாக்குதலுக்கு குறி சரியாக கிடைக்காவிட்டால், கரும்புலியை ஏற்றிச் செல்வதற்காக சோதனை அரணுக்கு அப்பால் உள்ள பகுதி ஒன்றில் மோட்டார் சைக்கிளில் அந்த இளைஞர் காத்திருந்து இருக்கலாம். அதனால்தான் சோதனை அரணை நடந்து கடந்துசெல்ல கரும்புலி எத்தனித்தார்.

இல்லையெனில் பஸ் ஒன்றில் ஏறிச் சென்றிருக்கலாம்.

கரும்புலித் தாக்குதல் நடைபெறும்போது அருகில் நின்றால் பாதிக்கப்பட நேரலாம். அதுதவிர தாக்குதலின் பின்னர் சோதனை அரண்களை தாண்டிச் செல்லவும் முடியாதிருக்கலாம் என்பதாலேயே கரும்புலியை ஏற்றிவந்த மோட்டார் சைக்கிள் இளைஞர் சோதனை அரணை தாண்டிய பகுதியில் காத்திருந்திருக்க வேண்டும் என்று நம்பப்படுகிறது.

குறி சரியாக அமையாவிட்டால் திரும்பிச் சென்றுவிட்டு மறுநாள் வருவதுதான் கரும்புலியின் திட்டமாக இருந்துள்ளது. அதனால்தான் அடையாள அட்டை, பொலிஸ் பதிவுத் துண்டு என்பவற்றை கொண்டு சென்றுள்ளார்.

வீதிச் சோதனை அரண்களில் உடல் பரிசோதனை நடைபெறுவது அரிதானதாகும். சந்தேகம் எற்பட்டால் மட்டுமே உடல் சோதனை நடப்பதுண்டு.

### சந்தேகம்

பெண் படை சிப்பாய்க்கு பெண் கரும்புலிமீது சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. குண்டு உடை அணிந்திருந்தமையால் இயல்பான நடையாக இல்லாமல் இருந்தமை, முகத்தில் தென்பட்ட கலவர உணர்ச்சிகள் போன்றவை சந்தேகத்தை கொடுத்தன. அதனால் உடல் பரிசோதனைக்காக மண்மூட்டைப் பக்கம் அழைத்து சென்றார். மாட்டுப்படப் போகிறோம் என்று தெரிந்ததும் கரும்புலி தன்னை வெடிக்க வைத்திருக்கிறார்.

கையில் சூட்கேஸில் இருந்த குண்டா, உடலில் கட்டிய குண்டா வெடித்தது? என்றும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. உடல் இடுப்புப் பகுதியுடன் துண்டாகியுள்ளமை உடலில் கட்டியிருந்த குண்டுதான் வெடித்தது என்பதை உறுதிப்படுத்துகிறது. ■

# தொழிலாளர் போராட்டம்
## மலையகத்தில் எழுச்சி

சம்பள உயர்வு கோரிக்கையை முன்வைத்து போராடும் தோட்டத் தொழிலாளர்களின் எழுச்சியும், ஒற்றுமையும் நாடெங்கும் வியப்பாக நோக்கப்படுகிறது.

அட்டனில் தோட்டத் தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தொழிலாளர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சங்கங்கள் ஒன்றுபட்டு நிற்கத் தவறுவதும், அரசாங்கம் மற்றும் தோட்ட நிர்வாகங்களின் வாக்குறுதிகளை நம்பி ஏமாறுவதுமே இதுவரை காலமும் நடந்து வந்திருக்கிறது.

அதனால்தான் சம்பள உயர்வு கோரிக்கையை அலட்சியப்படுத்தியதுடன், பொலிசாரை தூண்டிவிட்டு தாக்குதலும் நடத்தப்பட்டது என்று தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

ஆரம்பத்திலேயே அரசாங்கம் தலையிட்டு தொழிலாளர் பக்கம் நின்று வாதிடத் தவறிவிட்டது. விட்டுப் பிடிக்கும் அணுகுமுறையையே கையாண்டது என்றும் அந்தப் பிரமுகர் கவலை தெரிவித்தார். ■

# பனாகொடை மகேஸ்வரன் கைது!
## சென்னை சிறையில் அடைப்பு!

தமிழ் ஈழ இராணுவம் என்னும் இயக்கத்தின் தலைவராக இருந்தவர் பனாகொடை மகேஸ்வரன். பனாகொடை சிறையில் இருந்து தப்பிச் சென்றதால் பனாகொடை மகேஸ்வரன் என்று அழைக்கப்பட்டார்.

1984ம் ஆண்டு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக மகேஸ்வரன் தமிழக பொலிசாரால் கைதானார். மகேஸ்வரனால் தயாரிக்கப்பட்டு, கொழும்பு விமான நிலையத்தில் வெடிக்கக்கூடியதாக விமானத்தில் ஏற்றப்படவிருந்த குண்டுதான் வெடித்தது. இதில் 50 பேர்வரை பலியாகினர்.

இந்த வழக்கில் பிணையில் வந்த மகேஸ்வரன் பின்னர் தலைமறைவானார். தமிழ் ஈழ இராணுவம் இயக்கமும் புலிகளால் தடை செய்யப்பட்டது. அதன்பின்னர் மகேஸ்வரன் எங்கே இருக்கிறார் என்பது தெரியாமல் இருந்தது. தமிழ் நாட்டில்தான் மகேஸ்வரன் தங்கி இருந்தார். நம்பகமான சிலருக்கு மட்டுமே அவரது இருப்பிடம் தெரிந்திருந்தது.

மகேஸ்வரனின் நண்பர்களில் யாரோ ஒருவர் கொடுத்த தகவலின் பேரில்தான் அவரது இருப்பிடத்தை பொலிசார் கண்டறிந்தனர். சென்னை பழவந்தாங்கல் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்தே கைது செய்யப்பட்டார்.

இதற்கிடையே இன்னொரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது. 12.03.96 அன்று இரண்டு இலங்கைத் தமிழ் இளைஞர்களை கொலை செய்து எரித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சைமன் என்னும் இன்னொரு இலங்கைத் தமிழ் இளைஞரும் மகேஸ்வரனுடன் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

# பொது நிர்வாக அமைச்சில் தமிழ் மொழி புறக்கணிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

அரசாங்க அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு வருடந்தோறும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நினைவூட்டத் தினப் பதிவேடுகள் CALL UP DIARY தமிழ் சிங்கள மொழிகளில் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டு வருவது வழக்கமாகும். ஆனால் இம்முறை வழங்கப்பட்டுள்ள தினப்பதிவேட்டில் தமிழ் மொழி இருந்த இடம் தெரியாமல் மறைந்துள்ளது. அவை தனிச் சிங்களத்தில் தயாரிக்கப்பட்டு நாடெங்கிலுமுள்ள தமிழ் மொழியில் கருமமாற்றும் கச்சேரிகள், பிரதேச செயலகங்கள் மற்றுமுள்ள அரசாங்கக் காரியாலயங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அந்தத் தினப் பதிவேட்டின் சகல விபரங்களும் தனிச் சிங்களத்திலேயே உள்ளன.

தமிழ் மொழிக்கு அரச கரும மொழி அந்தஸ்து எனும் அரசின் அமுலாக்கம் என்னவாயிற்று? இருந்தும் இல்லாமல் பறிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது என்று விசனப்படுகிறார்கள் நோக்காளர்கள்.

அரச கரும மொழி அமுலாக்கத்திற்கான அதிகாரிகள் வேறெங்கோ பார்த்துக் கொண்டு இருந்ததையும் இல்லாமற் செய்து கொண்டிருக்கிறார்களா என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது. இந்தத் தினப்பதிவேடுகள் அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப் பெற்றவை.

இவ்விடயம் குறித்துப் பிரதேச செயலாளர் ஒருவரிடம் வினவியபோது: "வடக்கு கிழக்கிலுள்ள பிரதேச செயலகங்களுக்கு எத்தனை தினப்பதிவேடுகள் தேவை என்ற விபரங்கள் மாத்திரம் திரட்டப்படுகிறது. வேறெந்த விபரங்களையும் அவர்கள் கேட்பதில்லை" என்று அவர் தெரிவித்தார். ■

# கூட்டறிக்கை கோரிக்கை–தேவானந்தா மறுப்பு!

ஐ.தே.கட்சிக்கு எதிராக தமிழ்க் கட்சிகளை தூண்டி அறிக்கைவிடச் செய்வதில் கூட்டணிப் பிரமுகர் நீலன் திருச்செல்வம் முன்னணியில் நின்றுள்ளார்.

பாராளுமன்ற அவசரகால சட்ட நீடிப்புக்காக 06.02.98 அன்று கூடியது. அங்கு இ.தொ.கா, ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய கட்சித் தலைவர்களைச் சந்தித்து கூட்டறிக்கையில் கையொப்பம் இடுமாறு நீலன் திருச்செல்வம் பா.உ வேண்டுகோள் விடுத்தாராம்.

ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா மட்டும் மறுப்புத் தெரிவித்தாராம். பொதுஜன முன்னணி தமிழ்க் கட்சிகள் கூறிய யோசனைகளை நிராகரித்துள்ளது. முதலில் பொதுஜன முன்னணி நாம் ஏற்கக் கூடிய தீர்வை முன்வைக்கட்டும். அதன் பின்னர் எதிர்க்கட்சிக்கு எதிராக கூட்டறிக்கை மட்டுமல்ல, போராட்டம் நடத்தினாலும் வருகிறேன் என்று கூறினாராம் டக்ளஸ் தேவானந்தா.

அதன்பின்னரே முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா., புளொட் ஆகிய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகளும் கூட்டணியும் இணைந்து அறிக்கை விட்டிருந்தனர்.

இந்தக் கூட்டறிக்கைக்கு அரசாங்க வெகுஜனத் செய்தி தொடர்பு சாதனங்கள் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருந்தன.

ஐ.தே.கட்சிதான் தீர்வுக்கு தடையாக உள்ளது என்று வெளியுலகுக்கு காண்பித்து தீர்வு முயற்சிகளின் இழுத்தடிப்பை நியாயப்படுத்த முயல்கிறது அரசாங்கம் என்று அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதா இல்லையா என்பதில் கருத்துக் கணிப்பு நடந்தே தீரும். அவ்விடயத்தில் தமிழ்க் கட்சிகள் கூறுவதை ஏற்கமுடியாது என்று நீதியமைச்சர் பீரிஸ் கூறியிருந்தார். அப்போது ஏன் தமிழ்க்கட்சிகள் கிளர்ந்தெழுந்து இப்படிக் கூட்டறிக்கை விடப்படவில்லை? என்றும் அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# யாழில் புலிகள் பலி! மணலாற்றில் படை பலி!!

யாழ்ப்பாணம் நீர்வேலியில் படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்று மறைந்திருந்தனர். படையினர் மறைந்திருப்பது தெரியாமல் அவ் வழியாக வந்த இரண்டு புலிகள் இயக்க உறுப்பினர்கள் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதேபோல தென்மராட்சியில் மீசாலையிலும் புலிகள் இரண்டுபேர் பலியாகினர். படையினரின் தேடுதல் வேட்டை ஒன்றின் போது வீடொன்றுக்குள் இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்களை முற்றுகையிட்டனர். தம்மிடமிருந்த கைக் குண்டுகளை வெடிக்க வைத்து இருவரும் பலியாகினர்.

வன்னியில் மணலாறுப் பகுதியில் ரோந்து சென்ற படையினர்மீது புலிகள் தாக்குதலில் நான்கு படையினர் பலியாகினர்.

07.02.98 அன்று நடைபெற்ற மேற்படி தாக்குதலில், ரி.56 ரக துப்பாக்கிகள் 04, ரவைக்கூடுகள்-12, எம்.டி குண்டுகள்-04, நடுத்தர ரவைகள்-368. ஆகிய கைப்பற்றப்பட்டதாக புலிகள் அறிவித்துள்ளனர். ■

# புளொட் உறுப்பினர் கொலை
## தப்பிச் சென்றார் மனைவி

மட்டக்களப்பு-ஏறாவூரைச் சேர்ந்த குழந்தைவேல் சந்திரகுமார் (முத்து) 22, என்றழைக்கப்படும் புளொட் இயக்கத்தின் நீண்ட கால உறுப்பினர் கடந்த 05.02.98 அன்று தனது வீட்டில்வைத்து கிரனேட் வீச்சால் கொல்லப்பட்டார்.

செங்கலடியிலுள்ள புளொட் முகாமிலிருந்தே இவர் இயங்கி வந்தார். இவர் கொல்லப்பட்டது தொடர்பாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. இனந்தெரியாதோரால் வீசப்பட்ட கைக்குண்டு வெடித்ததினாலேயே அவர் கொல்லப்பட்டார் என்று அப்போது கூறப்பட்டது. அவரது கையிலிருந்த கைக்குண்டு தவறுதலாகக் கழன்று விழுந்தே வெடித்தது என்று ஒரு புறமும், மறுபுறம் இவரது மனைவிதான் இவரது கையிலிருந்த கைக்குண்டை வெடிக்கவைத்ததாகவும் கூறப்படுகிறது.

இந்நபர் கொல்லப்பட்டதும் அவரது மனைவி புலி இயக்கத்தினரின் ஆளுகையிலுள்ள பகுதிக்குச் சென்று தலைமறைவாகி விட்டதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் சம்பவத்திற்கான சரியான காரணத்தை உறுதிப்படுத்த இது வரை இயலவில்லை. மரண விசாரணையில் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இவர் கொலை செய்யப்பட்டதற்கும் புலி இயக்கத்தினருக்கும் சம்பந்தமில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே பெரும்பான்மை இன ஊர்காவல் படை வீரரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் தங்களுக்கிடையில் இருந்து வந்த நீண்ட நாள் சர்ச்சை காரணமாக மோதிக்கொண்டனர். ஊர்காவல் படை வீரர் பொலிஸ்காரர்மீது கிரனேட்டை வீசினார். கிரனேட் வெடிக்கும் தறுவாயில் பொலிஸ்காரர் தப்பிக்கொண்டார்.

கைக்குண்டு வீசிய ஊர்காவல் படைவீரர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த 06.02.98 அன்று ஏறாவூரில் இடம்பெற்றது. ■

# 'தாக்குதல் நடத்த மாட்டோம்'
## புலிகள் கொடுத்த உறுதிமொழி?

இளவரசர் சாள்ஸ் இலங்கையில் நடைபெறும் சுதந்திரப் பொன்விழாவில் கலந்து கொள்வதற்கு முன்னர் அவர் கலந்து கொள்ளும் எந்த நிகழ்ச்சியிலும் எத்தகைய தாக்குதலையும் மேற்கொள்வதில்லை என்று புலிகளின் தலைமைப்பீடம் உத்தரவாதம் அளித்ததாகத் தெரிய வருகிறது.

புலிகளின் லண்டன் மாநகரிலுள்ள பிரதிநிதிகள் மூலம் வன்னியிலுள்ள புலிகளின் தலைவருக்கு தகவல் அனுப்பட்டதாம்.

இளவரசர் சாள்ஸின் எந்தவொரு நிகழ்ச்சியிலும் தமது இயக்கம் எத்தகைய தீங்கும் விளைவிக்க மாட்டாது, என்று புலிகளின் தலைமைப்பீடம் உறுதி கூறியிருக்கிறது.

பிரிட்டனின் உள்துறை அமைச்சின் உளவுப் பிரிவான எம்.15 எனும் அமைப்பே வன்னியிலுள்ள புலிகளின் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டதாகத் தெரிகிறது. இத்துறையைச் சார்ந்த உயர்தர அதிகாரத் தரப்பு இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

புலிகளின் உறுதிமொழி கிடைத்த பின்னரே, பக்கிங்ஹாம் மாளிகை இளவரசர் சாள்ஸின் இலங்கை விஜயத்தில் எத்தகைய மாற்றமும் இல்லை, என்று அறிவித்தது.

புலிகளின் தலைமைப் பீடத்திலிருந்து உத்தரவாதம் கிடைத்த போதும், பிரிட்டிஷ் பாதுகாப்புத் துறையினருக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டதாகத் தெரியவில்லை. புலிகளிடம் தற்கொலைப் படையினரும் இருப்பதனால், அவர்கள் எதையும் செய்யக்கூடும் என்ற அச்சம் எழவே செய்தது.

பிரிட்டிஷ் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த நிபுணர்கள் கொழும்பு வந்து ஜயவர்த்தனபுர கோட்டேயிலுள்ள பாராளுமன்ற முன்றலில் பலதரப்பட்ட முன்னேற்பாடுகளையும் கண்காணித்து திருப்தியடைந்த பின்னரே பக்கிங்ஹாம் மாளிகையும் பச்சைக் கொடி காட்டியது. இத்தகவல்களை கொழும்பு ஆங்கில வார இதழான 'வீக்கன்ட் எக்ஸ்பிரஸ்' வெளியிட்டுள்ளது. ■

# 4 மாதங்களாக நிவாரணம் இல்லை
## கூட்டுறவுச் சங்கங்கள் நிதி நெருக்கடியில்!

(மட்டக்களப்பு நிருபர்)

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து இன்று வரை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அகதிக் குடும்பங்களுக்குக் கிடைக்க வேண்டிய உலர் உணவு நிவாரணத்தை வழங்க முடியாதிருப்பதாகப் பிரதேச செயலகங்களும், கூட்டுறவுச் சங்கங்களும் தெரிவிக்கின்றன.

அகதிகளுக்கான உலர் உணவு நிவாரணம் மற்றும் சுபிட்ச (சமூர்த்தி)த் திட்ட உணவு முத்திரைகளுக்கு உணவுப் பொருட்கள் வழங்கியதின் பொருட்டு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல கூட்டுறவுச் சங்கங்களுக்கு பிரதேச செயலகங்கள் பல நூறு இலட்ச ரூபாய்களைச் செலுத்த வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகைகளை பிரதேச செயலகங்கள் வழங்காதுபோனால் கூட்டுறவுச் சங்கங்களை இழுத்து மூடவேண்டிய நிலையேற்படும் என்று கூட்டுறவுச் சங்க வட்டாரங்கள் கூறுகின்றன. நிதி முடக்கத்தினால் ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது பணியாளர்களுக்கு மாதாந்தச் சம்பளம் வழங்க முடியாத சிக்கல் ஏற்பட்டிருப்பதாக விசனம் தெரிக்கப்படுகின்றது.

பலமுறை அறிவித்துவிட்டு நடவடிக்கை எடுக்கும் வரை காத்திருக்கிறோம் என்கின்றனர். இந்த இழுபறியால் உலர் உணவு நிவாரணத்தை நம்பியிருந்த ஆயிரக்கணக்கான அகதிக் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. ■

# புலிகளின் தண்டனை!

இம்முறை பருவ மழை சீராக இருந்ததால் கிழக்குப் பகுதியில் நெற்செய்கை அமோக விளைச்சலைக் கண்டுள்ளது. புலி இயக்கத்தினரும் பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். எங்கும் ஏக காலத்தில் நெல் அறுவடை செய்ய வேண்டியுள்ளதால் கூலியாட்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இதனால் புலி இயக்கத்தினரும் தமது நெல் அறுவடையை மேற்கொள்ளவதற்காகப் புதிய உத்தியொன்றைக் கடைப்பிடிக்கின்றனர்.

சிறு சிறு குற்றமிழைத்ததற்காக தம்மால் தண்டிக்கப்படும் இயக்க அங்கத்தவர்களையும், பொதுமக்களையும் நெல் அறுவடை செய்வதில் ஈடுபடுத்துகின்றனராம்.



படிப்பகம்

## ஏட்டிக்குப் போட்டியான பிரசுரங்கள்!

கண்டியிலுள்ள ஸ்ரீ தலதா பௌத்த வழிபாட்டுத் தலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் எதிர்பார்த்திராத பல விவகாரங்கள் சூடுபிடித்துள்ளன. புலிகள் இயக்கத்தை அரசு உடனடியாகத் தடை செய்தது. சுதந்திரப் பொன்விழா நடைபெற பெரும் செலவு செய்து கோலாகல ஏற்பாடாகியிருந்த இடம் கண்டியிலிருந்து கொழும்புக்கு மாற்றியமைக்கப்பட்டது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகுவதாக அறிவித்தார்.

பௌத்த மக்களின் மனங்களைப் புண்படுத்திய ஸ்ரீ தலதா வழிபாட்டுத் தலத் தாக்குதலுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகளே காரணம். எனவே அதற்குப் பொறுப்பான பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த பதவி விலகவேண்டும் என்று ஒரு சாரார் கோஷமெழுப்பி வருகின்றனர்.

இதனைப் பிரதிபலித்து ஏட்டிக்குப் போட்டியான சுவரொட்டிகள் நாட்டின் சிங்களப் பகுதிகளெங்கும் ஒட்டப்பட்டுள்ளன. "யாழ் நகரைக் கைப்பற்றிய வெற்றி வீரன் அநுருத்த" என்று கவிதை வடிவில் அவரது வெற்றிப் புகழ் பாடப்பட்டுள்ளது. அதற்கருகிலே "ரணில் மீண்டும் ஒரு 83 ஜூலை இரத்தக் களரிக்குத் தூபமிடுகிறார்!" "அனுராதபுர மஹாபோதியில் படுகொலைகள் நடந்தபோது எந்த அரசு ஆட்சியிலிருந்தது? அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் பதவி விலகினாரா?" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சுவரொட்டிகளின் கீழே "பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கு இலாயக்கில்லாத அநுருத்தையே பதவிவிலகு!", "பொய் வாக்குறுதி தந்த அரசே பதவி விலகு!" என்று அச்சிடப்பட்டுள்ள பெரிய அளவான சுவரொட்டிகளில் காணப்படுகிறது.

பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கும்போதே இத்தகைய சுவரொட்டிகள் ஒட்டப்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது. போக்குவரத்து பஸ்களிலும் அரச ஆதரவாளர்கள் சுவரொட்டிகளை ஒட்டுவதைப் பொலிஸார் அனுமதித்துக் கொண்டு நின்றனர்.

## கசிப்பு வேட்டை
## நீதிபதி தீவிரம்

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கசிப்புத் தொழிலில் ஈடுபட்டு வருபவர்களைத் தேடி வலை விரிக்கப்பட்டுள்ளது. இதற்கான சகல நடவடிக்கைகளையும் மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேற்கொண்டுள்ளார்.

இப் பகுதிகளில் கடந்த பல ஆண்டுகளாக ஒரு குடிசைக் கைத்தொழிலாகவே கசிப்பு காய்ச்சும் தொழில் இடம்பெற்று வருகிறது. சனிவிலேஜ், சின்னக்கரிசல், தலைமன்னாரில் இருந்து பேசாலைக்கு இடைப்பட்ட பகுதி போன்றவற்றில் நீண்டகாலமாக இத் தொழில் இடம் பெற்று வருகிறது.

இத் தொழிலில் ஈடுபடுவோரை இனம் கண்டு அவர்களின் பெயர்ப்பட்டியல், சம்பந்தப்பட்ட கிராம அதிகாரிகளின் மூலம் பெறப்பட்டுள்ளது. தற்போது குறிப்பிட்ட சிலருக்கு நீதி மன்ற நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

தற்போதைய மாவட்ட நீதிபதி கசிப்பு வேட்டையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளதால் கசிப்பு முதலாளிமார்கள் கடும் கலக்கத்தில் இருக்கின்றனர். 'குடி' மக்களும் கவலையடைந்துள்ளனர்.

கசிப்பு ஒழிப்பில் தீவிரம் காட்டிய தலைமன்னார்ப் பகுதி கிராம அதிகாரி ஒருவருக்கு அப்பகுதி 'குடி' மக்களால் கொலை மிரட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் பெயர் விபரங்களை சம்பந்தப்பட்ட படை முகாம் அதிகாரிகள் மாவட்ட நீதி மன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நீதிபதியினால் பணிப்புரை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இவர்களின் பெயர் விபரங்கள் தற்போது நீதிமன்ற விளம்பரப் பலகையில் பார்வைக்காக போடப்பட்டுள்ளன.

## பொன்விழா தினத்தில் மட்டக்களப்பு இருள் மயம்!

சுதந்திரப் பொன்விழா மலர்ந்த நள்ளிரவுக்குச் சற்றுப்பிந்தி மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளைப் புலிகள் இயக்கத்தினர் இருளில் மூழ்கச் செய்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மின் சாரத்தை வழங்கிச் செல்லும் அம்பாறை- இங்கினியாகலை மற்றும் ஹபறணை ஊடாக இரு பிரதான மின் விநியோக மார்க்கங்களிலுமுள்ள மின்சாரக் கம்பங்களைப் புலிகள் இயக்கத்தினர் சாய்த்து மின் விநியோகத்தைத் தடைப்படுத்தினர்.

சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சிகளைத் தடைப்படுத்தும் நோக்கத்தின் ஒரு பகுதியாகவே புலிகள் இயக்கத்தினர் இக்காரியத்தில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது. மட்டக்களப்பு வந்தாறுமூலையில் 33 ஆயிரம் வோல்டேஜ் மின்வலுவைத் தாங்கிச் செல்லும் 4 மின் கம்பங்களையும் கல்முனை- போரதீவின் 3 மின் கம்பங்களையும் புலிகள் இயக்கத்தினர் சாய்த்துள்ளனர். நள்ளிரவு 12.40 மணிக்கு இச்சம்பவங்கள் இடம் பெற்றன.

இதேவேளை கடந்த வாரம் மேலும் 4 மின்மாற்றிகளைப் புலிகள் இயக்கத்தினர் கிழக்கின் வெவ்வேறு இடங்களில் தகர்த்துள்ளனர். கடந்த 01.02.98 அன்று நள்ளிரவு மட்டக்களப்பு-புதிய காத்தான்குடியில் இரு மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன. இவற்றில் நூறானியாப் பகுதியில் இருந்த மின் மாற்றியொன்று ஏற்கெனவே மூன்று மாதங்களுக்கு முன்னரும் புலிகள் இயக்கத்தினரால் தகர்க்கப்பட்டு மீண்டும் பொருத்தப்பட்டதாகும். அக்கரைப்பற்று தமிழ்ப் பகுதியில் இருந்த இரண்டு மின் மாற்றிகளையும் கடந்த 31.01.98 அன்றிரவு புலிகள் இயக்கத்தினர் தகர்த்துள்ளனர். இதன் காரணமாக மின்மாற்றி தகர்க்கப்பட்ட பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

## புதிதாக ஆசிரியர் நியமனம்

மன்னார் மாவட்டத்தில் தற்போது நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை ஓரளவுக்கேனும் நிவர்த்திக்குமுகமாக புதிதாக 108 பேருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த 108 பேரில், 100 பேர் இதுவரை தத்தம் பதவிகளை ஏற்றுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் மூன்றுவார காலம் சேவைக் கால முன் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

இதில் வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி என வகைப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் மாவட்ட கல்வித்திணைக்கள முகாமைத்துவ நிலையம், மன்னார்/அல் அஸ்ஹறார் ம.வி. ஆகிய இடங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

இவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆலோசனைகள் மற்றும், கற்றல், கற்பித்தல் தொடர்பான சகல விளக்கங்களையும் திறமை வாய்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள், ஆகியோர் வழங்கி வருகின்றனர்.

ஆரம்பக் கல்வித் துறைக்கே கூடுதலான ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர். இவர்களுக்கான சகல பயிற்சிநெறிகளையும் ஆரம்பக் கல்வித்துறை உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.அ. அந்தோனிமுத்து மிகவும் சிறப்பான முறையில் நெறிப்படுத்தி வருகிறார்.

இந்த நூறு ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்குவதற்கான ஆரம்ப வைபவத்தில் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.சீ. அப்துல் ஹக் தலைமையில் விஷேட வைபவம் ஒன்று நடைபெற்றது.

எதிர்வரும் 19.02.1998 அன்று கலை நிகழ்ச்சிகள் உட்பட பல சிறப்பு நிகழ்ச்சிகளுடன் இந்த ஆசிரியர்களுக்கு சான்றிதழும் நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் வைபவமும் நடைபெறவுள்ளன.

இவ் வைபவத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வைத்தியசாலைகளுக்கு அம்பியூலன்ஸ் வசதி

ஆசிய அபிவிருத்தி வங்கி பின்தங்கிய கிராமிய வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்காக 16 அம்பியூலன்ஸ் வண்டிகளைச் சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளது.

கிராமிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளை பெரியாஸ்பத்திரிகளுக்கும் போதனா வைத்தியசாலைகளுக்கும் உரிய வேளைக்கு எடுத்துச் செல்வதில் எதிர் நோக்கப்படும் போக்குவரத்துச் சிரமங்களை நீக்க இந்த உதவி பயனளிக்கும் என்று கருதப்படுகிறது.

கல்முனை, அம்பாறை, ஸ்பிரிங்வெளி, கொட்டகல, வறகாபொல, வெலிகம, பிபிலை, உடுகம, கெப்பிட்டிகொல்லாவ, அத்தன கடவல, இந்துருவ, தெயகம, ரன்ன, கொடக வெல, கிரிபனார ஆகிய பகுதி வைத்தியசாலைகளுக்கே இந்த அம்பியூலன்ஸ் வண்டிகள் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திரப் பொன் விழாவையொட்டியே இந்த அம்பியூலன்ஸ் வண்டிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பா.உக்கள் பாராமுகம் ஏன்?

மூதூர் பிரதேச செயலகப் பிரிவு 179.5 சதுரகிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டது. 42 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட இங்கு 52 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். சுமார் 80 சதுர கிலோமீட்டர் பரப்புள்ள மூதூர் கிழக்கு பிரதேசத்தில் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள்.

மூதூர் நகரின் எல்லையான பால நகரில் இருந்து சேனையூர், கட்டைபறிச்சான், கடற்கரைச்சேனை, சம்பூர், கூனித்தீவு, கணேசபுரம், கிரவல்குழி, பட்டாளிபுரம், நல்லூர், பள்ளிக்குடியிருப்பு சூடைக் குடா போன்ற கிராமங்களில் உள்ள வீதிகள் 1981ம் ஆண்டுக்குப்பின், இதுவரை இவ் வீதிகள் செப்பனிடப்படவில்லை. இதனால் குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கிறது. மழைக் காலத்தில் வீதிகள் குளம் போல் காட்சியளிக்கிறது. இதனால் சைக்கிள்கள் கூட ஓட முடியாத நிலைக்கு வீதிகள் காணப்படுகின்றன. இக் காட்சிகள் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்ணில் படவில்லையா?

மூதூர் கிழக்கு மக்கள் தாம் எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சனைகள் வெளிக்கொணரப்படுவதில்லை என்ற ஆதங்கத்துடனேயே வாழ்கிறார்கள்.

சேனையூர்- அ. அச்சுதன்.

விளம்பரப் பகுதி


### மளையாள மாந்திரிகம்





மளையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் ,கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திட்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோனாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA
UCHCHADA PEEDAM
162, KOTAHENA STREET,-
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831

---

### றெறாசோ ஷிப்ஸ் (TERRAZZO CHIPS)

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

றம்சன்ஸ்

443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

---



### கலை அலங்கார வகுப்புக்கள்

* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி

ஆரம்பம்: 28-02-98

FASNAZ BEAUTY SALON

142,டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை.
கொழும்பு-06.
தொலைபேசி: 589457

---

### மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்திமிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண் மகனாகிவிட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் அறிவித்தால் மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும், தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம். மட்டக்களப்பு விலாசத்து க்கு கடித தொடர்பு கொள்ளவும்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

கொழும்பில் பெப்ரவரி 22 முதல் 28 வரை

DR.P.ARUMUGAM
AHAMED TOURIST INN
BANG BANG BUILDING No. 10, Reclamation Road,
(entrance: Bankshall St, Opposits Renjanas) Colombo-11.
T.P. 436383, 436390.

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஓட்டமாவடியில் மார்ச் 4. 5ம் தினங்களில்
Dr. முகைதீன் டிஸ்பென்சேரி, ஓட்டமாவடி. T.P.065-57345

கல்முனையில் மார்ச் 7.8.9.10ம் தினங்களில்
T.M.M. பாமசியிலும் T.P.065-29329

வவுனியாவில் மார்ச் 14.15.16.17ம் தினங்களில்
வவுனியாவில் (2ம் குறு க்குத்தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, VANNI INN இல் சந்திக்கலாம். T.P.024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில் Dr.P.Arumugam
No.33. Tissa Weerasingam Sq.,
Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

---

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
### கல்வி நெறிகள்

* 90 Days Spoken English
* 90 Days Spoken Sinhala
* Method of Book-Keeping
* Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)

மேற்படி பாடநெறிகள் நேரிலும்/ தபால் மூலமும் நடைபெறுகின்றன வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமே அறிந்து கொள்ளலாம.
மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

விரும்பும் பாடநெறி:..........................
பெயர்:..........................
முகவரி..........................

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11. Tel: 434770, 074-718592

---

### சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரிகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

---

ஏ.எஸ். மொஹமட் மவாஹிம்
வழங்கும்

### வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் அனுபவமுள்ளவர். உங்கள் நம்பிக்கைக்கும், அன்புக்கும் பாத்திரமானவர். உங்கள் கனவை நனவாக்க அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்.

சவூதி அரேபியா, குவைத், டுபாய், கட்டார், ஜோர்தான், லெபனான், சிங்கப்பூர்.

* ஹவுஸ் மெயிட்
* ஹவுஸ் டிரைவர்
* ஹவுஸ் மெயிட்/ஹவுஸ் டிரைவர் (ஜோடி)
* ஹவுஸ் போய்
* குக்
* டெயிலர்

நிபந்தனைகளும், சலுகைகளும்

* இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்கு குறையாமல் பெறலாம்.
* தங்குமிட வசதி, வைத்திய வசதி என்பன இலவசம்.
* ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் திரும்பிவர விமான சீட்டு வழங்கப்படும்.
* ஏனைய சலுகைகள் அந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய வழங்கப்படும்.

சப் ஏஜன்டகளுக்கு விஷேட சன்மானங்கள் உண்டு

பாஸ்போட், அனுபவச்சான்றிதழ் பிரதிகள், பாஸ்போட் அளவிலான 4 புகைப்படங்கள் சகிதம் நேரடியாக வரவும்.

அரப் விங்ஸ் டிரவல்ஸ்
(Arab Wings Travels)

இல.20/14, புளொக் 8-10, சிமொன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு-10. (சைக்கள் பஸார் / சின்ன பள்ளி அருகில்)
தொலை: 074-715557 பெக்ஸ்: 074-715557, 446535

GRAYON

App No. AL / 1498 / Advt / 01 / 98


### நீத்தார் நினைவு

மலர்வு : 01.01.1964
உதிர்வு : 29.01.1989



நெடுந்தீவு மேற்கு
5ம் வட்டாரம்
தருமலிங்கம் குமாரநாதன்

ஒரு தாயின் உந்தியிலே
ஒன்பதின் மேல் மதி த்ங்கி
எழிலுதிரும் திருவுருவாய்
எம்மிடையே நீ உதித்தாய்!
அன்னை மடி தான் தவழ்ந்து
அவளூட்டும் பாலமுதை
இன்புற்றே பருகி நிதம்
அன்புருவாய் நீ வளர்ந்தாய்!
பல்கலையும் கற்றுணர்ந்து
பகலவன் போல் நீ வளர்ந்தாய்!
பருவ எழில் பூத்து இளந்
திருவுருவை எய்தி எம்முன்
பவனி வரும் வேளையிலே
பரிதவிக்க எமைவிட்டுப்
பறந்தோடி மறைந்தனையே
பாங்கிலுயர் பைந்தமிழே!
குமாரநாதன் எனுமெங்கள்
குணக்குன்றே உனை நினைந்து
குவலயம் உள்ள மட்டும்
குளமாகும் எம் கண்கள்!
என்றும் உன் நினைவுடன்
ஏங்கி நிற்கும் உற்றாரும் பெற்றாரும்
ஊராரும் உறவினரும்.



www.padippakam.com

www.padippakam.com

எக்ஸ்ரேரிப்போர்ட்

# களநிலவரமும் கதையளப்புகளும்

# சடலங்கள் போனது எங்கே?

பெப்ரவரி 03ம் திகதி கிளிநொச்சி புலிகளின் கையில் மறுபடி சென்றது. கரடிப் போக்கு வரை படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

கரடிப்போக்கில் இருந்து கிட்டத்தட்ட மூன்றுகிலோ மீட்டர் தூரத்தில் இருப்பது தான் கிளிநொச்சி நகர்.

கிளிநொச்சி நகரில் மத்திய கல்லூரி வரைதான் படையினர் நிலைகொண்டிருந்தனர்.

பரந்தன் சந்தியில் இருந்து கிளிநொச்சி நகர் ஆறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

**பெப்ரவரி 03ம் திகதிக்கு பின்னர் பரந்தன் சந்தியில் இருந்து கரடிப்போக்கு வரையான மூன்று கிலோமீட்டர் பகுதி படையினரிடமும், மீதி மூன்று கிலோ மீட்டர் புலிகளின் கையிலும் இருந்தது.**

கிளிநொச்சி நகரில் படையினர் நிலைகொண்டிருந்த முகாம் கட்டடங்கள் புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகருக்குள் புலிகளின் தாக்குதலை பாதுகாப்பான காப்பரண்களில் இருந்து எதிர்கொண்ட படையினர், பின்னர் புலிகளின் தாக்குதல் உக்கிரமானதும் காப்பரண்களை விட்டு பரந்தன் நோக்கி பின்வாங்கினர்.

ஆட்டிலெறி பீரங்கிகள், கவச வாகனங்கள் என்பவற்றை புலிகளின் கையில் செல்லாமல் தடுப்பதே படையினரின் பிரதான நோக்கமாக இருந்தது.

கிளிநொச்சி மையப்பகுதியை முற்றுகையிட்டு, மரணப்பொறிக்குள் தம்மைப் புலிகள் வீழ்த்துவதற்கு இடையே கனரக ஆயுதங்களுடனும், வாகனங்களுடனும் படையினர் பின்வாங்கினர்.

**அதனால் 130 எம்.எம்.ஆட்டிலெறிப் பீரங்கிகள், கவச வாகனங்கள் என்பவை புலிகளின் கையில் செல்லாமல் தடுக்கப் பட்டன.**

படையினர் விட்டுச் சென்ற காப்பரண்களை புலிகள் கைப்பற்றி, அங்கிருந்து படையினருக்கு எதிரான சமரில் ஈடுபடத் தொடங்கினர்.

ஒரு வருடகாலமாக கிளிநொச்சி நகரில் நிலைகொண்டிருந்த படையினர் நன்கு உறுதிவாய்ந்த காப்பரண்களை அமைத்திருந்தனர். புலிகளின் ஷெல் வீச்சுக்களில் இருந்து படையினர் தங்களைக் காத்துக் கொள்ளவும் அந்தக் காப்பரண்கள் பயன் பட்டன.

**அதே காப்பரண்கள் பெப்ரவரி 03ம் திகதிக்குப் பின்னர் புலிகள் தங்களை தற்காத்துக்கொண்டு சண்டையிட வசதியான காப்பரண்களாகின.**

பரந்தனில் இருந்து படையினர் நடத்திய ஷெல் தாக்குதல்கள், விமானப் படையினரின் தாக்குதல்கள் போன்றவற்றில் இருந்தும் படையினர் அமைத்திருந்த காப்பரண்கள் புலிகளைப் பாதுகாத்தன.

**ஆக, பெப்ரவரி 03ம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டில் வந்த கிளிநொச்சி நகரை இதனை எழுதிக்கொண்டிருக்கும் பெப்ரவரி 11ம் திகதிவரை படையினரால் மறுபடி கைப்பற்ற இயலவில்லை.**

எனினும், படைத்தரப்பு தனது பின்வாங்கலை நேரடியாக ஒத்துக் கொள்ளத் தயங்குகிறது. மறைமுகமாக சுற்றிவளைத்து விளக்கம் கூறப்படுகிறது.

'கிளிநொச்சி தென்பகுதி நோக்கி படைகள் முன்னேற்றம்' என்று கூறுவது கிளிநொச்சி நகரை மறுபடி கைப்பற்றும் முயற்சியைத்தான்.

**ஆனால் நேரடியாகக் கூறினால் கிளிநொச்சி நகர் புலிகளிடம் சென்றதையும், தாம் பின்வாங்கியதையும் ஒப்புக்கொண்டதாகிவிடும் என்பதால் கிளிநொச்சி தென் பகுதியில் சண்டை, கிளிநொச்சிப் பகுதியில் மோதல், கிளிநொச்சி சுற்றுப்புறத்தில் சண்டை என்று சொல்லிக் குழப்புகிறார்கள்.**

பெப்ரவரி 03ம் திகதியும் 04ம் திகதியும் கிளிநொச்சி சமர் தொடர்பாக அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் வாயே திறக்கவில்லை.

சுதந்திரதின விழாவுக்காக தலைநகருக்கு வந்திருந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் போர் அரங்குக்கும் இடையே இரும்புத்திரை ஒன்றை தொங்கவிடவே அரசாங்கம் விரும்பியது.

ஆனாலும், அரசின் இரும்புத்திரையையும் மீறி சுதந்திரமான செய்தி ஊடகங்கள் வாயிலாக கிளிநொச்சி சமர் பற்றிய செய்திகள் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு கிடைத்துக் கொண்டிருந்தது.

பெப்ரவரி 03ம் திகதியும் 04ம் திகதியும் கிளிநொச்சி சமர் தொடர்பாக அரசும், அதன் வெகுஜன தொடர்புச் சாதனங்களும் மௌனம் சாதித்தமை, களத்தில் ஏற்பட்ட மாபெரும் அதிர்ச்சியின் வெளிப்பாடுதான்.

**படையினரால் மட்டும் கிளிநொச்சி நகரை காப்பாற்றி புலிகளின் எதிர்ப்பை முறியடிக்க முடிந்திருந்தால், அரச செய்தி தொடர்பு சாதனங்களின் தலைப்புச் செய்தியாக அது மாறியிருக்கும்.**

**பரந்தன்–கிளிநொச்சி சமர் பெப்ரவரி 01 திகதி அதிகாலையில் ஆரம்பித்தது. புலிகளின் 218ற்கு மேற்பட்ட சடலங்களை கைப்பற்றியதாக அன்று மாலையே அரச தொடர்பு சாதனங்கள் அறிவித்திருந்தன.**

மறுநாள் செய்தியில் 200ற்கு மேற்பட்ட உடல்களை கைப்பற்றியதாக கூறினார்கள்.

பெப்ரவரி 03ம் திகதி செய்தியில் 150ற்கு மேற்பட்ட சடலங்கள் படையினரிடம் இருப்பதாக கூறினர்.

பெப்ரவரி 01ம் திகதி ஆரம்பித்த சமர் தொடர்ந்து கொண்டிருந்தது. கைப்பற்றியதாக சொன்ன சடலங்களின் எண்ணிக்கை நாள் தோறும் குறைந்து கொண்டிருந்ததுதான் வேடிக்கை.

முரசுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பிரகாரம், மொத்தம் 32 புலிகளின் சடலங்கள் தான் பெப்ரவரி 03ம் திகதிவரை படையினர் வசம் இருந்தன.

**அவற்றில் 12 சடலங்கள் பெண் புலிகளுடையவை. படையினரின் முன்னரங்க நிலை ஒன்றுக்குள் ஊடுருவிய 12 பேர் கொண்ட பெண் புலிகள் அணியொன்று படையினரிடம் இசகு பிசகாக மாட்டிக்கொண்டது. பதினொரு பெண் புலிகள் பலியாகினர். ஒரு பெண் புலி உயிருடன் கைதானதாக கூறப்படுகிறது. பெப்ரவரி முதலாம் திகதியன்று நடந்த சம்பவம் அது.**

பரந்தன் பகுதியில் நடைபெற்ற சண்டையின் பின்னரும் புலிகளின் சில உடல்கள் படையினரிடம் கிடைத்தன. கரும்புலிகளின் சிதைந்த உடல்களும் அவற்றில் அடக்கம்.

பரந்த பகுதியில் நடைபெற்ற மோதல் என்பதால், சண்டைக் களத்தில் இருந்து விலகும்போது புலிகளின் பார்வையில் படாத இடங்களில் கிடந்த உடல்கள்தான் அவை.

**படையினரின் தாக்குதல் காரணமாக புலிகள் தங்கள் உடல்களை கைவிட்டுச் சென்றதாக கூறமுடியாது.**

**ஏனெனில், தமது உறுப்பினர்களின் சடலங்களையும், காயப்பட்டவர்களையும் மட்டுமல்லாமல், படையினரின் 55 சடலங்களையும் புலிகள் எடுத்துச் சென்றுள்ளனர்.**

தம்மிடம் 55 சடலங்கள் இருப்பதாக அறிவித்த புலிகள் அவற்றில் சிதைந்தவை போக 41 சடலங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் ஒப்படைத்தனர்.

ஆனால் படையினர் இறுதிவரை புலிகளின் சடலங்களை ஒப்படைக்கவில்லை. 150–200 என்றெல்லாம் கணக்குக் கூறிவிட்டு 32 சடலங்களை மட்டும் ஒப்படைத்தால் தமது பிரசாரம் அடிபட்டுப்போய்விடும் என்று கருதித் தவிர்த்திருக்கலாம்.

அதுமட்டுமல்ல படையினர் தரப்பில் 24 பேர்தான் பலியாகினர் என்றே அரச செய்திகள் கூறிக்கொண்டுவந்தன. ஆனால் புலிகள் கைப்பற்றி ஒப்படைத்த சடலங்கள் மட்டும் 41. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் தாம் உடல்களை பொறுப்பேற்றுக் கொண்டதைப் பற்றிக்கூட அரச செய்தி ஊடகங்கள் மூச்சுக் காட்டவில்லை.


41 சடலங்களையும் வவுனியாவில் வைத்து படையினர் தீமூட்டியதாக சில செய்திகள் கூறுகின்றன. சாம்பல்கள் மட்டும் பொதி செய்யப்பட்டு அவர்களது குடும்பத்தினருக்கு அனுப்புவதற்காக வைக்கப்பட்டுள்ளதாம்.

**பெப்ரவரி 04ம் திகதிக்கு முன்னர் வவுனியாவில் இருந்து கிளிநொச்சிவரை தரைப்பாதை திறக்கப்படும் என்று சூளுரைத்த அரசாங்கத்திற்கு தங்கள் பலத்தை காண்பிப்பதுபோலவே புலிகள் பெப்ரவரி 03ம் திகதியன்று சடலங்களை கையளித்தனர்.**

புலிகள் சடலங்களை ஒப்படைத்தது பற்றியோ, கிளிநொச்சி நிலவரம் பற்றியோ மூச்சு விடாத அரச தொலைக்காட்சி, பெப்ரவரி 05ம் திகதி ஒரு படம் காண்பித்தது.

25 முதல் 30வரையான புலிகளின் உடல்களும் சில ஆயுதங்களும் காண்பிக்கப் பட்டன. ஏற்கனவே குறிப்பிடப்பட்டதுபோல பெப்ரவரி முதலாம் திகதி நடந்த சண்டையின் பின்னர் கிடைத்த உடல்கள்தான் அவை.

அதனை காண்பித்தது மூலம் படையினர் மறைமுகமாக ஒரு உண்மையை வெளிப்படுத்தி விட்டனர். காண்பிக்கக்கூடிய உடல்கள் அவ்வளவுதான் படையினருக்கு கிடைத்தன.




பெப்ரவரி 03ற்கு முன்னர் படையினர் நிலைகொண்டிருந்த இடங்கள்.

25-30 உடல்களையே காண்பித்தவர்கள் நூற்றுக்கு மேற்பட்ட உடல்கள் இருந்தால் காண்பிக்காமல் விடுவதற்கு எந்தக்காரணமும் இல்லை.

**புலிகள் உடல்களைப் பொறுப்பேற்கவில்லை. ஆகவே எரித்தோம் என்று காரணம் கூறலாம். ஆனால் கைப்பற்றிய உடல்களை வீடியோப் படம்பிடித்து காண்பிக்காமல் விட்டதற்கு அந்த நியாயம் பொருந்தாது.**

பரந்தன்–கிளிநொச்சி சமரில் ஆரம்பம் முதற்கொண்டே படைத்தரப்பும், அரசும், அதன் செய்தி ஊடகங்களும் முன்னுக்குப்பின் முரணானதும், ஆதாரங்கள் அற்றதும், சுற்றிவளைப்பான கதைகளுடன் கூடியதுமான தகவல்களையே வெளியிட்டு வந்தன.

ஆனால், புலிகள் ஆரம்பம் முதற்கொண்டு தமது இழப்புக்களையும், சண்டையில் தமது நிலைகளையும் ஒளிக்காமல் கூறியே வந்தனர்.

**படையினரிடம் புலிகள் இயக்க உறுப்பினர்களின் சடலங்கள் 32 வரைதான் இருந்தன. எனவே புலிகள் தங்கள் இழப்பை மறைக்க நினைத்தால் சொல்லாமல் விட்டிருக்கலாம்.**

தம்மில் 156 பேர் 14 கரும்புலிகள் உட்பட பலியானதாக பெப்ரவரி 03ம் திகதியே புலிகள் அறிவித்துவிட்டனர். அதற்கு முன்னர் நடைபெற்ற சண்டைகளில் பலியான புலிகளின் எண்ணிக்கையும் அன்றாடம் புலிகளின் குரலில் தெரிவிக்கப்பட்டது.

**இதுவரைகாலச் சமர்களில் தமது தரப்பின் உயிர் இழப்பை புலிகள் மறைத்தது இல்லை என்பது உண்மை. உரிமை கோரப்படாத தாக்குதல்களில் பலியான கரும்புலிகளைக்கூட அவர்களது படங்களையோ, அவர்கள் பங்கு கொண்ட தாக்குதலையோ தெரியப்படுத்தாமல் கரும்புலிகள் தினத்தன்று அறிவிக்கப்படுகின்றன. பலியான கரும்புலிகளது எண்ணிக்கையுடன் அவர்களையும் சேர்த்தே அறிவிக்கின்றனர்.**

(இவற்றைக் குறிப்பிடும்போது புலிகளுக்கு சார்பான கருத்துக்களாக நோக்கப்படுகின்றன. ஆனால் இவை சார்பற்ற உண்மைகளாகும். இவற்றை ஆதாரபூர்வமாக யாராவது மறுக்க முடிந்தால் முரசில் எழுதுவதையே நான் நிறுத்திவிடத் தயார்.)

அரச செய்தி ஊடகங்களுக்கு தமது செய்திகளை மக்கள் நம்புவதில்லை என்பதும் தெரிகிறது. அதனால்தான் இப்போதெல்லாம் சில செய்தி நிறுவனங்களை மேற்கோள்காட்டி செய்தி கூறுகிறார்கள்.

"250 புலிகளின் சடலங்கள்வரை படையினரால் கைப்பற்றப்பட்டதாக 'ராய்டர்' செய்தி நிறுவனம் கூறியுள்ளது." என்று அரச செய்தி ஊடகங்கள் தெரிவித்ததை கேட்க முடிந்தது.

பரந்தன்–கிளிநொச்சி தொடர்பாக படைத்தரப்புகூறிய செய்தியைத்தான் ராய்டர் வெளியிட்டதே தவிர, 'ராய்டர்' சுயமாகப் பெற்ற செய்தியல்ல அது.

> **கிளிநொச்சி கரடிப்போக்கில் இருந்து முன்னேற முயன்ற படையினரை எதிர்த்து தாம் நடத்திய தாக்குதலில் கவச வாகனம் ஒன்று நாசமானதாகவும் யுத்த டாங்கி ஒன்று சேதப்படுத்தப் பட்டதாகவும் சிப்பாயின் உடல் ஒன்றும் ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர்.**

'ராய்டர்', 'ஏ.எஃப்.பி' போன்ற செய்தி நிறுவனங்களை மேற்கோள்காட்டி செய்தி சொல்வது புதிய பிரசார தந்திரமாகிவிட்டது. முன்னர் ஒரு காலத்தில் 'லங்காபுவத்' என்ற பெயரில் செய்திகளை விட்டுக் கொண்டிருந்தனர். இப்போது லங்காபுவத் என்ற பெயரைக் கேட்டாலே மக்கள் காதுகளைப் பொத்திக் கொள்கின்றனர்.

இப்போது களநிலவரத்தை கவனிப்போம்.

பெப்ரவரி 03ம் திகதி புலிகளின் கையில் வீழ்ந்த கிளிநொச்சி நகரை கைப்பற்ற படைத்தரப்பு கடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

புலிகள் காட்டுக்குள் நின்று சண்டையிடுகின்றனர் என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. சண்டை நடக்கும் பகுதியில் காடுகளே கிடையாது. அதுதவிர ஆனையிறவு முதல் கிளிநொச்சிவரை காடுகளே கிடையாது.

தற்போது கரடிப்போக்கில் இருந்து முன்னேற முயலும் படையணிகளை எதிர்த்து புலிகள் தாக்கிவருகின்றனர்.

பரந்தன், ஆனையிறவு தளங்களை நோக்கி புலிகளின் ஆட்டிலெறித் தாக்குதலும் இடைக்கிடையே நடத்தப்பட்டு வருகிறது.

புலிகளின் முல்லைத்தீவு தளத்தில் இருந்து நகர்த்தப்பட்ட ஆட்டிலெறி ஒன்று முரசுமோட்டைப் பகுதியில் நிறுத்திவைக்கப் பட்டுத்தான் ஷெல்களை ஏவுகிறது.

**பரந்தன் சந்தியில் இருந்து ஐந்துகிலோ மீட்டர் தூரத்தில் இருப்பது முரசுமோட்டை. அங்கு படை முகாம் இருந்ததாகவும், புலிகளால் தாக்கப்பட்டதாகவும்கூட சில தப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. முரசு மோட்டை புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்துவரும் பகுதியாகும்.**

பரந்தன் தாக்குதலுக்கு முரசுமோட்டையில் இருந்தும் புலிகளின் அணி ஒன்று ஊடுருவியது. குறிப்பாக பிரபாகரனின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள சிறுத்தைப் புலி அணி அங்கிருந்துதான் வந்து பரந்தன் முன்னணி நிலைகளை ஊடறுத்தது.

**ஆட்டிலெறிகள் எங்குவைத்து இயக்கப்படுகின்றன என்பதைக் கண்டறிய அமெரிக்காவில் இருந்து கருவிகள் வருகின்றன என்கிறார்கள். கருவிகள் இல்லாமலேயே இப்போதுகூட படையினர் கணிப்பிடமுடியும்.**

ஆட்டிலெறியின் சுடுதூரம், ஷெல்வரும் திசை, விழும் இடம் என்பவற்றை கணிப்பிட்டு பதிலடி நடத்த முடியும். விமானப் படைக்கு தகவல் தரவும் இயலும்.

ஆனால், விமானங்கள் வந்து சேரக்கூடிய நேரத்தைக் கணிப்பிட்டு அதற்கிடையே ஆட்டிலெறிகளை இடம்மாற்றுவது. இரவு நேரத்தில் நகர்த்திவந்து தாக்கிவிட்டு குறிப்பிட்ட நேரத்துக்குள் வேறிடத்திற்கு மாற்றிவிடுவது என்று பல தந்திரங்கள் உள்ளன.

**எனவே, நவீன கருவிகளையும் மேற்கண்ட தந்திரங்கள்மூலம் ஏமாற்றிவிடலாம். நிலையான இராணுவத்தளம், படைநிலைகள் என்பவற்றில் உள்ள ஆட்டிலெறிகளின் இருப்பிடத்தை கண்டறியத்தான் நவீன கருவிகள் உதவுமேதவிர, வன்னிச் சமருக்கு கைகொடுக்காது.**

ஆளில்லாத உளவு விமானம் இருப்பதால் புலிகள் தரைநகர்வு நடத்துவது இனிக் கஷ்டம் என்றெல்லாம் கதைகள் கூறப்பட்டன. ஆனால் வன்னிச் சமர்களில் உளவு விமானம் பெரும் தாக்கம் எதனையும் ஏற்படுத்த வில்லை. தரைநகர்வு மட்டுமல்ல நீண்டகால தரைச்சமர்களும் நடந்துகொண்டு தான் இருக்கின்றன.

கடலில் கப்பல் நிற்பதனையும், படகுகள் நடமாடுவதையும்; வாகன நடமாட்டங்களைப் பின் தொடரவும் ஆளில்லாத உளவு விமானத்தால் மட்டும்தான் முடியும் என்றில்லை.

ஆனால், புலிகளின் ஏவுகணை அச்சுறுத்தலால் புலிகளின் பகுதிகள்மீது நிதானமாக பறந்து மோப்பம் பிடிக்க விமானிகள் தயங்குவதால், ஆளில்லாத விமானம் உபயோகமாகிறது.

**ஆளில்லாத உளவு விமானம் நடமாட்டம். ஆட்டிலெறிகளை கண்டுபிடிக்கும் நவீன கருவிகள் வருகின்றன. என்றெல்லாம் செய்திகளை வெளியிடுவது ஒருவிதமான உளவியல் போர்முறை. 'இனிக் கொஞ்சம் கஷ்டம்தான்' என்று எதிரியை நம்பிக்கை இழக்கச் செய்யும் தந்திரம்.**

ஆனால், அரசு புதிதாக அறிமுகப்படுத்தும் படைக்கலங்கள், கருவிகள் பற்றிய தரவுகளை பெற்று தமது உறுப்பினர்களுக்கு புலிகள் விளக்கம் கொடுப்பதால், படையினரின் மேற்கண்ட உத்தி போதிய பயனளிப்பதில்லை.

குறிப்பிட்ட ஆயுதங்கள், கருவிகள் என்பவற்றை தயாரிக்கும் நிறுவனங்கள் அவற்றை விற்பனை செய்வதற்காக 'கட்லொக்' வெளியிடுகின்றன. அவற்றை பெற்றுக் கொள்வது புலிகளுக்கு சிரமமானதல்ல.

**கிளிநொச்சி சமர் ஒரு விடயத்தை நன்கு தெளிவாக்குகிறது. படையினரின் நவீன படைக்கலப் பலம், சண்டைப் பலம் என்பவற்றையெல்லாம் விட புலிகளைவிட அபரிமிதமான ஆட்பலம்தான் நிலங்களை பிடித்து தக்கவைக்கவும், அங்கிருந்து புலிகளை பின்னடையச் செய்யும் உதவுகிறது.**

யாழ் தேர்தல், சுதந்திரதின பாதுகாப்பு என்பவற்றுக்காக கிளிநொச்சியில் படைபலம் சற்றுக் குறைந்தபோது, புலிகளின் தாக்குதலை படையினரால் எதிர்கொள்ள முடியாமல் போயுள்ளது. விமானங்கள் குண்டுத்தாக்குதல் நடத்தியும், பத்தாயிரத்திற்கு மேற்பட்ட படையினர் கவசவாகனங்கள், ஆட்டிலெறிகளின் உதவியுடன் முயன்றும்கூட பெப்ரவரி 03 முதல் 11ம் திகதிவரை எட்டுநாட்கள் கரடிப்போக்கை தாண்டி கிளிநொச்சிக்குள் பிரவேசிக்க முடியவில்லை.

**மேலதிக படைபலத்தையும், ஆயுத தளபாடங்களையும் அங்குள்ள படைத்தளபதிகள் கோரி உள்ளனர். அவை அனுப்பப்பட்டுவருகின்றன. அதன்பின்னர் மூர்க்கமான பலப்பிரயோகம் ஒன்றை படைத்தரப்பு மேற்கொள்ளப்போகிறது.**

மறுபடியும் கிளிநொச்சியை கைப்பற்றுவதில் படையினர் வெற்றிபெறக்கூடும். படைத்தரப்பில் பாரிய உயிர்சேதம், பொருள் சேதம் என்பவற்றை ஏற்படுத்தியிருப்பது ஒட்டுமொத்தமான வன்னிச் சமரில் நீண்டகால நோக்கில் புலிகளுக்கு சாதகமானது தான்.

புலிகளும் ஆட்பல இழப்பை சந்தித்துள்ளனர். இது தவிர்க்கமுடியாத போர் விதி. தமது ஆட்பலத்தை தக்கவைப்பதுடன், படைத்தரப்பு ஆட்பலத்தை முடியுமானவரை சீர்குலைக்கும் போரியல் அவசியம் புலிகளுக்கு உண்டு.

படையினருக்கு கிளிநொச்சி நகரை மறுபடி பிடிப்பது கௌரவப் பிரச்சனை. தமது தரப்பு இழப்பால் ஏற்படும் நஷ்டத்தை விட கிளிநொச்சியை கைநழுவ விடுவதால் ஏற்படும் அரசியல், இராணுவ 'இமேஜ்' சரிவுதான் அரசுக்கு முக்கிய பிரச்சனை.

கிளிநொச்சியை மறுபடி கைப்பற்றுவது மூலம் பரந்தன்–கிளிநொச்சி சமரின் பரிமாணம், பின்னடைவுகள் அனைத்தையும் பூசிமெழுகி விடலாம்தான். ஆனால் வெற்றிடத்தையும், சேதாரங்களையும் எப்படி நிரப்புவது? ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**யாழ் தேர்தல்** தொடர்பாக நண்பர் ஒருவர் மனம் வெதும்பி சொன்ன கருத்து: "ஒருகாலத்தில் துப்பாக்கிக் குழாய்களுடன் அலைந்த எங்கட பொடியள், சாராயப் போத்தல்களுடன் திரிந்த காட்சியை யாரிடம் சொல்லி அழுவது? இப்படியோ நிலமை மாறவேணும்?" நியாயமான அங்கலாய்ப்புத்தான்!

**சாவகச்சேரி நகர சபையில்** செல்லுபடியான வாக்குகளைவிட செல்லாத வாக்குகள்தான் அதிகம். விரலில் பூசிவிட்ட மையைக் கொண்டுபோய் வாக்குச் சீட்டில் துடைத்துவிட்டு, சீட்டை மடித்து உள்ளே தள்ளிவிட்டு வந்தனராம் சில பெண்கள். குறிப்பிட்ட சில பகுதிகளில் நூற்றுக்கு ஐந்து ஆறு வீதம்கூட செல்லக்கூடிய வாக்குகள் தேறவில்லையாம்.

**திருவானமலையில்** தம்பலகாமம் விவகாரத்தில் சம்பவம் நடந்த இடத்திற்கு கூட்டான கட்சிப் பிரமுகர்கள் எவரும் செல்லவில்லையாம். ஆனால் பி.பி.சி. வானொலியில் கூட்டான கட்சியினர்தான் முன்னின்று உடல்களை மீட்டுக் கொடுத்தவை எண்ட மாதிரி தலைகீழாகவல்லோ சொல்லிப் போட்டினம்! கூட்டான கட்சிப் பிரமுகர்கள்தான் கதை உருட்டிவிட்டவையாக்கும். ஒரு முறையாவது எட்டிப்பார்த்துவிட்டு உருட்டியிருக்கலாமல்லோ? வெகுஜனப் பிரதிநிதியும் அப்போது நாட்டில் இல்லையாம்.

**விடுதியில் ரெண்டு** எழுத்தார் இருந்தால், அங்கிருந்த சனம் எல்லாம் வீதியில் விரட்டப்படுவதுதான் நீதியாம். விகாரை வளாகங்களிலும் ரெண்டு எழுத்தாரின் குண்டுலொறிகள் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பவங்களும் உண்டல்லவோ? அதற்காக அங்கிருந்தேரரை வீதியிலோ நிறுத்தினவை? சனத்தை வீதியில் விரட்டுவது சரி என்பது மாதிரியல்லோ சனநாயக அரசினர் மௌனம் சாதிக்கின்றனர்.

**'முரசு' ரெண்டு** எழுத்தாருக்கு ஆதரவாக எழுதுகிறதாம். 'லங்காதீப' பத்திரிகை இனவாதக் கண்ணாடி போட்டுக்கொண்டு கண்டுபிடிப்புச் செய்திருக்கிறது. 'லங்காதீப'. அடிக்கடி 'முரசு' வெளியிடும் செய்திகளை எடுத்து வெளியிடுவதும் ரெண்டு எழுத்தாருக்கு ஆதரவு காட்டத்தானாக்கும்! தமிழ் பத்திரிகைகள் உண்மைகளைச் சொன்னால் ரெண்டு எழுத்துக்கு சப்போர்ட். தாங்கள் அதே செய்திகளைப் போட்டால் நடுநிலை! என்னே ஞானம்?! 'லங்காதீபவுக்கு' தப்பான தகவல் கொடுத்தவர் ஒரு செந்தமிழர்தானாம்!

**மாகாணசபைத் தேர்தல்** வந்தால் கூட்டான கட்சியினர் களம் காணத் தயார் நிலையில் உள்ளனராம். யாழ் குடாநாட்டிலும் அலுவலகம், பிரசாரம், சந்திப்புக்கள் எண்டு புகுந்து விளையாடத் தொடங்கியிருக்கினம். சங்கதியாருக்கு யாழில் நின்ற காலத்தில் பயங்கரமான பாதுகாப்புக் கொடுக்கப்பட்டதாம். பாதுகாப்பாகக் கொண்டுசென்று விமானத்தில் ஏற்றி கொழும்புக்கு அனுப்பிவைத்தனராம். முன்னாள் மூத்த தலைவரை முதலமைச்சர் பதவிக்கு போடும் உத்தேசமும் இருக்கிறதாம். கிழக்கின் தனித்துவக் கட்சியுடன் கை கோர்த்துத்தான் களம் காண்பார்களாம். அதற்கான ஒத்திகைப் பேச்சு வெகுஜன சபை உணவு விடுதியில் நடந்ததாகத் தகவல்.

**'கிளிநொச்சி புலிகளிடம்'** என்று முரசுதான் முதலில் திட்டவட்டமாகக் கூறியது. இப்போது அது உறுதியாகிவிட்டது. ஆனால் இலங்கை வானொலி செய்தியில், "சில பத்திரிகைகளில் கிளிநொச்சி கைவிட்டுப்போனதாக வந்த செய்தி தவறு" என்று கூறப்பட்டது. அதே வானொலி அலைவரிசையில் ஒலிபரப்பாகும் பி.பி.சி ஒலிபரப்பில், கிளிநொச்சி புலிகளின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் தம் வீடுகளைப் பார்வையிட்டோரில் ஒருவரின் பேட்டி ஒலிபரப்பானது. எல்லாம் சரி- கிளிநொச்சி நோக்கி படைகள் முன்னேறுவதாக இப்போது அரச செய்தி நிறுவனங்கள் கூறுவது எந்தக் கிளிநொச்சியை?

**இவ்வாரம்** 'காதலர்தின' குறும்புக் கவிதை.

**"அண்ணலும் நோக்கினேன்**
**அவளும் நோக்கினாள்**
**அவள்**
**அப்பரும் நோக்கினார்**
**ஆஸ்பத்திரியில் நான்!"** ■



படிப்பகம்




இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்துவதால், இந்தியா புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் என்று ஈரோஸ் தலைவர் பாலகுமார் கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு நிறுத்தவில்லை, இந்தியப் படையினராலும், அவர்களுடன் நின்ற இயக்கங்களாலும் 1989ம் ஆண்டின் ஆரம்பத்தில் காணாமல் போகச் செய்யப்பட்ட தமது இயக்க உறுப்பினர் பட்டியல் ஒன்றையும் பாலகுமார் வெளியிட்டார்.

அந்தப் பட்டியலில் கூறப்பட்ட விபரங்களைப் பார்ப்போம்.

1. 17.03.89 அன்று திருமலை கப்பல் துறையில் தம்பலகாமத்தில் இருந்த இந்தியப் படையினரால் கைதான தோழர் குணரட்ணம் பரமேஸ்வரன் இன்றுவரை வீடு திரும்பவில்லை.

2. 10.05.89 அன்று மட்டக்களப்பு புன்னச்சோலையில் வைத்து கடத்தப்பட்ட தோழர் குகதாஸ் (ஆனைக்குட்டி) சடலமாக மீட்கப்பட்டார்.

3. 23.05.89 அன்று மூதூர் 64ம் கட்டையில் வைத்து தொழர் சேகு முகமட் சகாப்தீன் (கசாலி), தோழர் நடராஜா அமிர்தலிங்கம் (அமிர்தம்) ஆகிய இருவரும் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

4. 23.05.89 அன்று கப்பல்துறையில் தோழர் கனகராசா, ஆதரவாளர் தேவசகாயம் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

5. 2.06.89 அன்று நைனாமடு இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தோழர் செல்வரெத்தினம், அல்லது வெள்ளைக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னால் தமிழ் பேசும் மக்களுக்கு பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற அடிப்படையில் ஆயுதங்களை கையளித்த எம்மீது ஏவிவிடப்பட்ட இப்படுகொலைகள் ஒப்பந்தத்துக்கு முன்னாலுள்ள சூழ்நிலைக்கு நாம் செல்வதற்கே எம்மை உந்தித் தள்ளுகின்றன" என்று பாலகுமார் தெரிவித்திருந்தார்.

## முரண்பாடுகள்

ஈரோஸ் இயக்கத்திற்குள் இரண்டு விதமான போக்கு இருந்தது. பாலகுமார் போன்றோர் புலிகளுக்கு ஆதரவான போக்கை கொண்டிருந்தனர். சங்கர் ராஜி போன்றோர் இந்தியாவுக்கு சார்பான போக்கை கொண்டிருந்தனர்.

சங்கர் ராஜிக்கு இந்திய உளவுப் பிரிவான 'றோ' வுடன் இருந்த நட்பும் தொடர்பும் இந்தியச் சார்பு நிலைக்கு அவரைத் தள்ளியிருந்தன.

உள் பிரச்சனையை ஈரோஸ் வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும் பாலகுமாரின் பேச்சுக்கும், சங்கர்ராஜியின் பேச்சுகளுக்கும் இடையே முரண்பாடுகள் தென்படவே செய்தன.

வீரகேசரியில் அன்று இருந்த சுறுசுறுப்பான தலைமைச் செய்தியாளர்களில் ஒருவர் அன்டன் எட்வர்ட். அரசியல் கட்சிக்காரர்கள் முதற்கொண்டு அமைச்சர்கள்வரை பரிச்சயம். எல்லோரையும் துரத்தித் துரத்தி செய்தி கறப்பதில் ஆள் விண்ணர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம், இலங்கை அரசு, புலிகள் பேச்சு போன்றவை தொடர்பாக பல்வேறு உள்ளக விபரங்களை திரட்டி வெளியிட்டு வந்தவர்.

சங்கர் ராஜியிடம் பத்துக் கேள்விகளைக் கொடுத்து பதில்களை உருவியிருந்தார் அன்டன்.

அதில் ஒரு கேள்விக்கு சங்கர்ராஜு அளித்த பதில்:

**கேள்வி: ஜனாதிபதியைச் சந்தித்தபோது இந்திய இராணுவம் பற்றி பேசியிருந்தீர்களா?**

பதில்: அங்கே அப் பேச்சு எழவில்லை. எமது கருத்து என்னவென்றால், வடக்கு-கிழக்கு இன்னமும் இணைக்கப்படவில்லை. மாகாண சபைக்கு போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. தமிழ் மக்களுக்கு போதிய பாதுகாப்பில்லை. இந்நிலையில் இந்தியப் படையின் வெளியேற்றம் மக்களை நட்டாற்றில் விட்டுவிடும். எனவே அதற்கு முன்னர் சகல தரப்பாருடனும் பேச வேண்டும்.

## எங்கும் குழப்பம்

அரசும், புலிகளும் பேசிக் கொண்டிருக்க, தென்னிலங்கையில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளும் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தன.

ஜே.வி.பி.யின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு தென்னிலங்கை மக்கள் அஞ்சி நடுங்கினார்கள்.

1989 ஜூலையில் வேலை நிறுத்தம் ஒன்றுக்கு ஜே.வி.பி. அழைப்பு விடுத்தது. அடுத்தநாளே தென்னிலங்கை எங்கும் வெற்றிகரமான வேலை நிறுத்தம் ஆரம்பமானது.

வழக்கமாக தொழிற் சங்கங்கள்தான் வேலை நிறுத்தம் செய்யுமாறு தொழிலாளர்களுக்கு கோரிக்கை விடுப்பதுண்டு.

ஆனால், எந்த ஒரு தொழிற் சங்கத்துடனும் கலந்தாலோசிக்காமல் ஜே.வி.பி. நடத்திய வேலை நிறுத்தம் மாதக்கணக்காக நீடித்தது.

தென்னிலங்கையில் சில கடைகளில் 'இங்கே இந்தியப் பொருட்கள் விற்கப்படுவதில்லை' என்று எழுதித் தொங்கவிட்டிருந்தனர்.

இந்திய துணியில் ஆடை அணிந்திருந்த சில இளைஞர்களைப் பிடித்து நிர்வாணமாக்கி ஊர்வலமும் நடத்தப்பட்டது.

ஜே.வி.பி. இயக்கத் தலைவர் ரோஹன விஜயவீரா ஒரு காலத்தில் சண்முகதாசன் தலைமையிலான சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர்.

அதேவேளை கொழும்பில் நடைபெற்ற தமிழர்களுக்கு எதிரான ஊர்வலம் ஒன்றில் கலந்துகொண்டு 'மசால வடை எமக்கு வேண்டாம்' (மசால வடே அப்பிட்ட எப்பா) என்று அந்தக் காலத்திலேயே கோஷம் போட்டும் சென்றவர்.

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# பிரேமாவிடம் மாத்தையா சொன்ன கதை!



ஜே.வி.பி.யால் கொல்லப்பட்டவர்

எனினும் ஜே.வி.பி.யினர் 1989ல் பகிரங்கமாக இனவாதம் பேசுவதை தவிர்த்துக் கொண்டனர்.

மறைமுகமான இனவாதப் பிரசாரங்கள் நடத்தப்பட்டன. திருமலையில் வெற்றுக்காணிகளுக்குள் தமிழ் அகதிகள் கொண்டுசென்று குடியேற்றப் படுகின்றனர் என்று ஜே.வி.பி.யின் இரகசிய வானொலி அறிவித்தது.

தமிழ் இயக்கங்கள் கொழும்பில் நின்ற போதும் சரி, பின்னர் புலிகள் கொழும்பில் நடமாடியபோதும்சரி ஜே.வி.பி. தமிழ் இயக்கங்களுடன் சீண்டாமல்தான் நடந்து கொண்டது.

ஜே.வி.பி. 1971இல் நடத்திய கிளர்ச்சியின் போதும், 1987-89இல் நடத்திய கிளர்ச்சியின் போதும் சூழ்நிலைதான் அவர்களுக்கு பாதகமாக மாறியது.

1970இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறிமாவோ தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்திருந்தது. இடதுசாரிக் கட்சிகள் அதில் அங்கம் வகித்தன. பிரபல இடதுசாரித் தலைவர்கள் என்று கருதப்பட்டோர் முக்கிய அமைச்சர்களாக இருந்தனர்.

இடதுசாரி அரசாங்கம், சோசலிச அரசாங்கம் என்றெல்லாம் பெரிதாகப் பீற்றிக் கொண்டனர். அதனை உள்நாட்டு மக்களும், சோசலிச நாடுகளும்கூட நம்பிவிட்டன.

அந்தப் பொய் அம்பலமாகி, இடதுசாரி அரசாங்கம் என்ற சாயம் வெளுக்கும் வரை காத்திருக்காமல் ஜே.வி.பி. கிளர்ச்சியில் குதித்தது.

அரசாங்கமும் சோசலிசம் பேசியது. அரசைக் கவிழ்க்க கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் சோசலிசம் பேசினர். மக்களுக்கு ஒரே குழப்பம். உலக சோசலிச நாடுகள்கூட ஜே.வி.பி. புரட்சியை அதிருப்தியோடுதான் பார்த்தன.

உலக ஆதரவுடன் ஜே.வி.பி.யின் முதல் கிளர்ச்சியை நசுக்கிப் போட்டார் சிறிமாவோ அம்மையார்.

இரண்டாவது கிளர்ச்சியின்போது (1987-89) ஜே.வி.பி. முன்வைத்த பிரதான கோஷம் இந்திய எதிர்ப்புக் கோஷமாகும்.

ஜே.ஆர். ஜனாதிபதியாக இருந்தவரை ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்புக் கோஷம் மக்கள் மத்தியில் எடுபட்டது.

ஏனெனில், ஜே.ஆர். இந்தியப் படையை இலங்கைக்கு கொண்டுவந்து, இந்திய ஆக்கிரமிப்புக்கு வழிவிட்டவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார்.

ஆனால், பிரேமதாசா ஜனாதிபதிப் பதவிக்கு வந்ததும் நிலவரம் தலைகீழானது.

ஜே.வி.பி.யைவிட இந்திய எதிர்ப்பில் முன்னின்றார் பிரேமதாசா. படையை வாபஸ் பெறுங்கள். அல்லது முகாம்களுக்குள் முடக்குவோம் என்றும் காலவரையறை விதித்தார்.

இவ்வாறான கட்டத்தில் ஜே.வி.பி.யின் பிரதான கோஷம் அமுங்கத் தொடங்கியது.

## ஆயுதபாணிகள்

படைவீரர்கள், அதிகாரிகள், பொலிசார் ஆகியோரின் குடும்பங்களில் ஜே.வி.பி. கைவைக்கத் தொடங்கியதும் அதன் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

அக்கட்டத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்ன 'அடிக்கு அடி தான் மருந்து' என்ற கொள்கை உடையவர்.

ஜே.வி.பி. என்று கருதப்பட்டவர்கள் விடயத்தில் ஈவிரக்கம் தேவையில்லை என்று படையினருக்கு உத்தரவிட்டார்.

தென்னிலங்கையின் சகல அரசியல் கட்சிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்கும் ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தார் ரஞ்சன்.

தங்களுக்கு போட்டியான கட்சிகள் என்று பாரபட்சம் காட்டாமல், அக்கட்சிகள் கேட்ட எண்ணிக்கைப்படி ஆயுதங்கள் ரஞ்சனால் வழங்கப்பட்டன.

ஆயுதங்களை பெற்ற கட்சிகளிடம் பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் இல்லை. தமிழ்க் கட்சிகளின் உதவிகளை நாடினார்கள். தமிழ்க் கட்சிகளில் இருந்து ஒதுங்கியிருந்த உறுப்பினர்களையும் பயன்படுத்திக் கொண்டனர்.

தெருக்களில் பிணங்கள் குவிந்தன. படையினரால் கொல்லப்பட்டவர்கள் யார்? ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டவர்கள் யார் என்று தெரியாமல் மக்கள் குழம்பி நின்றனர்.



சங்கர்ராஜி

எங்கும் கொலை கலாசாரம் தலைவிரித்தாடியது. ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளுக்கு மக்களின் குறிப்பிட்ட பகுதியினர் மட்டுமல்ல, தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் மறைமுகமான ஆதரவும் இருக்கவே செய்தது.

ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டும்வரை தங்களால் அரசியல் நடத்தமுடியாது என்று கருதிய சகல கட்சிகளும், ஜே.வி.பிக்கு எதிரான வேட்டைகளை மௌனமாக ஆதரித்தன.

தற்போது ஜே.வி.பி.யை ஒழிக்க ஐ.தே. கட்சி எடுத்த நடவடிக்கைகளை விமர்சிக்கும் பலர் அப்போது ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கைகளை வரவேற்றுக் கொண்டிருந்தனர்.

## இறுதிக்கட்டம்

ஜே.வி.பி. தனது வீழ்ச்சிக்கான இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தது.

ஜே.வி.பி. வீழ்ச்சியடைந்தால் பிரேமதாசாவின் கை ஓங்கும் என்பதையும், பின்னர் கடுமையான தொனியில் தம்முடன் அவர் பேசக்கூடும் என்றும் பிரபாகரன் எதிர்பார்த்தார்.

ஆனால், மாத்தையா, யோகி போன்றோருக்கு பிரேமதாசாமீது சிறிது நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

இலங்கை அரசுடனான பேச்சு வார்த்தையில் புலிகள் சார்பாக மாத்தையாவும் கலந்து கொண்டார்.

புலிகள் இயக்க அரசியல் பிரிவான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் கட்சியாகவும் பதிவு செய்யப்பட்டது.

அதன் தலைவராக மாத்தையாவும், செயலாளராக யோகியும் இருந்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற பெயரில் நேரடியாக அரசுடன் பேசுவதோ, தேர்தல்கள் போன்றவற்றில் ஈடுபடத் தயார் என்று காண்பிப்பதுவோ கூடவே கூடாது என்பது பிரபாகரனின் உறுதியான நிலை.

"வேண்டுமானால் வேறு ஒரு பெயரில் உங்கள் பேச்சு முயற்சிகளை வைத்துக்கொள்ளுங்கள்" என்று பிரபாகரன் கூறியிருந்தாராம்.

பிரேமதாசாவுடனான சந்திப்பில் முதன் முதலில் கலந்துகொண்டபோது மாத்தையா பிரேமதாசாவிடம் பின்வருமாறு கூறினாராம்:

"நான் சிறுவனாக இருந்தபோது நீங்கள் வடமராட்சிக்கு விஜயம் செய்திருந்தீர்கள். அப்போது என் கையில் இருந்த சிங்கக் கொடியை அசைத்து உங்களை வரவேற்றேன்."

மாத்தையா கூறியதைக் கேட்ட பிரேமதாசாவுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. புலிகளுடன் மோதல் தொடங்கிய பின்னரும் கூட மாத்தையா தன்னிடம் கூறியதை தன்னைச் சந்தித்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பலரிடம் சொல்லி மகிழ்ந்தார் பிரேமதாசா.

"சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இந்த நாட்டின் மைந்தர்கள். எங்கள் பிரச்சனையை எமக்குள் பேசித்தீர்த்துக் கொள்ளுவோம். இந்தியாவுக்கு இதில் என்ன வேலை இருக்கிறது. இந்தியப்படை திரும்பிச் செல்லவேண்டும்" என்றும் மாத்தையா அறிக்கைவிட்டிருந்தார்.

ஆனால், பிரபாகரன் மட்டும் தன்னை சந்தித்தவர்களிடம், 'பிரேமதாசாவும் நியாயமாக நடக்கப்போவதில்லை. நானும் என்னை சார்ந்தவர்களும் போருக்கு ஆயத்தமாக இருக்கிறோம்' என்று கூறிக் கொண்டிருந்தார்.

இதற்கிடையே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரை ஜனாதிபதி பிரேமதாசா சந்தித்து கலந்துரையாடினார்.

இச் செய்தியைப் பார்த்ததும் புலிகள் கோபப்பட்டனர். கண்டன அறிக்கை தயாரானது. அரசு-புலிகள் பேச்சில் முதல் முறுகல் நிலை ஏற்பட்டது.

(தொடர்ந்து வரும்)

---

# "இளையோர் அஞ்சக்கூடாது"

**1976ல்** ஆகஸ்ட் 4 முதல் 22 வரை அணிசேரா நாடுகள் மாநாடு கொழும்பில் நடைபெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியானது வன்செயல் இயக்கமொன்றில் ஈடுபட இக்காலப் பகுதியை தேர்ந்தெடுத்தது.

ஒருவேளை; தமிழர்களின் அவல நிலையை, அம் மாநாட்டிற்கு வந்திருந்த உலகத்தலைவர்களுக்கு தெரியப்படுத்த அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம்.

பின்வரும் குற்றச் செயல்கள் யாழ்ப்பாணத்தில் புரியப்பட்டன; பேருந்துகள் எனப்படும் பஸ் வண்டிகள், புகை வண்டிப் பெட்டிகளுக்குத் தீயிட்டமை.

மாவிட்டபுரத்தில் மின் கடத்தி (ட்ரான்ஸ்போமர்) ஒன்றை வெடிவைத்துத் தகர்த்தமை, அத்துடன் அரசாங்கச் சொத்துகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுத்தமை. அத்துடன் ஆகஸ்ட் 4ம் திகதியன்று திரு.அருளம்பலத்தை (நல்லூர் பா.உ) கொல்ல எத்தனித்தமை முதலியனவாம்.

புகையிரத வண்டிகளுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவங்கள் மூன்றையும் அதே விதத்தில் இ.போ.ச. பேருந்துகள் நான்கு தடவைகள் தாக்கப்பட்டதையும் திரு.செனிவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சம்பவத்தின்போது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியிருந்தது எனவும் கூறிய அவர், அப்போது பஸ்வண்டி என்னும் பேருந்து ஒன்று செல்லவிடாமற் தடுக்கப்பட்டு, நடத்துநர் வசமிருந்த பணச் சேகரிப்புக்கள் கொள்ளையிடப்பட்டு, அந்த வண்டிக்கும் தீ வைக்கப்பட்டது என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நோக்கம், இலங்கைக்கு வருகை தந்தோரின் கவனத்தை ஈர்ப்பதாக இருந்ததாயின், அவர் தம் மனதில் இன்னொன்றையும் நிரூபிக்க அது உதவியிருக்கும். அதாவது, இத்தீவின் ஒரு பாகத்தில், சட்டத்தினை உதாசீனமாகப் பொருட்படுத்தாதுவிடும் நிலையொன்று நிலவியது எனவும், சமாதானம் ஒழுங்கு என்பவற்றின் எதிரிகளால் அரசாங்கச் சொத்து வேண்டுமென்றே நாசமாக்கப்பட்டது எனவும் அது அவர்களுக்கு நிரூபித்திருக்கும்.

1976 ஜூலை மாதம் 31ம் திகதியிடப்பட்ட ஓர் அறிக்கை யாழ்ப்பாணம் மாவட்ட உளவறியும் பணியக அலுவலரினால் கொழும்பு 'ஐ.எஸ்.டி' பொலிஸ் அத்தியட்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.



அந்த அறிக்கை, அதே நாள் விடுதலையாகிய தமிழ் இளைஞர்களுக்கு யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்ற வரவேற்பு உபசாரக் கூட்டம் ஒன்றை விபரிப்பதாக இருந்தது.

அவ்வறிக்கையில் காணப்பட்டிருந்த விடயங்கள் பின்வருமாறு:

தடுப்புக் காவலில் இருந்து விடுதலையான பதினைந்து இளைஞர்களில் பன்னிரண்டு பேர் தமிழர் விடுதலைக் கூட்டணியாலும், தமிழ் இளைஞர் முன்னணியாலும் அழைக்கப்பட்டு அந்த கூட்டத்தில் சமூகமளித்திருந்தனர்.

அவர்தம் தோள்கள்மீது உதயசூரியன் கொடிகளை இடுவதன்மூலம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் உதயசூரியன் கொடிகளை அமிர்தலிங்கம் வழங்கினார்.

அங்கு திரு.மு.சிவசிதம்பரம் கூறியதாவது: "தலைவர்களான எம்மிலும் பார்க்க இங்குள்ள இளைஞர்கள்தாம் வீரப்புருஷர்கள்; ஏன் என்றால் இந்த இளைஞர்கள் தடுப்புக்காவல் முகாம்களுக்கு சென்று அனுபவித்த துன்பங்களை தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் அங்கு போய் அனுபவித்தவர்கள் அல்லர்.

துரையப்பா கொலைக்காக இப்போது குற்றம் சாட்டப்பட்டுள்ள இளைஞர்கள் தமிழ் சட்டத்தரணிகளால் நிச்சயம் காப்பாற்றப்படுவர். அந்த வழக்கு நாளை எதிர்பார்த்து தமிழ்ச் சட்டத்தரணிகள் காத்திருக்கின்றனர்.

இளைஞர்களை தலைவர்கள் வழி நடத்திச் செல்வர். எனவே விடுதலைப் போராட்டத்தில் இறங்க இளையோர் அஞ்சத் தேவையில்லை. தலைவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்வதே இளையவர்கள் செய்ய வேண்டிய கடமையாகும்" என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இளைஞர்களுக்குமிடையே உள்ள தொடர்பை இதனிலும் பார்க்க தெளிவாக்கலாமோ? இச் சொற்பொழிவுகள் சிலவற்றை தெளிவாகக் காட்டுகின்றன என நான் கருதுகிறேன்.

தமிழர் கூட்டு முன்னணி அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியானது இளைஞர்களின் நடவடிக்கை தொடர்பாக முழு அனுதாபம் கொண்டிருந்தது. தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட இளைஞர்கள் தீர புருஷர்கள் என வர்ணிக்கப்பட்டனர்.

துரையப்பாவை கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டோர் தமிழ்ச் சட்டத்தரணிகளால் காப்பாற்றப்படுவது திண்ணம்.

*சன்சோனிக்கமிஷன் அறிக்கையில் இருந்து.*
*(24.12.1981ல் வெளியானது)*



www.padippakam.com

www.padippakam.com

# அலசுவது– இராஜதந்திரி

# புலிகள் தீர்மானித்த பொன்விழா

இலங்கைத் தீவு ஒரு வெடிமருந்துப் பேழையாக மாறியிருக்கிறது என்பதை சுதந்திரப் பொன்விழாவுக்கு வந்திருந்த சர்வதேசப் பிரமுகர்களும், இராஜதந்திரிகளும் நன்கு உணர்ந்து கொண்டே திரும்பிச் சென்றிருக்கின்றனர்.

தலைநகரப் பாதுகாப்பை உத்தரவாதம் செய்வதில்கூட ஆட்சியாளர்கள் திணறிக்கொண்டிருந்தனர் என்பதையும் அவர்கள் அவதானிக்கவே செய்திருப்பர்.

**பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் உலக விவகாரங்களில் அக்கறையுடைய ஒருவரல்ல, உல்லாச சுகவாசியான சாள்ஸ்கூட கொழும்பில் தங்கியிருந்த சில நாட்களுக்குள்ளாகவே இனப்பிரச்சனையின் தீவிரத்தையும், உக்கிரத்தையும் அறிந்து கொள்ளக்கூடியதாகிவிட்டது.**

கொழும்பில் நடைபெற்ற இராப்போசன விருந்தில் இளவரசர் சாள்ஸ் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட உரையை வாசித்தார். அந்த உரை மிகக்கவனமாக தயாரிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இலங்கைத்தீவில் இனப்பிரச்சனை உக்கிரம் அடைந்திருப்பதையும் கடந்த 50 ஆண்டுகாலத்தில் இன சமத்துவம் ஏற்படுத்தப்படவில்லை என்பதும் சூசகமாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

நினைத்த இடத்தில், நினைத்த விதத்தில் சுதந்திரப் பொன்விழாவைக்கூட கொண்டாட முடியாத அளவுக்கு பாதுகாப்பு நிலவரம் ஆட்சியாளரின் கைமீறிப் போயிருக்கிறது.

வடக்கு-கிழக்கில் போரை நடத்திக்கொண்டும், படைக்குவிப்புக்கள் மூலம் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை பாதுகாத்துக் கொண்டும் தலைநகரில் வெற்றிப் பெருமிதத்துடன் விழாக்களும், கொண்டாட்டங்களும் நடத்திக் கொண்டிருக்கலாம் என்று ஆட்சியாளர் கருதிக் கொள்ளல் ஆகாது.

**அவ்வாறு கருதிக்கொள்வது விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ வல்லமையை குறைவாக மதிப்பிடுவதன் வெளிப்பாடாகத்தான் இருக்கும். அத்தகைய மதிப்பீடுகள் எதிர்பாராத நெருக்கடியில் ஆட்சியாளர் சிக்கிக் கொள்ளவே வழி செய்து கொடுக்கிறது.**

விடுதலைப் புலிகளை குறைத்து மதிப்பிட்டதின் எதிரொலிதான் கண்டியில் தலதா மாளிகையில் கேட்டிருந்தது. இதன் பின்னர்தான் அரசாங்கம் புலிகளின் இராணுவ வல்லமைக்கு உரிய மதிப்பு கொடுக்க ஆரம்பித்தது.

நாட்டின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் தாம் நினைத்ததை

**ஆட்சியாளர்களுக்கு, கிளிநொச்சியே புலிகளிடம் வீழ்ந்த செய்தி கிடைத்தது எதிர்பாராத அதிர்ச்சி என்பதில் ஐயமில்லை.**

கிளிநொச்சிப் போர்க் களத்திலிருந்து பெப்ரவரி மூன்றாம் திகதியே நகர் வீழ்ந்த செய்தி கிடைத்திருந்தமையும் ஜனாதிபதி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் படைத் தளபதிகளின் சோர்வான நிலைக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

**பாரியளவான ஹர்த்தால் ஒன்று அனுஷ்டிக்கப்படுவது போன்றே பெப்ரவரி 04ம் திகதி முழுவதும் கொழும்பு தூங்கி வழிந்தது.**

முன்னர் சுதந்திர தினத்தன்று வடக்கு-கிழக்கில்தான் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதுண்டு. கூட்டணியினரே அதனை முன்னின்று நடத்தி வந்தனர். மக்கள் நடமாட்டம் இருக்காது. தெருக்கள் வெறிச்சோடிக் கிடக்கும்.

**ஆனால், இம்முறைதான் முதன் முதலாக சுதந்திரத் தினத்தன்று தலைநகரமே சனநடமாட்டமற்ற பிரதேசமாக, வெற்றிகரமான ஹர்த்தால் நடைபெறும் பிரதேசம் போன்றும் காட்சியளித்தது.**

அரசாங்கத்திற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் கொடுத்தது மூலமாக, அரசின் ஊடாகவே மறைமுகமான ஹர்த்தால் நடவடிக்கை

**உலுப்புவதற்கும் அடக்கப்படும் மக்களின் உரமான போராட்ட அதிர்வுகள் அவசியப்பட்டே வந்திருக்கின்றன. இல்லையெனில் அந்தந்த நாடுகளின் ஆட்சியாளர்கள் கூறுவதையே வெளியுலக அரசுகளும் வேதவாக்காக எடுத்துக் கொள்கின்றன.**

இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்களை சமாதான நாட்டம் உள்ளவர்களாக உலக அரங்கில் காண்பித்து வருகின்றனர்.

தமிழ்க் கட்சிகளை தமது விருப்பத்திற்கு ஏற்ப கருவிகளாகப் பயன்படுத்திக் கொண்டு, இனப்பிரச்சனை வேறு, புலிகளின் பிரச்சனை வேறு என்று கூறிவருகின்றனர்.

அவ்வாறு கூறுவதன் மூலம் தமது இராணுவத்தீர்வு முயற்சிக்கு நியாயம் கற்பிப்பதே ஆட்சியாளரது நோக்கமாக இருந்து வருகிறது.

**அரசியல் தீர்வு அவசியம் என்றும்**

பிரசாரமும் அதில் ஒன்றாகும்.

மக்கள் ஆதரவின்றி அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும் தோல்வி கண்டு வரும் ஒரு குழுவாக புலிகளை சித்தரிப்பது மூலமாக, இனப்பிரச்சனையின் தீவிரத்தையும் அதற்கு உயர்ந்த பட்ச தீர்வொன்று அவசியம் என்பதையும் மூடிமறைக்கவே ஆட்சியாளர்கள் விரும்பி நிற்கின்றனர்.

**வடக்கு-கிழக்கின் எல்லைகளுக்குள் போரை நடத்திக் கொண்டு, தமது நலன்களுக்கு ஏற்ப அங்குள்ள நிலவரங்களை வியாக்கியானம் செய்ய ஆட்சியாளர் முற்படுகின்றனர். இதன் காரணமாக வடக்கு-கிழக்குக்கு வெளியே பாரிய தாக்குதல்களை நடத்தவேண்டிய நிலைக்கு ஆட்சியாளர்கள்தான் புலிகளை இழுத்து விடுகின்றனர்.**

**வடக்கு-கிழக்குக்கு வெளியே தாக்குதல் நடத்தினால்தான் உலகின் கண்களுக்கு தங்கள் பலம் தெரியும். யுத்த அவலம் புரியும் என்ற நிலையில்தான் புலிகளால் இலக்குகள் தெரிவு செய்யப்படுகின்றன.**

உல்லாசப் பிரயாணிகள் வருகை அதிகரித்துள்ளது என்றும், இலங்கை சமாதான நாடென்றும் வெளிநாட்டமைச்சு பிரசாரம் செய்த சந்தர்பங்களில்தான் சில ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் நட்சத்திர ஹொட்டல்களில் குண்டுகள் வெடித்தன என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

**உலகத் தலைவர்கள், பிரமுகர்கள் ஆகியோரை துணிந்து வரச்செய்வதற்காக, புலிகள் பலவீனமாகிவிட்டனர் என்ற பிரசாரத்தையும் அரசாங்கம் மேற்கொண்டு வந்தது.**

இந்நிலையில், தங்கள் பலத்தைக் காண்பிக்காவிட்டால், ஆட்சியாளரின் பிரசாரங்கள் அனைத்தும் உண்மையாகிவிடும் என்ற நிலைக்கு புலிகள் தள்ளப்பட்டிருந்தனர்.

தலதா மாளிகை குண்டுவெடிப்புத் தொடர்பாக சாள்ஸின் உரையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டபோது, புலிகள்மீதும் சாடல் இருக்கும் என்றுதான் உரையை செவிமடுத்துக் கொண்டிருந்த ஜனாதிபதி உட்பட பலரும் எதிர்பார்த்திருப்பர்.

எனினும் விடுதலைப் புலிகள் தொடர்பாக எதனையும் குறிப்பிடாமலேயே உரை தயாரிக்கப்பட்டிருந்தது.

**வெளிநாட்டு இராஜதந்திரிகள் சிலர் வழக்கமாக கூறுவதுபோன்று, அரசின் தீர்வுப் பொதிபற்றிய பாராட்டுக்கள் எதுவும் சாள்ஸின் உரையில் இடம்பெற்றிருக்கவில்லை.**

இளவரசர் சாள்ஸ் கொழும்புக்கு புறப்பட்டுவர முன்பாக, இலண்டன் நகரில் அலைகடலென திரண்டு மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை இலங்கைத் தமிழர்கள் நடத்தியிருந்தனர்.

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும் அந்தப் பேரணிக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

**'இளவரசர் சாள்ஸ் கொழும்புக்கு செல்ல வேண்டாம்' என்றும் பேரணியில் கோஷம் எழுப்பப்பட்டிருந்தது. பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்களின் உணர்ச்சிப் பிரவாகம் இளவரசர் சாள்ஸின் கவனத்திற்கு செல்லாமல் இருந்திருக்காது.**

கொழும்பு வந்தபின்னர் இளவரசர் சாள்ஸுக்கு செய்யப்பட்ட கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளும், அவரது நிகழ்ச்சிகள் பல இரத்துச் செய்யப்பட்டமையும் இனப்பிரச்சனையின் தீவிரத்தையும், உக்கிரத்தையும் இளவரசர் சாள்ஸுக்கு நன்கு உணர்த்தியிருக்கும்.

**பிரிட்டனிலும் அயர்லாந்து மக்கள் தங்கள் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திய வீரம் செறிந்த போராட்டத்தை பல ஆண்டுகளாக தொடர்ந்து நடத்தி வருகின்றனர். அயர்லாந்து மக்கள் விடுதலை படையின் கெரில்லாக்கள் பல தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர்.**

எனினும், பிரிட்டிஷ் அரசுக்கு சகல மட்டங்களிலும், சகல முனைகளிலும் சவால் விடுமளவுக்கு அவர்களது நடவடிக்கைகள் விரிவாக்கம் பெற்றிருக்கவில்லை.

இலங்கையில் விடுதலைப் புலிகளின் இராணுவ வல்லமையானது ஆட்சியாளர்களின் வாயில் கதவு வரை குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தலை கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது.

சாதிக்கக்கூடிய வல்லமை புலிகளிடம் இருக்கிறது என்பதை ஆட்சியாளர்கள் ஒப்புக்கொண்டதன் அடையாளமாகவே சுதந்திரப் பொன்விழா தினத்தன்று தலைநகரில் செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் அமைந்திருந்தன.

**பெப்ரவரி முதலாம் திகதி முதல் நான்காம் திகதிவரையான நான்கு நாட்களும் வெடிகுண்டு ஒன்றின்மீதும் அமர்ந்திருப்பது போன்றே நாட்டு நிலவரம் காணப்பட்டது.**

ஆட்சியாளர்களும், படையினரும் நான்கு நாட்களும் நிம்மதியாகத் தூங்கவே முடியாதளவுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் பெரிதாகியிருந்தது.

பொன்விழாவுக்கு விருந்தினர்களாக வந்திருந்த பிரமுகர்களை பத்திரமாக திருப்பி அனுப்பிவைக்க வேண்டும் என்பதும் ஆட்சியாளர்களின் பெரும் கவலையாக அமைந்திருந்தது.

**சுதந்திரப் பொன்விழா காட்சிகளை தொலைக்காட்சியில் நேரடியாக அஞ்சல் செய்திருந்தனர். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள், முப்படைத் தளபதிகள் ஆகியோரின் முகங்களில் இயல்பான மகிழ்ச்சியையோ, பெருமித உணர்வையோ காணக்கூடியதாக இருக்கவில்லை.**

விழா முடியும்வரை அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடக்கூடாதே என்ற படபடப்புத்தான் படை அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் முகங்களில் பிரதிபலித்தது.

நான்கு நாட்களாக ஏற்பட்டிருந்த பதற்றம் காரணமாகத்தான் கொண்டாட்ட மேடையில் பொலிஸ் மா அதிபர் மயக்கம் அடைந்து விழுந்திருந்தார்.

**சுதந்திரப் பொன்விழா தினத்தன்று வவுனியா யாழ்சாலை வழியாக கிளிநொச்சியில் இருந்து பஸ் ஒன்று விடப்படும். கிளிநொச்சியை சென்றடையும் ஜயசிக்குறுய் படையினர் அந்தப் பஸ்சில் வெற்றிச் செய்தியை அனுப்பி வைப்பர் என்றெல்லாம் நீண்டநாட்களாக கூறப்பட்டு வந்தது.**

ஆனால், சுதந்திரதினத்துக்கு முதல் நாளான பெப்ரவரி மூன்றாம் திகதியன்று கிளிநொச்சி நகர் மறுபடி புலிகளின் கையில் வீழ்ந்திருந்தது. கிளிநொச்சி சமரில் பலியான படையினரில் 41 பேரின் சடலங்களை புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்தினர் மூலம் படையினருக்கு அனுப்பி வைத்தனர்.

**சுதந்திரதினப் பொன்விழாவில் கிளிநொச்சியில் இருந்து வெற்றிச் செய்தியை அறிவிக்க இருந்த**



# எதிர்பார்ப்புக்களும்~ஏமாற்றமும்

ஒன்றை கொழும்பில் நடத்தி முடித்துவிட்டனர் விடுதலைப் புலிகள் என்றே கருதவேண்டியுள்ளது.

இத்தகைய சூழ்நிலைதான் சுதந்திரப் பொன்விழாவின் விசேட விருந்தினரான இளவரசர் சாள்ஸ் முதற்கொண்டு, வெளிநாட்டுப் பிரமுகர்கள் பலரை இங்குள்ள பிரச்சனையின் தீவிரத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கவும், உற்று நோக்கவும் செய்திருந்தது.

**இனப்பிரச்சனைக்கான தீர்வில் பல படிகள் முன்னேற்றம் காணப்பட்டுவிட்டது. வடக்கு-கிழக்கில் யுத்தமும் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது. சமாதானத்தை நிறுவும் இறுதிக்கட்டத்தில் இருக்கிறோம் என்று தமது முன்னைய பல்லவிகளை பாடுவதற்கு ஆட்சியாளர்களால் இயலாமல் போயிருந்தது.**

அவ்வாறு அவர்கள் கூறியிருந்தாலும் கேலிக்குரியதாகவே கருதப்பட்டிருக்கும். மூடிமறைக்க முடியாதளவுக்கு, தலைநகர் வரை பற்றி எரியும் பிரச்சனையின் தீக்கரங்கள் நீண்டிருந்தன.

எனவேதான் சாள்ஸின் உரையிலும் இனப்பிரச்சனையின் தீர்வுக்கான அவசியம் பற்றி சுட்டிக்காட்டியே ஆக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தது.

வெளியுலக அரசுகளின் மனிதாபிமானம், மனித உரிமைப் பேச்சுக்கள் முதலியன தாமாகத் தோன்றுபவை அல்ல. போராடும் மக்களின் பலம் மேலெழுந்து, உள்நாட்டுப் போர்கள் தீவிரமடைந்த பின்னர்தான் வெளியுலகின் உதடுகள் திறப்பதுண்டு.

**உலகின் மனச்சாட்சியை தொட்டு**

**அடிக்கடி ஜனாதிபதி கூறுவதைக் கேட்க முடிகிறது. ஜனாதிபதி சந்திரிக்கா கூறுகின்ற அரசியல் தீர்வும், விலைமதிப்பற்ற இழப்புக்களை கொடுத்து நிற்கும் தமிழ்பேசும் மக்கள் நாடி நிற்கும் அரசியல் தீர்வும் ஒன்றல்ல.**

வடக்கு-கிழக்கை பல கூறுகளாக்கி அரை குறையான தீர்வொன்றை தமிழ் மக்களின் தலையில் கட்டி விடுவதையே அரசியல் தீர்வென்று ஆட்சியாளர்கள் கருதி வருகின்றனர்.

**தாம் வழங்கும் தீர்வை மறுபேச்சின்றி தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய சூழலைத் தோற்றுவிப்பதையே, சமாதானத்தை ஏற்படுத்தும் தங்கள் முயற்சியாகவும், விருப்பமாகவும் ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர்.**

எனவே, ஜனாதிபதி சந்திரிக்காவோ, அவரது கட்சியினரோ கூறிவருகின்ற அரசியல் தீர்வு, சமாதானம் என்பவையும், தமிழ் பேசும் மக்கள் விரும்புகின்ற கௌரவமான தீர்வுடன்கூடிய சமாதானமும் ஒன்றல்ல என்பதையே தற்போது நன்கு அறியக்கூடியதாகவுள்ளது.

**ஆனால், உலகம் இதனை அறியாமல் செய்யும் வகையில் எத்தனையோ பிரசார தந்திரங்களை ஆட்சியாளர்கள் முடுக்கிவிட்டுள்ளனர்.**

வடக்கு-கிழக்கு போர் முனையில் வெற்றியை நெருங்கும் கடைசிக் கட்டத்தில் இருப்பதாக செய்யப்படும்

அதன் காரணமாகவே ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியாக அமையக்கூடியதும், சுதந்திரதினக் கொண்டாட்டத்துக்கே சவால்

விடக்கூடியதுமான இலக்கை புலிகள் தெரிவு செய்திருந்தனர்.

தலதாக் குண்டுவெடிப்பை வரவேற்க முடியாது. ஆனால், புலிகளின் தாக்குதல் எதுவும் நடைபெறாது இருந்திருந்தால், அதனையும் தமது பலத்தின் வெளிப்பாடாகவே அரசு பிரசாரம் செய்திருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**எப்படியோ, ஆட்சியாளரின் நினைப்புக்கு மாறாகவே நிகழ்ச்சிகள் யாவும் நடந்து முடிந்துள்ளன. சுதந்திரப் பொன்விழா ஆட்சியாளரின் எதிர்பார்புக்கு மாறாக, ஏமாற்றமான விழாவாகவே முடிவுற்றுள்ளது.**

பொன்விழாவில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த வெளியுலகப் பிரமுகர்களுக்கு மட்டுமன்றி தென்னிலங்கை மக்களுக்கும் புலிகள் தங்கள் பலத்தை உணர்த்தியுள்ளனர் என்பதையே அவதானிக்க முடிந்தது.

**"இலங்கையில் யார் ஆட்சியில் இருப்பது என்பதை பிரபாகரன்தான் தீர்மானிக்கிறார்" என்று** முன்பொருதடவை திரு.அனுரா பண்டாரநாயக்கா கூறியிருந்தார்.

சுதந்திரப் பொன்விழாவை எங்கு எப்படி நடத்துவது என்பதையும் புலிகள்தான் இம்முறை தீர்மானித்திருந்தனர்.

## சந்திக்கு வராத சங்கதிகள்

### நக்கீரன்

இளவரசர் சாள்ஸ் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியபோது தீவிபத்து ஒன்று நடைபெற்றது. அதனால் படைவீரர் ஒருவர் காயமடைந்தார்.

அதுவும் புலிகளின் வேலைதானோ என்று சாள்ஸின் பாதுகாப்பு வீரர்கள் பதற்றம் அடைந்தனராம். சாள்ஸும் சற்று கலவரமடைந்தார். பின்னர் ஒருவிதமாக சுதாகரித்துக் கொண்டு அணிவகுப்பை பார்வையிட்டார். அந்த நேரம் பார்த்து ஒரு நாய் குறுக்கே ஓடியது.

சாள்ஸை வரவேற்கச் சென்றவர்கள் கலவரமடைந்தனர். சாள்ஸ் சமாளித்துக் கொண்டு, செய்தியாளர்களிடம், "குண்டு துளைக்காத ஆடை அணிந்து வந்துள்ளீர்களா?" என்று கேட்டாராம். ஜோக்கடித்தாரா, நிலமையின் தீவிரம் உணர்ந்ததால் கேட்டாரா? என்று தெரியவில்லை.

☆☆☆

சுதந்திரதின விழாவில் கலந்து கொள்ள தமிழ்க் கட்சிகள் எதற்கும் அழைப்பு விடுக்கப் படவில்லை.

இதற்கிடையே கூட்டணியினர் அறிக்கை ஒன்று விடுத்திருந்தனர். "சுதந்திர தின விழாவில் கலந்துகொள்ளமாட்டோம்" என்று அறிக்கை முழங்கியது.

அறிக்கையை யார் விட்டார்களோ தெரியவில்லை. ஆனால் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் உண்மையை போட்டு உடைத்துவிட்டார்.

இலங்கை வானொலியில் இருந்து அவரிடம் கேட்டனர்: "நீங்கள் சுதந்திரதின விழாவில் கலந்துகொள்வீர்களா?"

அதற்கு சிவா சொன்ன பதில்: "எனக்கு



அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை!" கிடைத்திருந்தால் போயிருப்போம் என்பதுதான் அர்த்தமா?

தொலைக்காட்சிப் பேட்டியில், இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்திருக்கிறது என்றும் பொருளாதார சுதந்திரம்தான் முழுமையாகக் கிடைக்கவில்லை என்றும் திரு.சிவசிதம்பரம் கூறியிருந்தார்.

இன்னொரு விடயம் யாதெனில், சுதந்திர தின விழாவில் கலந்துகொள்ளமாட்டோம் என்று கூட்டணி விடுத்த அறிக்கையில் யாருடைய பெயரும் இடம்பெறவில்லை.

தலதா மாளிகை தாக்கப்பட்டதால் பெரும்பான்மை இனத்தினர் கோபமாக உள்ளனர். குறிப்பாக பௌத்த மதகுருமார் கோபத்தில் இருக்கின்றனர். தலதாமாளிகையில் சுதந்திரவிழா நடக்க முடியாமல் செய்து விட்டார்களே என்று கோபம்.

இவ்வாறான நிலையில் வடக்கு-கிழக்கில் இருந்து அலங்கார ஊர்த்தி வந்து கலந்து கொள்வது அவர்களது மனங்களை புண்படுத்தும் என்று கருதித்தான் தடை விதிக்கப்பட்டதாம்.

ஒரு காலத்தில் சுதந்திரதினத்தை துக்க தினமாக அறிவித்து, கறுப்புக் கொடி பறக்க விட்ட கூட்டணியினரால், இப்போது சுதந்திர தின பொன்விழா பற்றி உத்தியோகபூர்வமான அறிக்கைகூட விடமுடியவில்லையே!

சுதந்திரப் பொன்விழாவில் வடக்கு-கிழக்கு மாகாண சபையினரின் அலங்கார ஊர்திக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

குண்டோடு வரும் என்று பயந்து விட்டார்களாக்கும் என்று தமாஷாக நினைக்கக்கூடிய சமாச்சாரமல்ல இது.

அதுதான் விஷயம் என்றால், குண்டு இருக்கிறதா? என்று துருவிப் பார்த்துவிட்டு அனுமதித்திருப்பர்.

வடக்கு-கிழக்கு மாகாணசபை தலைமைச் செயலர் கிருஷ்ணமூர்த்திகூட விழாவில் கலந்து கொள்ளவில்லை.

தமிழ்க் கட்சித் தலைவர்களை விழாவுக்கு அழைக்காமல் விட்டதற்கு காரணமும் அதுதானாம்.

ஏனைய மாகாணசபைகளது அலங்கார ஊர்திகள் பவனியாகச் சென்றன. சிலவற்றில் தமிழ் எழுத்துக்கள் காணப்பட்டன. ஆனால் கொலைகளுடன்!

## கிண்ணத்தை தவறவிட்ட இலங்கை அணி

சுதந்திரதினத்துக்கு முன்பாக இந்தியாவில் மும்பாய் நகரில் இலங்கை கிரிக்கெட் அணிக்கும், இந்திய அணிக்கும் இடையே ஒருநாள் காட்சிப் போட்டி இடம்பெற்றது. ஹீரோ கிண்ணத்துக்கான காட்சிப் போட்டி.

கிளிநொச்சி சமர்க்கள 'ஸ்கோர்' சொல்ல முடியாத நிலையில், கிரிக்கெட் ஸ்கோரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

பகல் இரவு நேர ஆட்டம். அதனால் பெப்ரவரி 3ம் திகதி மாலை தொடங்கிய ஆட்டம் பெப்ரவரி 04ம் திகதி அதிகாலையில் முடிவடைந்தது. இலங்கை அணிக்கு கிண்ணம் கிடைத்திருந்தால் பெரிய சந்தோசமாக இருந்திருக்கும். ஆனால் தோற்றுப்போயினர். கிண்ணத்தை இந்தியா கைப்பற்றிக்கொண்டது.

ஜனாதிபதி சந்திரிக்கா ஆட்சிக்கு இது கஷ்டகாலம். போர் தொடங்கிய புதிதில் சூரியக்கதிர் வெற்றி ஒருபுறம். கிரிக்கெட் வெற்றிகள் மறுபுறம் என்று ஒரே யோகம்.

இப்போது இரு புறமும் தொடர் தோல்விகள். ஆயினும் மனதை திடப்படுத்திக்கொண்டு கருமம் ஆற்றுகிறார் ஜனாதிபதி.



படிப்பகம்

படிப்பகம்

# கொள்ளை ராணி பூலான்தேவி

**82**

தருவது **ரசிகன்**



**கடந்த வாரம்**

**கொள்ளைக் கோஷ்டியினர் சரணடைந்தால் மன்னிப்பு வழங்குவதாக பொலிசார் அறிவிக்கின்றனர். பிரபல கொள்ளைக்காரன் மல்கான் சிங் பொலிசாரிடம் சரணடைகிறான். மல்கானின் ஆள் ஒருவன் பூலானைச் சந்திக்கவருகிறான். இனி...**

மல்கான் சிங்கின் ஆள்மீது மான் சிங் சந்தேகித்தான். அதனால் பூலானை நேரடியாக சந்திக்க அனுமதிக்காமல், அவனை விசாரித்தான்.

தனியாக அவனை அழைத்துச் சென்று பேசிக் கொண்டிருந்தபோது அவன் சட்டென்று தன் இடுப்பில் இருந்து கைத்துப்பாக்கியை உருவினான்.

மான் சிங் அதனை எதிர்பார்க்கவில்லை. தன்னைச் சுடத்தான் துப்பாக்கியை நீட்டுகிறான் என்று நினைத்தான்.

ஆனால் மல்கான் சிங்கின் ஆள் தனது துப்பாக்கியை மான் சிங்கின் கைகளில் திணித்தான்

"மல்கான் சிங்தான் என்னை இங்கே அனுப்பினார். பூலான் தேவியிடம் ஒரு தகவல் கூறும்படி கட்டளையிட்டார். மல்கான் சிங் சரணடைய முன்னர் என்னிடம் சொன்ன தகவல் அது."

"என்ன தகவல்?" மான் சிங் கேட்க அவன் சற்றுத் தயங்குவது தெரிந்தது.

"தயங்காதே, என்னிடம் சொல்லலாம். நான்தான் மான்சிங்."

பெயரைச் சொன்னதும் வந்தவனின் சந்தேகம் விலகியது." பூலான் தேவியையும் பொலிசாரிடம் சரணடையுமாறும், அப்படிச் சரணடைவது என்றால் பிரபலமான அரசியல் தலைவர் ஒருவரின் அனுசரணையுடன் சரணடையுமாறும் கூறினார்."

ஏதோ பெரிய தகவல் சொல்லப் போகிறான் என்று பார்த்தால், அட.. இவ்வளவுதானா என்று போனது.

மான் சிங்கின் உதட்டில் மெல்லிய கோடாக புன்னகை மலர்ந்தது.

"உன் நல்ல நேரம், இதனை என்னிடம் கூறினாய். பூலான் தேவியிடம் கூறியிருந்தால் இந்நேரம் நீ உயிருடன் இருந்திருக்க மாட்டாய்!" என்றான் மான் சிங்.

வந்தவனுக்கு கிலி பிடித்துவிட்டது. மல்கான் சிங் கூறிய தகவலை பூலானிடம் தெரிவித்துவிட்டு, பூலானிடம் பணம் ஏதாவது பெற்றுக்கொள்ளும் திட்டத்தோடுதான் அவன் விரைந்து வந்திருந்தான்.

அதனால்தான் மான் சிங்கிடம் துப்பாக்கியையும் ஒப்படைத்தான். தன்னை சோதனையிட்டு துப்பாக்கியை எடுத்தால் சந்தேகம் வந்துவிடும். அதனால் தானாகவே கொடுத்துவிடுவது நல்லது என்று நினைத்தே துப்பாக்கியை ஒப்படைத்தான்.

இப்போது மான் சிங் கூறியதைக் கேட்டதும் அவனுக்கு பயம் பிடித்துக் கொண்டது. அவனைப் பார்க்க மான் சிங்குக்கு சிரிப்பாக இருந்தது.

"சரி சரி நீ போ, நான் சொல்லிக் கொள்கிறேன். இந்தா உன் துப்பாக்கி. பணம் இருக்கிறதா?" என்று கேட்க தலையைச் சொறிந்தான்.

தன்னிடம் இருந்த பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பிவைத்தான் மான் சிங்.

மல்கான் சிங் சரணடைந்தது பற்றி பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியை பூலானுக்கு கிராமத்து பெண் ஒருத்தி படித்துக் காண்பித்தாள். அந்தப் பெண்ணுக்கும் சரளமாக வாசிக்கத் தெரியாது. எழுத்துக் கூட்டிக் கூட்டி வாசித்துக் காண்பித்தாள்.

"கொள்ளைராஜா மல்கான் சிங் சரணடைந்தான். ஆனால் கொள்ளை ராணி பூலான்தேவி மட்டும் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டிருக்கிறாள்!" என்று ஒரு பத்திரிகை பொலிசாரைச் சாடியிருந்தது.

"கொள்ளைக்காரனுக்கு பொலிசார் கொடுத்த மரியாதையும், இராஜ உபசாரமும் அதிகம்!" என்றது இன்னொரு பத்திரிகை.

"இந்திய பாராளுமன்றத்திலும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன. மல்கான் சிங் போன்ற கொள்ளைக்காரர்கள் சரணடைந்து வருகின்றனர். அவர்களை வழிக்கு கொண்டுவர எம்மால்தான் முடிந்தது!" என்று காங்கிரஸ் கட்சி எம்.பி.கள் பாராட்டிப் பேசினார்கள்.

மல்கான் சிங் சரணடைய தூண்டுகோலாக இருந்த ராஜேந்திர சதுர்வேதி என்ற பொலிஸ் அதிகாரியையும் பாராட்டினர்.

ஆளும் கட்சி மார்தட்டிக் கொள்வதும், மக்களிடம் நல்ல பெயர் எடுப்பதும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு பொறுக்கவில்லை.

"கொள்ளையர்களைப் பிடிக்க முடியாமல் கும்பிடு போடுகிறது உங்கள் அரசாங்கம். சரணடைந்தது இந்த அரசாங்கமா? அல்லது மல்கான் சிங் போன்ற கொள்ளை ராஜாக்களா? இந்த நாட்டை ஆள்வது யார் என்றே சந்தேகமாக இருக்கிறது!"

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் சாடல்களை பத்திரிகைகள் முதன்மைப்படுத்தின.

பூலானுக்கு ஒன்றுமே புரியவில்லை. "முதலில் இந்த அரசியல்வாதிகளை சுட்டுத் தள்ள வேண்டும். அப்போதுதான் நாடு உருப்படும்!" என்றாள்.

பூலான் குழுவில் மான் சிங் தவிர நான்கு பேர்தான் இருந்தனர். ஏனையோர் விடைபெற்றுச் சென்றுவிட்டனர்.

தனது கிராமத்துக்கு சென்று மையாதீனையும் அவன் ஆட்களையும் பழிவாங்கும் எண்ணத்தை மான் சிங்கிடம் கூறினாள் பூலான்.

கிராமத்துக்குள் புகுந்து தாக்குவதற்கு ஆட்கள் போதாதே என்று தயங்கினான் மான் சிங்.

"நாங்கள் ஐந்துபேரும் ஐம்பது பேருக்கு சமம். துணிந்தால் துக்கமில்லை மான்சிங். புறப்பட ஆயத்தம் செய்!" என்று கட்டளை மாதிரியே கூறினாள்.

அன்றிரவே கிராமத்துக்குள் புகுந்தனர். நீண்ட நாட்களின் பின்னர் தன் கிராமத்துக்குள் காலடி எடுத்துவைக்கும்போது பூலானுக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது.

விக்கிரம் மல்லாவுடன் வந்து சென்ற பின்னர் இப்போதுதான் வருகிறாள். குனிந்து மண்ணைத் தொட்டுக் கும்பிட்டாள். அவள் கண்கள் கலங்கிவிட்டன.

வீட்டுக்குச் செல்ல வேண்டும்போல இருந்தது. ஆனால், பொலிசாருக்குத் தகவல் போனால் அவர்களுக்கு தொல்லை கொடுப்பார்கள்.. என்று நினைத்து தன் ஆசையை மனதுக்குள் புதைத்துவிட்டாள்.

மையாதீனின் வீட்டுக்குச் செல்லும்போது பூலான் தன் முகத்தை மறைத்து கறுப்புத் துணி கட்டியிருந்தாள்.

மையாதீன் வீட்டுக்கு காவலாக இரண்டு தடியர்கள் படுத்திருந்தனர். குறட்டைவிட்டு ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தனர்.

இரண்டுபேரையும் தட்டி எழுப்பினீர்கள். தூக்கக் கலக்கத்துடன் மிரள விழித்தனீர்.

இரண்டுபேரையும் பூலானுக்கு நன்றாக அடையாளம் தெரிந்தது. மையாதீன் கூறியபடி அவளை மரத்தில் கட்டிவைத்து அடித்தவர்களில் அந்த இரண்டுபேரும் இருந்தனர்.

பூலானின் துப்பாக்கி உயர்ந்தது. மான் சிங் தடுத்துவிட்டான்.

மான் சிங்கின் துப்பாக்கி முனையில் கத்தி செருகப்பட்டிருந்தது. கண் இமைக்கும் நேரத்துக்குள் அந்தக் கத்தியை இருவரது நெஞ்சிலும் செருகி எடுத்தான் மான் சிங்.

பூலானால்கூட அந்தக் காட்சியை சகிக்க முடியவில்லை. அத்தனை கோரமாக இருந்தது.

நிச்சயமான குத்து. கத்தக்கூட சந்தர்ப்பம் இல்லாமல் இரண்டுபேரும் வாய் பிளந்தபடி சுருண்டனர்.

"துப்பாக்கியால் சுட்டால் சத்தம் கேட்கும். நம்மில் ஆட்கள் அதிகமில்லை. முடியுமான வரை அமைதியான வேட்டைதான்." என்று முன்கூட்டியே கூறிவைத்திருந்தான் மான் சிங்.

பூலான் கோபத்தில் உணர்ச்சிவசப்பட்டதால்தான் இருவரையும் சுட்டுக் கொல்ல எத்தனித்தாள். நல்ல வேளையாக மான் சிங் தடுத்துவிட்டான்.

மையாதீனின் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். நீண்ட தட்டலின்பின்னர் கதவைத் திறந்துவந்தது மையாதீனின் மனைவி.

"மையாதீன் எங்கே?" மான் சிங்தான் கேட்டான். அவளது கண்களில் பயம் குடிகொண்டது. வீட்டுக் காவலாக இருந்தவர்கள் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை அவள் கண்கள் கண்டுவிட்டன.

"ஐயோ..." பயத்தில் கத்தியபடி கதவை மூட முயன்றாள். அதற்குள் உஷாராகிவிட்ட மான் சிங் கதவில் தன் உடலால் மோத, மையாதீனின் மனைவி கதவால் அறைபட்டு பின்னே தள்ளப்பட்டாள்.

உள்ளே புகுந்து மையாதீனைத் தேடினார்கள். ஆள் எவருமே வீட்டில் இல்லை. இன்னொரு இளம் பெண்தான் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். மையாதீனின் மனைவியின் சகோதரியாக இருக்கவேண்டும் என்பது முகத்தில் தெரிந்தது.

மையாதீனின் அதிஷ்டம், அவன் அன்றுதான் வியாபார விடயமாக வெளியூர் போயிருந்தான்.

மையாதீன் அங்கு இல்லை என்றதும் பூலானுக்கு ஏமாற்றமாகிவிட்டது. ஆனாலும் கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட விரும்பவில்லை.

'மையாதீனின் மனைவியின் இடுப்பில் இரும்புப் பெட்டி சாவி பத்திரமாக இருந்தது. பணக்கொழுப்பால்தானே இத்தனை ஆட்டம் போட்டார்கள். எங்கள் குடும்பத்தை படாத பாடுபடுத்தினார்கள்.' பூலான் மான் சிங்கின் காதோடு கட்டளையிட்டாள். "கிடைப்பதையெல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள். சாவி அவளது இடுப்பில் இருக்கிறது."

சாவிக் கொத்தைக் கொடுக்க அவள் மறுத்தபோது கன்னத்தில் அறைபட்டாள். அதனால் சாவிக் கொத்தை கொடுத்துவிட்டு கத்த முயல, அவளது சகோதரியின் கழுத்தில் பூலானின் துப்பாக்கி உரசியது.

"இங்கேபார்!, நீ சத்தம் போட்டேயானால், அவள் இனிமேல் சத்தமே போட முடியாமல் செத்துப் போவாள்!" என்றான் மான் சிங். அதன்பின்னர் அவள் அடங்கிப் போனாள்.

இரும்புப் பெட்டியில் பணமும், கொத்துக் கொத்தாக நகைகளும் இருந்தன. அனைத்தையும் வாரியள்ளி துணி மூட்டை போல கட்டிக்கொண்டனர்.

மையாதீனின் மனைவி அணிந்திருந்த நகைகளும், அவள் சகோதரி அணிந்திருந்த நகைகளும்கூட விட்டுவைக்கப்படவில்லை.

மையாதீனின் மனைவியையும், சகோதரியையும் அறை ஒன்றுக்குள் போட்டுப் பூட்டிவிட்டு அவர்கள் சென்றனர்.

நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த களஞ்சியப்பகுதிக்கும் தீவைத்தாள் பூலான்.

மையாதீனைக் கொல்வதைவிட அவன் செல்வத்தை அழித்ததுதான் பொருத்தமான தண்டனை என்று நினைத்தாள் பூலான்.

இனிமேல், தன் பணத்திமிர், அகங்காரம் எதுவும் இல்லாமல் இழந்ததை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிருக்கவே அவனுக்கு ஆயுள் போதாமல் இருக்கப்போகிறது. பூலானுக்கு மனம் முழுக்க சந்தோசம் பரவியிருந்தது.



மல்கான்சிங் சரணடையும் காட்சி

உத்தரப்பிரதேச முதலமைச்சர் பதவியை வி.பி.சிங் துறந்திருந்தார். மத்திய பிரதேசத்தில் அர்ஜுன் சிங் முதலமைச்சரானார்.

கொள்ளைக் கோஷ்டிகளை சரணடையச் செய்யும் நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் இந்திரா காந்தி அர்ஜுன் சிங்குக்கு அறிவித்திருந்தார்.

மல்கான் சிங் சரணடையக் காரணமாக இருந்த பொலிஸ் அதிகாரி ராஜேந்திர சதுர்வேதியை நேரில் அழைத்துப் பாராட்டினார் இந்திரா காந்தி.

"மிஸ்டர் சதுர்வேதி, பூலான்தேவியையும் உங்களால் சரணடைய வைக்க முடியுமா? முயற்சித்துப்பாருங்கள். அல்லது பிடித்துக் கொள்ளப்பாருங்கள்!"

சதுர்வேதி பணிவாக மறுத்தார். "பிடிப்பது முடியாத காரியம். 200ற்கு மேற்பட்ட கிராம மக்கள் பூலான்தேவிக்கு ஆதரவாக இருக்கிறார்கள். பூலான்தேவியை அவர்கள் ஒருநாளும் காட்டிக்கொடுக்க மாட்டார்கள். அவளைப் பற்றிய தகவல்களைப் பெறுவதும் கடினம்."

"ஆகவே...?"

"சரணடைய வைப்பதுதான் உத்தமம்."

"ஒ.கே.. உங்கள் முயற்சி பலிக்கட்டும். என் வாழ்த்துக்கள்." என்றார் பிரதமர் இந்திரா காந்தி.

எப்படியாவது பூலான் தேவியை சரணடைய வைத்துவிடலாம் என்ற நம்பிக்கையுடன் காரியத்தில் இறங்கினார் சதுர்வேதி.

(தொடர்ந்து வரும்)

## விளாசல் மன்னருக்கு சிறை



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் நாயகன் போய்கொட். கிரிக்கெட் போட்டிகளின் நேரடி வர்ணனைகளில் இப்போது தன் குரலால் விளாசிக்கொண்டிருக்கிறார்.

சமீபத்தில் தனது முன்னாள் மனைவியை இவர் விளாசியதால் விவகாரம் விகாரமாகி விட்டது. மூன்றுமாத சிறையும், ஐந்தாயிரம் பவுண்ட் அபாரதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

போய்கொட்டுக்கு 57 வயது. முன்னாள் மனைவி மார்க்ரெட்டுக்கு 46 வயது. மார்க்ரெட் கம்பியூட்டர் கம்பனி நடத்திவருகிறார். இருவரும் விவாகரத்து செய்து கொண்டபோதும், வியாபாரரீதியான தொடர்பு இருந்தது.

அந்த வியாபார விஷயத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே முன்னாள் மனைவியின் கன்னத்தில் 20 தடவைகள் விளாசினாராம் போய்கொட்.

உடனே விவகாரம் நீதிமன்றத்துக்குப் போனது. விளாசல் மன்னருக்கு சிறையும், தண்டமும் விதித்து தீர்ப்பளித்தார் நீதிபதி.

தீர்ப்பு வெளியான நாள் அன்று கிரிக்கெட் போட்டி ஒன்றை நேரடி வர்ணனை செய்து கொண்டிருந்தார் போய்கொட்.

## மேலும் சில காதலிகள்

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் பதவிக்கே உலை வைக்கும் அளவுக்கு 'செக்ஸ்' புகார்கள் கிளம்பியிருக்கின்றன.

கிளின்ரனை இப்போது ஆட்டிப் படைப்பவர் மோனிகா லாவின்ஸ்கி. 24 வயதான மோனிகா 18 மாதமாக கிளின்ரனுடன் களிப்புடன் இருந்தாராம்.



எலிசபெத்

"வெள்ளை மாளிகையில் கூட விடமாட்டார். ஒரு ஐந்து நிமிடம் கிடைத்தால்கூட நான் படாதபாடு படவேண்டும். ஃபோன் மூலம் கிளுகிளுப்பாகப் பேசுவதும் அவருக்கு பிடிக்கும். அதனையும் பதிவு செய்து வைத்திருக்கிறேன்," என்கிறார்.

மோனிகா ஒருபுறம் இப்படிக் கலக்கிக் கொண்டிருக்கையில் கிளின்ரனின் முன்னாள் காதலிகள் சிலரும் வாய்திறந்திருக்கிறார்கள்.

எலிசபெத் வோர்ட் பிரமாதமான அழகி. ஆர்கன்ஸாஸ் மாநில அழகிப்போட்டியில் 1982ல் தெரிவானவர். அப்போது 21 வயது.

அழகியாகத் தெரிவு செய்யப்பட்டதை பாராட்ட கிளின்ரன் அழைத்தார். இவரும் சென்றார். கிளின்ரனின் அன்புப் பிடியில் சிக்கினார் கட்டழகி. ஆனால் இவர் இப்போதும் கிளின்ரனை நல்ல நண்பராக பாராட்டுகிறார். அதனால் சாட்சி சொல்ல மறுத்துவிட்டார்.



ஷேப்லி

"செக்ஸ் ஒரு தவறா? கிளின்ரன் போல இளம் அதிபர் கிடைப்பார்களா?" என்கிறார் எலிசபெத் வோர்ட்.

இன்னொரு அழகியின் பெயர் ஷேப்லி சாலி மெர்டியூ. இவரும் ஆர்கன்ஸாஸ் மாநில முன்னாள் அழகிதான்.

1983ல் கிளின்ரனுடன் நான்கு மாத கால உறவு இருந்தது. இவரும் கிளின்ரனைப் பாராட்டுகிறார். "இனிமையானவர். நல்லவர். தனி வாழ்க்கை எல்லோருக்கும்தான் இருக்கிறது. யார் யோக்கியம்?" என்கிறார்.


ஷீலா லோரன்ஸ் சுவிற்ஸர்லாந்து முன்னாள் தூதரின் மனைவி. கணவர் இறந்து விட்டார். கிளின்ரனுடன் நெருக்கம். ஆனால் வெளியே சொல்லமாட்டார்.

லின்கோலா சலிவன் என்ற அழகியுடனும் கிளின்ரனுக்கு 'நட்பு' இருந்தது. 1970களில் இந்த நட்பு நிலவியது. தற்போது பொப்பாடகர் ஸ்டீவ் வொண்டருடனும் நட்பு வைத்திருக்கிறார் லின்கோலா.

இப்படிக் கிளின்ரனின் காதலிகள் பட்டியலை பிரசுரித்துக் கொண்டிருக்கின்றன அமெரிக்க பத்திரிகைகள்.

## விலை என்ன?

அராபிய ஷேக்குகள் வெளிநாட்டுப் பெண்களை மனைவிகளாக அடைய ஆசைப்படுகிறார்கள்.



வெளிநாட்டுப் பெண்களை விலை கொடுத்து வாங்கியும் தங்கள் அந்தப்புரங்களில் வைத்துக் கொள்கிறார்கள்.

வெளிநாட்டுப் பெண்களை வாங்குவது, தடபுடலான திருமண விழாக்களைச் செய்வது என்று பணம் விரயமாவதைத் தடுக்க ஐக்கிய அரபுக் குடியரசின் அதிபர் புதிய உத்தரவு ஒன்றை போட்டிருகிறார்.

"ஒரு வெளிநாட்டுப் பெண்ணை வாங்க 5450 அமெரிக்க டொலர்களுக்கு மேல் செலவழிக்கக்கூடாது. ஒரு நாளுக்கு மேல் திருமணவிழா ஆடம்பரங்கள் கூடாது. சாப்பாட்டுக்கு ஒன்பது ஒட்டகங்களுக்கு மேல் கொல்லக் கூடாது!" என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## டெண்டுல்கர்-ராகுல் மோதலா?



இந்திய அணியில் ஒருநாள் போட்டிகளில் இருந்து ராகுல் திராவிட்டை நிறுத்திவைத்தனர் அல்லவா? அந்த விவகாரம் இந்தியப் பத்திரிகையாளர்களால் அலசப்பட்டிருக்கிறது.

அப்போது கப்டனாக இருந்த டெண்டுல்கருக்கும், ராகுல் திராவிட்டுக்கும் இடையிலான சிறு பிணக்குத்தான் அவர் ஒதுக்கிவைக்கப்பட்ட காரணம் என்று சில பத்திரிகைகள் கூறியுள்ளன.

'பெப்சி' நிறுவனம் டெண்டுல்கரை விளம்பரத்திற்காக அணுகியதாம். டெண்டுல்கர் கேட்ட தொகையை கொடுக்க முடியாமல் அலறியடித்து ஓடிவிட்டனர். அதன் பின்னர்தான் கொக்கோ கோலாவுக்கு விளம்பரம் செய்தார் டெண்டுல்கர்.

ராகுல் திராவிட் இந்திய அணியில் முன்னணிக்கு வந்த பின்னர் அவரை அணுகியது பெப்சி. அதனை அறிந்த டெண்டுல்கர் "பெப்சிக்கு விளம்பரம் செய்யவேண்டாம்!" என்று ராகுல் திராவிட்டிடம் கூறினாராம்.

ஆனால் ராகுல் திராவிட் அதனைக் கேட்கவில்லை. பெப்சிக்காக போஸ் கொடுத்தார். அதற்குப் பழிவாங்கத்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவில் ராகுல் திராவிட்டுக்கு எதிராக பேசினார் டெண்டுல்கர் என்கிறது தமிழக சஞ்சிகை ஒன்று.

ஆனால் டெண்டுல்கர் அவ்வாறு செய்யக்கூடியவர் அல்லவே என்றும் பலர் அபிப்பிராயப்படுகின்றனர். எனினும் ஆட்டத்தில் எவ்வித குறையுமில்லாமல் இருந்த ராகுல் திராவிட்டை திடீரென்று நிறுத்தியது கிரிக்கெட் இரசிகர்களுக்கும் புதிராகவே இருந்தது.

## மறுபடி மருமகள்

பிரிட்டிஷ் அரச குடும்ப முன்னாள் மருமகள் சாராவை டயானாவின் பிரிவு மிகவும் பாதித்துவிட்டது.



"டயானா எனது ஆத்மார்த்தமான தோழி. அவரது பிரிவு எனக்குள் மெல்ல மெல்ல மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. டயானா என்னுடன் வாழ்கிறார்," என்று சோகமாகப் பேட்டியளித்துள்ளார் சாரா.

ஆண்ட்ரூ-சாரா தம்பதிக்கு இரு பிள்ளைகள் உள்ளனர். வார இறுதி நாட்களில் பிள்ளைகளைச் சந்தித்து வந்தார் சாரா. டயானா மறைவின் பின்னர் அரச குடும்பத்துடன் மறுபடி ஒட்ட ஆரம்பித்திருக்கிறார் சாரா என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சாரா சமூக சேவைகளில் ஈடுபாடு காட்டி வருகிறார். டயானா போல புகழ்பெற ஆசைப்படுகிறார். மறுபடி அரச குடும்ப மருமகள் என்ற பெருமையைப் பெறவும் நினைக்கிறார் என்கிறார்கள்.

டயானாவுக்குக் கிடைத்த புகழைக் கண்டு அரச குடும்பமே அரண்டுதான் போயிருக்கிறது. அதனால்தான் சாள்ஸ்கூட குழந்தைகளை கொஞ்சத் தொடங்கியிருக்கிறார். பந்தா இல்லாமல் மறுபடி பழகத் தொடங்கியுள்ளார். மகாராணியிடம் கூட சின்னச் சின்ன மாறுதல்கள் தெரிகின்றன.



www.padippakam.com

www.padippakam.com

## நீளமான தும்பி


→ உணவு உட் கொள்ளுவதில் அசகாய சூரர்களாக இருக்கும் பலர் உடல் மிக மெலிந்தே காணப்படுவர். எவ்வளவு அதிகம் சாப்பிட்டாலும் எலும்பும் தோலுமாகத்தான் காட்சியளிப்பார்கள்.

தும்பிகளும் இதே ரகத்தைச் சேர்ந்தவைதான். படத்தில் காணப்படும் இந்தத் தும்பி சாதாரண ஊசியைப் போன்ற தோற்றத்தில்தான் தென்படும். ஆனால் இதன் எடையைப் போன்ற அளவு உணவினை 30 நிமிடங்களில் தின்று தீர்த்துவிடும்.

**பெரியது:**

மத்திய, தென் அமெரிக்காவில் காணப்படும் தும்பிகள் தான் உலகில் மிகப் பெரியவை. அந்தத் தும்பிகளிலும் இங்கு காணப்படும் தும்பிதான் உலகில் இன்றுவரை உள்ள தும்பிகளில் மகா மகா பெரியதும்பி. முழு அளவுப் படம் அப் படியே பிரசுரமாகியுள்ளது. அளந்து பார்த்துக்கொள்ளுங் கள். சிறகின் ஒரு முனையில் இருந்து மறுமுனைக்கு இடைப்பட்ட நீளம் 191 மில்லி மீட்டர். உடலின் நீளம் 120 மில்லி மீட்டர்.

உலகில் மிகச் சிறிய தும்பி மியன்மாரில் காணப்பட்டது. அதன் சிறகு நீளம் 17.6 மி.மீட்டர் உடலின் நீளம் 18 மில்லி மீட்டர். ■






## திருமணச் சாதனை

↑ காதலர் தினத்தை முன்னிட்டு ஒரு உலக சாதனை திருமணச் செய்தி. 1991ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி அவுஸ்திரேலியாவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கிளேயர் நகரில் வித்தியாசத் திருமணம் ஒன்று நடைபெற்றது. மணமகனின் வயது ஆக அதிகமில்லை 102. மணமகளின் வயது 83. (முகத்தில் என்னமாய் ஒரு வெட்கம் பாருங்கள்) மணமகன் பெயர் மின்னி மன்றோ. மணமகன் பெயர் டட்லி ஹிட். இருவரும் மனம் விரும்பி மணம் செய்துகொண்டார்கள். உலகில் அதிக வயதான மணமக்கள் என்று உலக சாதனை படைத்துவிட்ட குதூகலம் இருவர் முகத்திலும் பளிச்சென்று தெரிகிறதல்லவா. மங்களம் உண்டாகட்டும். ■

↓ முன்னமும் இவர் படத்தை தகவல் பெட்டியில் பார்த்த ஞாபகம் இருக்கிறதல்லவா. பார்க்காதவர்களுக்கு சுருக்கமான விளக்கம்.

1943ம் ஆண்டு பிறந்தவர் ரொசாலி பிரட்ஃபோட். உண்பதில் சிறந்து விளங்கியதால் உடல் பெருத்துக் கொண்டே இருந்தது. எந்தக் கடையில் அரிசி வாங்கினீர் என்று கேட்டால் கடைப் பெயரைச் சொல்லிவிட்டு பேரய்விடுவாரே தவிர, உடல் பெருக்கத்தை நினைத்து அலுட்டிக்கொள்ள மாட்டார்.

உண்டார். உண்டார். உண்டுகொண்டே இருந்தார். 1987ல் 44 வயதில் அம்மணியின் எடை 544 கிலோ.

எடை கூடியதால் இருதயக் கோளாறு ஏற்பட்டது. டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். நாவுக்கு கடும் கட்டுப்பாடு விதித்தனர். பயிற்சிகள் கொடுத்தனர். விடா முயற்சியும், டாக்டர்களின் கவனிப்பும், உணவுக் கட்டுப் பாடும் காரணமாக எடை குறையத் தொடங்கியது. ஏழுவருட முயற்சியால் மொத்தம் 416 கிலோ எடை போயே போச்சு.

128 கிலோ எடையுடன் மெல் இடை பெண்மணியாக கணவருடன் காட்சி தருகிறார் பாருங்கள்.

உடல் எடைக் குறைப்பில் இதுதான் உலகசாதனையாக கருதப்படுகிறது.

அன்று இவரைக் குண்டாகக் கண்டவர்கள் இன்று கண்டால் நம்ப மறுக்கிறார்களாம்.

'நான அவளதான' என்று நிருபிப்பதில போதும் போதுமென்றாகி விடுகிறதாம். உடல் உருவம் மாறியதால் உள்ளம் பூரித்து நிற்கிறார்.

## நான் அவள்தான்







## பெரிய பாதம்



↑ அண்ணருக்கு காலணி விசேஷமாக சொல்லித்தான் செய்திருப்பார்கள். ஏன் தெரியுமா? உலகிலேயே மிகப் பெரிய்ய பாதம் அன்னாரின் பாதம்தான். பாத அளவு 58 அங்குலம்.

அன்னாரின் பெயர் நிக்கோலய் போலியகொஃப். பிரிட்டனைச் சேர்ந்தவர்.

இவர் ஒரு சர்க்கஸ் கோமாளி. 'போட்றம்' என்ற சர்க்கஸ் கம்பனியில் 1930 முதல் 1967 வரை கோமாளியாக தொழில் புரிந்தார்.

1967ல் அக்கம்பனி இழுத்து மூடப்பட்டது. அப்போது அன்னாருக்கு 74 வயது. அந்த வயதிலும் நகைச் சுவையால் மக்களைக் கவர்ந்தார்.

அன்னாரைப் பாராட்டி எலிசபெத் மகாராணியார் வெகுமதி அளித்து கௌரவித்தார்.

அச்சமயம் மகாராணியாரின் பாதங்களையும், அன்னாரின் பாதங்களையும் சேர்த்து எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது.

பாத அளவு வித்தியாசம் நன்கு தெரிகிறதல்லவா. பாதத்தால் பார் அறியும் சாதனையாளராகிவிட்டார். இன்று அவர் உயிருடன் இல்லை என்பது சோகமான செய்தி. ■

**த க வ ல் பெ ட் டி**

## கடும்பலிகொண்ட கடற்போர்

→ போர் என்றால் போர் அப்படி ஒரு போர். கடற்போர். மொத்தம் 282 போர்க் கப்பல்கள் சண்டையில் குதித்தன. 1,996 விமானங்களும் சண்டையில் ஈடுபட்டன.

யப்பாடா, இதெல்லாம் எங்கேயப்பா என்று பிரமிப்பாக இருக்கிறதல்லவா? இரண்டாம் உலகப் போரில் பசுபிக் கடலில் நடைபெற்ற கடற்போரில்தான்!

இதுவரை உலகில் நடைபெற்ற கடற் போர்களில் பாரியது அந்தக் கடற் போர்தான். ஜப்பானின் ஆதிக்கத்தில் இருந்த பசுபிக் கடற்பிராந்தியத்தை மீட்பதற்காக சோவியத்யூனியன், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நேசநாடுகள் இணைந்து கடற்போர் நடத்தின.

நேசநாடுகள் மூன்றும் சேர்ந்து 218 கப்பல்களை இறக்கிப் போரிட, பாவம் ஜப்பான் ஆக, 64 கப்பல்களை வைத்துக் கொண்டு எதிர்த்து சண்டையிட்டது. 1944 அக்டோபர் 22 முதல் 27 வரை கடற்போர் நீண்டது. ஜப்பானின் 26 கப்பல்கள் நாச மாகின. நேசநாடுகள் தரப்பில் அமெரிக்க கப்பல்கள் ஆறு மூழ்கடிக்கப்பட்டன.

கடற்போர் நடைபெற்றுக் கொண்டி ருக்கையில் நேசநாடுகளின் விமானங்கள் துல்லியமாக நடத்திய குண்டுவீச்சில்தான் ஜப்பான் கப்பல்கள் நாசமாகின. அமெரிக்க விமானி ஒருவர் ஜப்பான் கப்பலுக்கு குறிவைக்கும் போது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இங்கே உள்ளது.


முதல் ஒரு குண்டைப் போட கப்பல் தடுமாறு கிறது. இரண்டாவது குண்டை வீச குறிபார்க்கிறார்.

இதுவரை நடந்த கடற்போர்களில் அதிக கப்பல்கள் அழிந்த கடற்போர் இதுதான்.

இதுவரை நடைபெற்ற கடற்சமர்களில் அதிக கடற்படை வீரர்கள் பலியான கடற்போர் எது தெரியுமா? முதலாம் உலகப் போரில் 1916 மே 31ம் திகதி நடைபெற்ற கடற்போர்தான் அது.

டென்மார்க்கில் உள்ள ஜீட்லண்ட்டில் பிரிட்டன் கடற்படையும் ஜெர்மன் கடற்படையும் மோதின. ஜெர்மன் 101 யுத்தக் கப்பல்களை இறக்கியது. பிரிட்டன் பதிலடி நடத்த 151 யுத்தக் கப்பல்களை இறக்கியது. ஒருநாள் சண்டையின் முடிவில் பிரிட்டன் 14 கப்பல்களையும் 6 ஆயிரத்தி 97 கடற்படை வீரர்களையும் இழந்தது.

ஜெர்மன் 11 யுத்தக் கப்பல்களையும் 2 ஆயிரத்தி 545 கடற்படை வீரர்களையும் இழந்தது. இரு தரப்பிலும் மொத்தமாக 8 ஆயிரத்தி 642 படையினர் பலியாகினர். இந்த வேதனையான சாதனையை இரண்டாம் உலகப் போரில் நடைபெற்ற கடற்போர்களால்கூட முறியடிக்க முடியவில்லை.





படிப்பகம்

## அதே ஷாலினிதான்

'காதலுக்கு மரியாதை' படத்தில் விஜய் ஜோடியாக வெளுத்துக் கட்டியிருக்கிறார் ஷாலினி. குட்டிப் பாப்பாவாக நடித்து நெஞ்சத்தைக் கிள்ளிய பேபி ஷாலினியா இவர்? நம்ப முடியாத மாற்றம் முகத்திலும், நடிப்பிலும்.

'ஓசை', 'நிலவே மலரே', 'ராஜா சின்ன ரோஜா', 'பந்தம்' உட்பட பல படங்களில் நடித்து லிட்டில் சூப்பர் ஸ்டாரினியாக வலம் வந்தவர் பேபி ஷாலினி. இப்போது காதலுக்கு மரியாதையில் கல்லூரி மாணவியாகப் பார்க்கும்போது நம்பவே முடியவில்லை.

படம் ஹிட்டானதால் ஷாலினியும் சந்தோசத்தில் இருக்கிறார். பல வாய்ப்புக்கள் தமிழில் வந்திருக்கிறதாம். 'பெயர் சொல்லும் படியான பாத்திரங்களில் மட்டும்தான் நடிப்பேன்!' என்கிறார்.

## காதலிகள் பட்டியல்!

இந்தி நடிகர் அக்ஷய்குமார் திரையில் மட்டுமல்ல, நிஜத்திலும் காதல் மன்னர்தான். ஆனாலும் மனிதர் பேராசைக்காரர்.

பூஜாபத்ரா, ஆயிஷா, ரேகா, ரவீனா ராண்டன் என்று காதலிகள் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

தற்போது நிபுணிகாவுடனும் ஒன்றிப்போயிருக்கிறார். இதனால் மனம் வெறுத்துப் போயிருக்கிறார் ரவீனா. அக்ஷய் குமாரின் நீண்டகால காதலி ரவீனாதான். ஏனையோர் தற்காலிகக் காதலிகள். அதனால் அவர்களுக்கு அக்ஷய் யாருடன் கொட்டமடித்தாலும் கவலை இல்லை.

## ஜோடி ராதிகா

'சூர்யவம்சம்' தமிழில் சூப்பர் சூப்பர் ஹிட். இந்தியில் அதனை தயாரிக்கப்போகிறார்கள். கதாநாயகன் அமிதாப்பச்சன்.

கதாநாயகிகள் யார் தெரியுமா? ராதிகா, சவுந்தர்யா. அமிதாப்பச்சனோடு ஜோடியாக நடிப்பதை அறிந்ததும் இரண்டுபேருமே நிலை கொள்ளாத சந்தோசத்தில் மிதக்கிறார்கள்.

## சூர்யா ஜோடி புதுமுகம்


சூர்யா கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் ஒன்றுக்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'பூவெல்லாம் கேட்டுப்பார்' ஜோதிகா என்னும் பெயரில் புதுமுகம் கதாநாயகியாக அறிமுகமாகிறார். ஜோதிகா வேறு யாருமல்ல நக்மாவின் சகோதரி.

'ஆசை', 'நேருக்கு நேர்' படங்களை இயக்கிய வஸந்த் இயக்கப் போகிறார். இசை: யுவன் சங்கர் ராஜா. வசனம் கிரேஸி மோகன். நாசர், விஜயகுமார், சுமித்ரா, டெல்லி கணேஷ் ஆகியோரும் நடிக்கவுள்ளனர்.

## காத...
## காதல...

பெப்ரவரி 14...
கோட்டை', 'காத...
அதிகளவு இடம்...

1. காதல் அ... சிறகினிலே 6. க... 11. காதல் கோ... கண்மணியே 16. ... மந்திரம் 21. கா... படிக்கட்டுக்கள் ... 30. காதல் உயில்...



அரவிந்தசாமி-மனிஷா கொய்ராலா

## காதோடு சொல்லுகிறோம்

'நம்மவர்' மூலம் வில்லனாகியவர் அவர். அதன் பின்னர் குணசித்திர வேடங்களிலும் நடித்துவருகிறார். திருமணமாகி விட்டது. அதேசமயம் அவருடனேயே செயலாளர் என்ற பெயரில் ஒரு இளம் பெண் ஒட்டியிருக்கிறார். வெளியூரில் படப்பிடிப்பு என்றால் இருவரும் ஒரே அறையில் தங்கிக்கொள்கிறார்களாம்.

'ரா' நடிகையின் தங்கை நடிகையும் முன்றெழுத்து 'ரா' நடிகரும் மறுபடியும் நட்பை புதுப்பித்துக் கொண்டுள்ளனர். இதுபற்றி நடிகர் என்ன சொல்கிறார்? "அவள் எனக்கு நல்ல ஃப்ரெண்ட். அதேபோல எனக்குத் தெரிந்த சிலருக்கும் ஃப்ரெண்டா கம்பனி கொடுத்திருக்கிறாள்" என்கிறார்.

வில்லனாக அறிமுகமாகி கதாநாயகனாக உயர்ந்துள்ள 'பிரகாச'மான நடிகர் பற்றி ஏகப்பட்ட புகார்கள். ஆரம்ப காலத்தில் பந்தா எதுவும் இல்லாமல் தயாரிப்பாளர்களுடன் ஒத்துழைத்தவர். அதனால் நல்ல நடிகர் என்று பெயர் வாங்கினார். ஆனால் இப்போது ஜாலியான பாதையில் ஏராளமாகச் செலவு செய்கிறார். செலவுக் கணக்கை படத் தயாரிப்பாளர்களின் தலையில் கட்டி விடுகிறாராம்.

மந்திரமான நடிகையின் வலையில் சிக்கியிருப்பவர்கள் பட்டியலில் கடைசியாகச் சேர்ந்திருப்பவர் தெலுங்குப் பட இயக்குநர் ஒருவர். ராகவேந்திர பக்தரான அந்த இயக்குநர் ஏற்கனவே பல நடிகைகளின் அன்புக்குப் பாத்திரமானவர். இப்போது மந்திர நடிகையின் மாய வலையில் மாட்டிக் கொண்டிருக்கிறாராம்.

பெயரிலேயே வசியம் உள்ள அந்த நடிகை 'சான்ஸ்' பிடிக்க புதுப்புது உபாயங்களைக் கையாளுகிறாராம். அதில் ஒன்று: "எனக்கு இன்னும் ஆறு மாதத்தில் கல்யாணம். அதனால் தெலுங்கு மலையாளப் படம் எதிலும் நடிக்காமல் இருக்கிறேன். இப்போது உங்களுக்கு தேவையானால் நடித்துத் தருகிறேன்." என்று சில தமிழ்ப்பட தயாரிப்பாளர்களுக்கு செல்லமாக 'சிக்னல்' கொடுத்துக் கொண்டிருக்கிறாராம்.

மும்பாயில் முதலிடத்தில் இருந்த அந்த நடிகை தமிழில் நடிக்க சம்மதித்த காரணம் 'சாமி' நடிகர்தானாம். 'சாமி' நடிகரில் தனிப் பிரியம் உள்ளவராம் நடிகை. அதனால்தான் அவருடன் ஜோடியாக நடிக்க பச்சைக்கொடி காட்டினாராம். தொழில்நுட்பவியலாளர் என்பதற்கு ஆங்கிலச் சொல் என்ன? அதுதான் படத்தின் பெயர்.

"முக்கனி சர்க்கரை கசப்பதுண்டோ
முழுமதி முகத்தை வெறுப்பதுண்டோ
கன்னத்தின் கிண்ணத்தில் மதுவிருக்க
கேட்பவர் கேட்டால்
மறுப்பதுண்டோ?"



விக்னேஷ்-இந்திரஜா
படம்: வேலை

## '97இல் சூப்பர் விஜய்

சென்ற ஆண்டின் சூப்பர் ஸ்டார் விஜய்தான். விஜய் நடித்து வெளியான ஐந்து படங்களும் வெற்றி.

1997ல் 76 தமிழ்ப்படங்கள் வெளியாகின. அதில் 90 சதமான படங்கள் தோல்விப் படங்கள்.

'சூர்யவம்சம்', 'காலமெல்லாம் காதல் வாழ்க' இரண்டும் வெள்ளிவிழாக் கண்டன. ரஜினிபடம் ஒன்றே ஒன்று, அருணாச்சலம். கமல் படம் எதுவும் இல்லை.

சரத்குமாருக்கு 'சூர்யவம்சம்' சூப்பர் ஹிட். ஜானகிராமன் ஹிட். சத்யராஜ், விஜயகாந்த், பிரபு, அர்ஜுன், கார்த்திக் ஆகியோருக்கு '97 அவ்வளவாகச் சோபிக்கவில்லை.

நடிகைகளில் சென்ற ஆண்டின் ஆரம்பத்தில் முன்னணியில் இருந்தவர் ரம்பா. 97இன் இறுதியில் அவரை ஓரம்கட்டத் தொடங்கினார் சிம்ரான். இந்த ஆண்டு சிம்ரானின் காட்டில் மழை கொட்டக்கூடும்.

1996ல் மட்டுமல்ல 1997 இலும் அதிக படங்களுக்கு இசை அமைத்தவர் தேவாதான். தமிழில் மட்டும் மொத்தம் 32 படங்கள். அடுத்த இடத்தில் இருப்பவர் சிற்பி. 11 படங்கள்.

இயக்குநர்களில் சேரன், பால சேகரன், சி. சுந்தர் ஆகியோருக்கு 1997 ராசியான ஆண்டாக இருந்தது.

## இளையராஜா ஹெட்மாஸ்டர்

இசைமேதை இளையராஜ...
வைப் பற்றி இசைப்புயல் ஏ.ஆ...
ரகுமான என்ன சொல்கிறா...
"ஏறக்குறைய 25 வருடத்...
இந்தியத் திரைப்பட இசை...
நிறையச் சாதித்த மனிதர் இ...
ராஜா. எங்களுக்கு அவர் ...
மாஸ்டர் மாதிரி.
எங்கப்பாவிடம் இளை...
பணியாற்றினார் என்ற ...
என் மேல் ஒரு ஸ்பெசல் ...
காண்பிப்பார்.
என்னை முதன் முத...
னகை...
படத்...
போ...
வரு...
தேன்...
பக்தி...
எனக்...
ராஜ...
அதி...
சொ...

## முகப்பில்

அருண்குமார்–ரோஷினி

படம்: துள்ளித்திரிந்த காலம்


அஜித் குமார்

## இளம் ஹீரோக்கள்
### இன்றைய நிலை

எக்கச்சக்கமான இளம் ஹீரோக்கள் தமிழ்ப்பட உலகை இன்று ஆக்கிரமித்திருக்கிறார்கள். அவர்களின் இன்றைய நிலை என்னவென்று பார்க்கலாமா?

**விஜய்:** 'நாளைய தீர்ப்பு' படம் மூலம் அறிமுகமானவர். இயக்குநர் எஸ்.ஏ. சந்திரசேகரனின் மகன். அம்மா ஷோபாவும் இயக்குநர். கதாசிரியர். 'பூவே உனக்காக' திருப்பம் தந்தது. பாலசேகரனின் 'லவ் டுடே', பாசிலின் 'காதலுக்கு மரியாதை' போன்ற படங்கள் மூலம் புகழ் ஏணியின் உச்சத்திற்குப் போய்விட்டார்.

**அஜித்குமார்:** 'ஆசை', 'காதல் கோட்டை' போன்ற படங்கள் மூலம் கிடுகிடுவென்று உயர்ந்தார். ஏராளமான பெண் ரசிகைகள். ஏராளமான பெண் தொடர்புகள். சொந்த நடத்தை இவரது மார்க்கெட்டை சரித்தது. இப்போது ஓரம் கட்டப்பட்ட நிலையில் இருக்கிறார்.

**அப்பாஸ்:** இவர் இன்னொரு அஜித். 'காதல் தேசம்' படத்தின் பின்னர் மளமளவென்று முன்னேறினார். வெற்றிப் போதை காரணமாகவும், தினம் மொய்க்கும் ரசிகைகள் கொடுத்த போதையாலும் நிலை தடுமாறினார். சிம்ரானுடன் சுற்றினார். கதை பார்க்காமல் கிடைத்த படங்களில் எல்லாம் நடிக்க ஒப்புக்கொண்டார். திடீர்த் திருமணம் செய்து இமேஜை கெடுத்துக் கொண்டார்.

**பிரசாந்த்:** சென்ற ஆண்டு இவருக்கு ஜெயம் இல்லாத ஆண்டு. ஜீன்ஸ் படம் வெளியாகி ஹிட்டானால் தேறுவார். 'காதலே நிம்மதி' போன்ற படங்களை 'ஜீன்ஸ்' படத்திற்காக இழந்தார். ஆனால் 'ஜீன்ஸ்' தள்ளிக் கொண்டிருக்கிறது.

**அருண் குமார்:** நடிகர் விஜயகுமாரின் வாரிசு. நல்ல உடல்வாகு. உயரம். நடிப்புத்திறனும் உண்டு. ஆனால் இதுவரை திருப்பம் கொடுக்கக்கூடிய படம் எதுவும் அமையவில்லை.

**சூர்யா:** தமிழ்ப்பட உலக மார்க்கண்டேயரான சிவகுமாரின் மகன். முதல் படமே வெள்ளிவிழாக் கண்டது. 'காதலே நிம்மதி' படத்திலும் இவரது நடிப்புக்கு பாராட்டுக் கிடைத்திருக்கிறது.

## நிராகரிப்பு

'அரசியல்' படத்தில் மம்முட்டி, ரோஜா, ஷில்பா சிரோத்கர், மன்சூரலிகான் என்று சகலருமே பின்னி எடுத்திருக்கிறார்கள். விறுவிறுப்பான படம்.

'அரசியல்' படத்தில் தப்பான அரசியல்வாதிகளின் கூட்டத்தில் ஒருவராக நடித்திருந்தார் மன்சூரலிகான். அந்த 'இமேஜ்' போகமுன்னரே உண்மையாகவே அரசியலில் குதித்து தனிக்கட்சி ஆரம்பித்துவிட்டார். கட்சிக்கு 'தமிழ் பேரரசு' என்று பெயர் வைத்திருக்கிறார்.

இராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்தார். செல்லாது என்று நிராகரித்து விட்டார்கள்.

## ரஜினி வரமாட்டார்

சென்றமுறை போல இம்முறையும் தி.மு.க, த.மா.க. கூட்டணிக்கு தன் ஆதரவு தொடரும் என்று அறிக்கை விட்டார் ரஜினி. அறிக்கை விட்டால் மட்டும் போதாது, தேர்தல் பிரசாரத்திற்கும் ரஜினியை இழுக்கலாம் என்று முயன்றனர்.

ஆனால், ரஜினி ஹொங்கொங் சென்றுவிட்டார். பிரசாரம் எல்லாம் முடிந்தபின்னர்தான் திரும்பிவர இருக்கிறாராம்.

## காதலுக்கு மரியாதை...

'காதலுக்கு மரியாதை' பட இயக்குநர் பா...
காதலைப் பற்றி என்ன நினைக்கிறார்?
"காதல் எப்போதும் மடிந்துபோக முடிய...
ஒரு சப்ஜெக்ட். தற்போது காதல் அவுட் ஆ...


www.padippakam.com

www.padippakam.com

# ல் - காதல்- காதல்
## அலை வீசும் பெயர்கள்

தலர் தினமல்லவா. காதல் இல்லாத சினிமா அரிது. எனினும் 'காதலன்', 'காதல் தேசம்' படங்களின் வெற்றிக்குப் பின்னர்தான் படங்களின் பெயரிலேயே 'காதல்' ற்றது. சூட்டப்பட்டுள்ள படப்பெயர்களின் பட்டியல்.

ப 2. காதல் பிரார்த்தனை 3. காதல் பிரார்த்தனா 4. காதல் சிறை 5 காதல் ல் தீபம் 7. காதல் ஜோதி 8. காதல் ஜோடி 9. காதல் கன்னி 10. காதல் கதை ம் 12. காதல் கலவரம் 13. காதல் கனவுகள் 14. காதல் குயில்கள் 15. காதல் தல் மன்னன் 17. காதல் கீதை 18. காதல் கிராமம் 19. காதல் மாநாடு 20. காதல் மொழி 22. காதல் நெஞ்சம் 23. காதல் ஒழிக 24. காதல் பள்ளி 25. காதல் காதல் பூஜை 27. காதல் ரோஜாவே 28. காதல் சாம்ராச்சியம் 29. காதல் யுத்தம் காதல்வரம் 32. காதல் வானிலே. 33. காதலிசம் 34. காதலித்துப்பார் 35. காதலா லா 36. காதலே கவிதை 37. காதலே நிம்மதி. 38. காத்திருந்த ல் 39. காதலுக்கு மரியாதை 40. கலாட்டா காதல் 41. புள்ள காதலுக்கு 42. என்றென்றும் காதல் 43. இதுதான் ல் 44. கடலோரக் காதல் 45. காதலர் தினம்... என்று யல் நீள்கிறது.

### வ்' உள்ள படப்பெயர்கள் இவை:

. லவ்ருடே 2. லவ் டே 3. லவ் ஆல் 4. லவ் டர் 5. லவ்வர்ஸ் டே 6. லவ்வர்ஸ் பார்க் வ் பேர்ட்ஸ் 8. லவ்வர்ஸ் பாரடைஸ் வ் அட்டாக் 10. லவ் சூப்பர் 11. லவ் றோம் 12. லவ் பண்ணுங்க சார் வ் 97 14. லவ் 98 15. அச்சா லவ் ண்டன் ஐ லவ் யூ.

மற்கண்ட பெயர் சூட்டப்பட்ட ல் படங்கள் வெளியாகி ன. வேறு பல பெயர்கள் செய்யப்பட்டதோடு சரி.

# கவர்ச்சி யாணி

நெப்போலியன் தேவயாணி நடித்து பொங்கலுக்கு வந்துள்ள படம், 'கிழக்கு மேற்கு' பாவாடை சட்டையுடன் பளிரென்று கண்களைக் குத்தும் கவர்ச்சி. காதல் கோட்டைக்கு பின்னர் கவர்ச்சிக்கு விடை கொடுத்த தேவயாணி. மறுபடி கவர்ச்சிக்கு வரவேற்பு கொடுத்திருக்கிறார்.

'இப்படி ஏன் நடிக்கிறீர்கள். வேண்டாம், அடக்கமே அழகு' என்று ரசிகர்கள் கடிதங்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார்களாம்.

"கேரள மாநிலத்தில் தாவணி இல்லாமல்தான் பெண்கள் காட்சியளிக்கிறார்கள். படத்தில் என் பாத்திரத்துக்கு ஏற்ற உடைதான் அது" என்று விளக்கம் கொடுத்து வருகிறார் தேவயாணி.

# 'ஜீன்ஸ்' எங்கே?

பிரசாந்த்-ஐஸ்வர்யாராய் நடித்துள்ள 'ஜீன்ஸ்' பொங்கலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. வரவில்லை. எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்குக்கூட வெளிவருவது சந்தேகம்தானாம்.

இயக்குநர் ஷங்கருக்கும் தயாரிப்பாளரான அசோக் அமிர்தராஜுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனைதான் தடங்கலுக்கு காரணமாம். பாவம் பிரசாந்த்தான் நொந்துபோய் இருக்கிறார்.

# புண்ணியவான்

கஸ்தூரிராஜா இயக்கத்தில் சிவாஜி கணேசன் நடிக்கும் படம் 'என் ஆச ராசாவே'. படப்பிடிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. தேவராட்ட கலைஞராக நடிக்கிறார் சிவாஜி. தவில் வித்துவானாக மணிவண்ணன் நடிக்கிறார்.

அதனையடுத்து இயக்குநர் வாசுவின் படத்திலும் சிவாஜி நடிக்கப்போகிறார். படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்; புண்ணியவான்.

# மினி சினி

* பிரபு நடித்து பொங்கலுக்கு வெளியாகி வெற்றிகரமாக ஒடிக்கொண்டிருக்கும் 'பொன்மனம்' படத்தை இயக்கியவர் எஸ்.பி.ராஜ்குமார். இவர் அடுத்து இயக்கும் படத்திலும் பிரபுவே கதாநாயகனாக நடிக்கிறார்.

* பார்த்திபன் நடிக்கும் 'கல்யாண சுந்தரம்' படத்தில் நடிப்பதற்காக இதுவரை ஐந்து கதாநாயகிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டு மாற்றப்பட்டுள்ளனர். கடைசியாக ஒப்பந்தமாகியுள்ளார் சுவலட்சுமி.

* 'உளவுத்துறை' படத்திற்குப்பின் விஜயகாந்த் நடிக்கும் படத்தை லட்சுமி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது. இந்தப் படத்தை கஸ்தூரிராஜா இயக்கவுள்ளார். விஜயகாந்த்-கஸ்தூரிராஜா முதன்முறையாக இணையும் படம் இது.

* கேயார் இயக்கத்தில் பாண்டியராஜன் நடிக்கும் 'கும்பகோணம் கோபால்' தெலுங்கில் ராஜேந்திர பிரசாத் நடித்து வெற்றிபெற்ற 'கோல்மால் கோபால்' என்ற படத்தின் தமிழ்ப் பதிப்பு ஆகும்.

* 'சிம்மராசி' படத்தில் சரத்குமாருக்கு ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கும் நக்மா, தற்போது 'குருபனராணி' என்ற கன்னடப் படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் சிவராஜ்குமார் கதாநாயகனாக நடிக்கிறார்.

* 'வசந்தகாலப் பறவைகள்', 'சூரியன்' போன்ற வெற்றிப் படங்களை இயக்கிய பவித்ரனுக்குத் தற்போது இறங்குமுகம். இவர் 'சூரியன்' படத்தை இந்தியில் இயக்க முடிவுசெய்துள்ளார். இப்படத்தில் நடிக்க சன்னி தியோலை அணுகியுள்ளார்.

* 'பூவே பூச்சூடவா' படத்திலிருந்து 'காதலுக்கு மரியாதை' வரை பல தமிழ்ப் படங்களை இயக்கியவர் பிரபல மலையாள இயக்குநர் பாசில். இவர் முதன் முறையாக 'ஜேம்ஸ் பாண்ட் 000' என்ற மலையாளப் படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

* விஜய் நடிக்கும் படங்களில் எப்படியாவது ஒரு சாப்பாட்டு ஐட்டம் உள்ள பாடல் இடம்பெறுவது வழக்கமாகிவிட்டது. இவர் இப்போது நடிக்கும் 'ப்ரிய முடன்' படத்திலும் 'ஒயிட்லகோன் கோழி..' என்று தொடங்கும் பாடல் இடம் பெறுகிறது.

* மணிரத்னம் இந்தியில் இயக்கிவரும் 'தில் சே' படத்தில் வரும் பாடல் காட்சி ஒன்று இமயமலையில் எடுக்கப்பட்டுள்ளது. இப்பாடல் காட்சியில் படத்தின் நாயகன் ஷாருக்கான் தோன்றி நடித்துள்ளார்.

* மம்முட்டி நடித்த 'சி.பி.ஐ. டைரிக்குறிப்பு' படத்தை இயக்கிய மலையாள இயக்குநர் கே.மது முதன் முறையாக கன்னடப்படம் ஒன்றை இயக்கவுள்ளார். இப்படத்தில் சுமன் ஹீரோவாக நடிக்கிறார்.



அஜித்குமார்-கஞ்சன்
படம்: காதல் புத்தகம்



விஜய்-ஷாலினி
படம்: காதலுக்கு மரியாதை

# ராஜீவ் ஜோடி ரசிகா

ஆஹா பட நாயகன் ராஜீவ் கிருஷ்ணா நடிக்கும் புதிய படம் 'பிள்ளையார் பட்டி ஹீரோ'. ரசிகா கதா நாயகியாக நடிக்கிறார்.

படத்தின் கதை, வசனம், இயக்கம் ராஜீவ் பிரபு. இதுதான் அவருக்கு முதற் படம். இசை: தினா. வித்தியாசமான ஒரு வாலிபன் பற்றிய நகைச் சுவைக் கதை.

மணிவண்ணன், கிரன்ராஜ், ஆர். சுந்தர்ராஜன், வெ.ஆ. மூர்த்தி, சார்லி, லூஸ் மோகன், வடிவுக்கரசி, கோவை சரளா உட்பட பலர் நடிக்கின்றனர்.

யுட்டர் மியூஸிக் டார். ஒரு டன் இருந் டய தொழில் யும், வேகமும் கும். இளைய ாரையும்விட ர் என்றுதான்

சங்கீதா
லம் பார்க்கும் நிலவு

ஆகிவருகிறது. ஃப்ரண்ஷிப் கி வருகிறது. மற்றபடி காதல் தட்டுவதே இல்லை. ஏனெ ல் காலத்திற்கு தகுந்த மாதிரி காண்டே இருக்கிறது!" ர்.

# நடிகரைக் கண்டால் எடுக்கிறார்கள் ஓட்டம்

திரையுலக மறுபக்கம் 42

## ரஜினியைத் திட்டினார் ஜெய்சங்கர்

'காதல் தோல்விகள்' பல கண்டவர் 'ரயில்' நடிகை. விஜயமான நடிகருடன் ஏற்பட்ட காதல் முறிவின் பின்னர் வெளிநாட்டுக்காரரை மணந்து கொண்டார்.

பிரபல இயக்குநரின் அன்புக்கு பாத்திரமாக இருப்பதால் அவரது படங்களில் தொடர்ந்து நடித்தும் வருகிறார் நடிகை.

விஜயமான 'காந்த' நடிகர் தன்னை ஏமாற்றியதால் நடிகர்கள்மீதே வெறுப்புற்றிருந்தார் 'ரயில்' நடிகை. வயதும் ஏறிக்கொண்டிருந்ததால் முன்னைய பழக்க வழக்கங்களுக்கு விடை கொடுத்து வந்தார்.

அக்கட்டத்தில்தான் பவித்திரமான படத்தில் இளம் நடிகரின் நட்புக் கிடைத்தது. குமாரரான இளம் நடிகர் அப்போதுதான் அறிமுகக் கட்டத்தில் இருந்தார். முதலில் சில படங்களில் நடித்திருந்தாலும் நல்ல வாய்ப்புக்கள் அவருக்கு கிடைக்கவில்லை.

நீண்டகால அனுபவம் உள்ள மூத்த நடிகையிடம் தன் கஷ்டங்களையும், அதிஷ்டமின்மையையும் மனம் திறந்து கொட்டினார் நடிகர்.

நடிகை ஆறுதல் சொன்னார். அந்தப் படத்தில் நடிகர் எப்படியெல்லாம் நடித்தால் எடுபடும் என்றும் சொல்லிக் கொடுத்தார். படிப்படியாக நட்பு இறுக்கமானது.

நடிகை எப்போதும் வேகமானவர். அதனால் நடிகரை தன் வீட்டுக்கே அழைத்து அவரது கவலைகளை தீர்த்துவைக்கத் தொடங்கினார்.

இளம் நடிகரை நடிகைக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. குறிப்பிட்ட படத்தின் படப்பிடிப்புக்கள் முடியும்வரை இந்த நட்பு தொடர்ந்தது.

தான் தவறான எண்ணத்தில் பழகவில்லை என்றும், நடிகைதான் தன்னை நெருக்குதலுக்கு உள்ளாக்கியதாகவும் இளம் 'குமார' நடிகர் வெளியே கதைக்க, அது நடிகையின் காதுக்கும் எட்டியது. அத்தோடு நடிகருடன் தொடர்பை அறுத்துக் கொண்டார் 'ரயில்' நடிகை.

அதன் பின்னர் இன்னொரு நடிகை நடிகரின் நட்பை பெற்றுக்கொண்டார். அந்த 'ஹீர' நடிகையுடனும் தற்போது நடிகருக்கு சின்ன சின்ன உரசல்கள் ஏற்பட்டுள்ளதாக தகவல்.

அந்தரங்க நட்புக்களையும் நடிகர் வெளியே உளறிவிடுகிறார் என்பது பல நடிகைகளுக்கு தெரிந்துவிட்டது. அதனால் பொழுதுபோக்காக நடிகரின் நட்பை நாடிய சில நடிகைகள் இப்போதெல்லாம் நடிகரைக் கண்டால் ஓட்டம் பிடிக்கிறார்கள்.

### ரஜினியைத் திட்டினார்

ஒரு காலத்தில் கதாநாயகனாக கொடி கட்டிப் பறந்தவர் ஜெய்சங்கர். தமிழ்ச் சினிமா உலக ஜேம்ஸ் பொன்ட் என்றும் அழைக்கப்பட்டவர்.

பின்னர் வில்லனாக நடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ரஜினிகாந்தின் படங்களில் வில்லனாக நடித்தார் ஜெய்சங்கர்.

மூத்த நடிகர் என்பதால் ரஜினியும் அவருடன் பண்பாகத்தான் பழகுவார். ஜெய்சங்கருக்கு மட்டும் உள்ளூர வருத்தம் இருந்தது.

கதாநாயகனாக நடித்துவிட்டு நேற்றுவந்த ரஜினியுடன் வில்லனாக நடிக்க வேண்டி இருக்கிறதே என்றுதான் வருத்தம்.

தனது வருத்தத்தை போதை அதிகமான நேரங்களில் ஜெய்சங்கர் மற்றவர்களுக்கு சொல்லியும் இருக்கிறார். ரஜினியின் பெயரைக்கூறி "அவன் எல்லாம் என்ன பண்றான்? நடிக்கத் தெரியுமா? சண்டைக் காட்சிகளில் நடிக்கத்தான் தெரியுமா? இவன் எல்லாம் கதாநாயகன், இவன் ஹீரோ நான் வில்லன். காலத்தைப் பாருங்கய்யா" என்றெல்லாம் புலம்பியும், திட்டியும் தீர்ப்பாராம்.

இந்த விடயம் எப்படியோ, யார் மூலமோ, ரஜினியை எட்டியது. சினிமா உலகில் கோள் சொல்ல பலர் இருக்கிறார்கள். ஜெய்சங்கரிடம் வாங்கிக் குடித்து விட்டு ரஜினியிடம் போய் ஜெய்சங்கரைப் பற்றி மூட்டி வைத்தார்கள்.

ஆனால் ரஜினி அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. "முன்னர் கதாநாயகனாக நடித்தவருக்கு இன்று அந்த இடம் இல்லாமல் போனதும் வருத்தம் ஏற்படத்தான் செய்யும். உண்மையில் ஜெய்சாருடன் ஒப்பிட்டால் நான் என்ன பெரிய நடிகன்? அதனாலே அவர் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது" என்று ரஜினி கூறியிருக்கிறார்.

மூட்டிவைத்து வேடிக்கை பார்க்க நினைத்தவர்களுக்கு ரஜினியின் பதில் செமத்தியான அதிர்ச்சியாகிவிட்டது. அதன் பின்னர் ரஜினியிடம் கோள் மூட்டும் வேலைகளை விட்டுவிட்டனர்.

# குட்டி மஞ்சுளா

பாண்டியராஜன் நடிக்கும் படம் ஒன்றுக்கு 'இன்று முதல் ஹேப்பி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். பாண்டியராஜனுக்கு ஜோடி ப்ரீதா விஜயகுமார்.

'சந்திப்போமா' படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் ப்ரீதா விஜயகுமார் அப்படியே இளம் மஞ்சுளாவை உரித்து வைத்தது போல இருக்கிறார். 'சந்திப்போமா' படப்பிடிப்பு முடிவடைய முன்னரே மற்றொரு படம் கிடைத்துவிட்டது. 'இன்று முதல் ஹேப்பி' இயக்குநர் சி.ரங்கநாதன் அந்தக் காலத்தில் மஞ்சுளாவின் பரம ரசிகராம். அதுதான் மஞ்சுளாவின் மகளை தன்படத்தில் நடிக்க வைத்து அழகு பார்க்கப்போகிறார்.

# நீ பாதி நான் பாதி

'கல்யாண கலாட்டா' படத்தில் மனநிலை பாதிக்கப்பட்ட பெண்ணாக குஷ்பு நடிக்கிறார். அதனால் கவர்ச்சி காட்ட போதிய வாய்ப்பில்லை. அந்தக் குறையை போக்க மந்த்ராவை தாராளமாக பயன்படுத்தி இருக்கிறார்களாம். கதையை நகர்த்த குஷ்பு. கவர்ச்சி காட்ட மந்த்ரா. அதுவும் போதாது என்று இளம் ஜோடி ஒன்றையும் நடிக்க வைத்துள்ளார்கள்.

# சின்னம்மா சிபாரிசு

நடிகர் ராமராஜன் பிடித்தாலும் பிடித்தார் புளியங்கொம்பாகப் பிடித்தார். தேர்தலில் போட்டியிட தொகுதி கிடைத்துவிட்டது.

ஜெயலலிதாவிடம் நேரடியாக கேட்டால் காரியம் நடக்காது என்பதால் சின்னம்மா சசிகலாவுக்கு சோப் போட்டாராம் ராமராஜன்.

தேர்தலில் வென்றால் என்ன, தோற்றால் என்ன, ஒரு குறிப்பிட்ட தொகை நிதியாகத் தருவதாகக் கூறினாராம். சசிகலா சம்மதித்தார். பிறகென்ன, பெரியம்மா ஷீட் கொடுத்தார்.

# ஒரே ராசி

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் முதலில் நடித்த 'இருவர்' படம் படுதோல்வி. அது போல சுஷ்மிதா சென் முதலில் நடித்த 'ரட்சகன்' படமும் போட்ட முதல் திரும்பி வராமையால் தோல்வி.

தயாரிப்பாளர் குஞ்சுமோனுக்கு கழுத்துக்கு மேலே கடன். அதனால் 'கோடீஸ்வரன்' படப்பிடிப்பை தள்ளிப் போட்டிருக்கிறார்.

## பொருத்தமான செருப்பு



முன்பெல்லாம் செருப்புக்கள் கறுப்பு, பிரவுண் ஆகிய இரண்டு நிறங்களில்தான் கிடைக்கும். இப்போது எல்லா வண்ணங்களிலும் கிடைக்கின்றது. அதாவது எந்த நிறத்தில் பெண்கள் உடை அணிகிறார்களோ அந்த நிறத்திற்கு ஏற்றபடியெல்லாம் பொருத்தமாக செருப்புக்கள் அணிந்துகொள்ளலாம்.

நிகழ்ச்சிக்குத் தக்கபடியும் செருப்புக்களை அணிகிறார்கள். மணப் பெண்களுக்காக விலையுயர்ந்த பளபளப்பான செருப்புகள் வாங்கப்படுகின்றன.

சில வகை செருப்புக்களை அணிந்து கொண்டு சிறிது தூரம் நடந்ததும் கால்வலி ஏற்படும். குதிகாலில் அரிப்பும் வேதனையும் தோன்றும். செருப்பின் உட்பகுதி கெட்டியாக இருப்பதால்தான் இந்தப் பிரச்சனைகள் தோன்றுகின்றன.

உங்கள் கால்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள விரும்பினால், மிக அதிக விலையுள்ள செருப்புகள் வாங்குவதைத் தவிர்க்கலாம்.

கூர்மையான ஹீல்ஸ் கொண்ட செருப்புக்களை முடிந்த அளவு ஒதுக்கி விடுங்கள். தொடர்ச்சியாக அவைகளை அணிந்தால் முதுகெலும்பின் ஆரோக்கியம் கெடும். அது மட்டுமன்றி கால் விரல்களுக்கு அதிக அழுத்தம் கிடைக்கும். அதுவும் நல்லதல்ல.

அலுவலகத்திற்குச் செல்வதற்காகவோ, கல்லூரிக்குச் செல்வதற்காகவோ அதிக தூரம் நடப்பவர்கள் குதிகால் செருப்புக்களை அணியாமல் இருப்பது நல்லது.

அதிக கனமான செருப்புக்களையும் அணியக்கூடாது.

அதிகம் இறுக்கிப் பிடிக்கும் செருப்புக்கள் அணிவதைத் தவிர்த்து விடுங்கள். காலின் முன் பகுதி அதிகமாக இறுக்கினால் விரல்களில் வலியும் தொல்லையும் தோன்றும். விரல்கள் ஒன்றன் மேல் ஒன்றாகி, தோற்ற மாறுபாடும் ஏற்படும்.

மாலை நேரமே செருப்பு வாங்க ஏற்ற காலமாகும். பயணம் செய்து விட்டு வந்த சூழ்நிலையிலோ, தொடர்ந்து அதிக நேரம் நடந்தபிறகோ செருப்பு வாங்காதீர்கள். அந் நேரங்களில் கால் அளவில் லேசான மாற்றம் உருவாகும்.

வந்த வேகத்தில் கடைக்குள் புகுந்து, அவசரத்தில் ஏதாவது ஒருவகை செருப்பை வாங்கிக்கொண்டு ஓடிப்போய்விடும் பழக்கம் நல்லதல்ல. செருப்பை அணிந்து சிறிது நேரம் நடந்து பார்த்த பின்பே வாங்க வேண்டும். சரியான அளவு; நடக்கும் போது சௌகர்யம் இரண்டையும் அதிகமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்; □

## இதமான தூக்கம் தேவையா?

உறக்கம் மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது. உறக்கம் சரியாக இல்லாவிட்டால் பல்வேறு பிரச்சனைகள் தோன்றும்.

என்ன பிரச்சனைகள்?

- ★ உடல் ஆரோக்கியம் கெடும்.
- ★ உடல் அழகு பாதிக்கப்படும்.
- ★ மனநிலை கூடப் பாதிக்கும்.

மனிதர்கள் தினமும் 8 மணிநேரம் தூங்க வேண்டும் என்று டாக்டர்கள் சொல்கிறார்கள்.

தூக்கம் வராமல் போவதற்குரிய காரணங்கள்:

- ★ சுத்தமில்லாத படுக்கை
- ★ படுக்கை அறையில் ஏற்படும் சத்தம்.
- ★ நுளம்புக்கடி
- ★ உடல் கோளாறுகள்.
- ★ பயம்
- ★ சுவாசத்தடை

நன்றாகத் தூக்கம் வர என்ன செய்யவேண்டும்?

- ★ உறக்கம் வராமல் இருந்தால், சிறிது தூரம் நடந்தால் உடனடியாகத் தூக்கம் வரும்.
- ★ தூக்கம் ஒரு நல்ல பழக்கம். அதில் குளறுபடிகளை ஏற்படுத்தாமல் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கி, குறிப்பிட்ட நேரத்தில் விழிக்க வேண்டும்.
- ★ மனதில் ஏதாவது நெருக்கடி இருந்தால் படுக்கைக்குச் செல்லுமுன், அதைத் தீர்த்துவிட்டுத் தூங்கச் செல்ல வேண்டும்.
- ★ லேசான சுடுநீரில் குளித்து விட்டுத் தூங்கினால் உறக்கம் எளிதாக வரும்.
- ★ புத்தகம் படித்துத் தூக்கத்தை வரவழைக்கலாம்.
- ★ தூங்கச் செல்வதற்கு முன்னால் அதிகம் சாப்பிட வேண்டாம்.
- ★ படுக்கையில் இருந்து மனதை இலகுவாக்குங்கள். அதிகமான சிந்தனைகளை ஒதுக்கி விட்டு தூங்க முயற்சி செய்யுங்கள்.

## முரசு-அருள் ஜுவலர்ஸ் தங்கமாலை பரிசுப் போட்டி அதிஷ்டசாலிகள் இவர்கள்

**ஆறுதல் பரிசுபெறும் மேலும் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

46. கே. ரஞ்சினிதேவி
46, பிரதான வீதி, ஆனந்தபுரி 3ம் கட்டை, திருமலை.
47. எஸ்.எச்.என். நஹீமா
331, வன்னியர் வீதி, நிந்தவூர்-03.
48. திருமதி ஜி. கீதாஞ்சலி
இலங்கை கனியமணல் கூட்டுத்தாபனம், புல்மோட்டை.
49. எம்.ஐ. பாத்திமா நஸ்ரியா,
159, புசல்லாகும்புர, பண்டாரவளை.
50 பி. இளவரசி
28, வெலிங்டன் அடை வீதி, திருகோணமலை.

அதிஷ்டசாலிகள் அனைவருக்கும் பரிசுப்பொருட்களைப் பெறுவது தொடர்பான விபரங்கள் கடிதம்மூலம் தெரிவிக்கப்படும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DE

பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 21-02-1998**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## கண்ணீரில் கரைந்த இரவுகள் 22

**புவனா**



கமீலாவின் சகோதரியின் பிறந்தநாள் விழாவுக்கு சாள்ஸ்சுடன் டயானா ஜோடியாக வந்தது கமீலாவுக்கு முதல் ஏமாற்றம்.

விருந்தில் கமீலாவை தனியாக சந்தித்து, "என் கணவருக்கும் உனக்கும் இடையே உள்ள தொடர்பு எனக்குத் தெரியாது என்று எண்ணவேண்டாம்...." என்று டயானா கூறியது பலத்த அதிர்ச்சி.

டயானாவுக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் கமீலா திகைத்தாள். வார்த்தைகளைத் தேடினாள். எதிர்பாராத அதிர்ச்சியில் வார்த்தைகள் தட்டுப்படவில்லை. வியர்த்துப்போனாள் கமீலா.

அவளது பதிலுக்காகக் காத்திருக்காமல் டயானா எழுந்து படிகளில் விறுவிறுவென்று ஏறி மேலே சென்றுவிட்டாள்.

அதன்பின்னர் நடந்ததை டயானா பின்வருமாறு நினைவு கூர்ந்திருந்தார்:

"ஒரு பெரும் சாதனையை நிலைநாட்டிவிட்ட பெருமையுடன் மாடிக்குப்போனேன்.

அப்போது எல்லோரும் கலைந்து போய்க்கொண்டிருந்தனர். சாள்ஸ் என்னை முறைத்துப் பார்ப்பதை உணர்ந்தேன்.

கீழே நான் தனியாக கமீலாவுடன் ஏதோ பேசியிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டார்.

நான் எதனையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் அவருடைய கையைப் பற்றிய வண்ணம் எல்லோரிடமும் சிரித்துக் கொண்டே விடைபெற்றேன்.

விடைபெறும் நேரத்தில், நான் யாருடனோ பேசிக்கொண்டிருந்த சிறிய இடைவெளியில் கமீலா சாள்ஸ்சை நெருங்கி ஏதோ குசுகுசுப்பதையும் நான் கவனிக்கத் தவறவில்லை.

சாள்ஸ்சின் முகம் கோணலாகியதில் இருந்தே கமீலா என்ன கூறியிருப்பாள் என்பது தெரிந்து போனது.



### சுமை இறங்கியது

காரில் ஏறியதும் எனது கையை முரட்டுத்தனமாகப் பற்றி ஏதேதோ வார்த்தைகளையெல்லாம் சொல்லித் திட்டினார். அவ்வார்த்தைகள் எதனையும் நான் கிரகிக்கவில்லை.

நான் அழுதேன்.

எப்போதுமே நான் அவ்வாறு அழுதது இல்லை. அன்றிரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.

தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தேன்.

தொடர்ந்து ஏழு வருடமாக கடைந்தெடுத்த பொய்கள் பரப்பப்படுவதை என் சகோதரிகளும் அறிந்தே இருந்தனர்.

என் தந்தை அதனை அறிந்து மிக்க வேதனைப்பட்டார்.

என்னை நேரில் சந்தித்தபோது, "மறந்து விடாதே அருமை மகளே! நாங்கள் உன்னை எப்போதும் நேசிக்கிறோம்!" என்று கூறினார்.

பலரும் பலவிதமான புத்திமதிகளை எனக்குச் சொல்வார்கள். பல நூல்களையும், பல மதங்கள் பற்றிய கருத்துக்களையும் படித்து எனது மனதைப் பக்குவப்படுத்திக் கொண்டேன்." என்று தனது சோகமான நாட்களில் சிலவற்றை நினைவு கூர்ந்திருந்தார் டயானா.

### சாராவின் சண்டை

மகாராணியால் நல்ல மருமகள் என்று மெச்சப்பட்ட சாரா, படிப்படியாக தன் சுயரூபத்தைக் காட்டத் தொடங்கினாள்.

அரச குடும்பத்தினரின் சம்பிரதாயங்களை மீறத் தொடங்கினாள்.

"நான் என்ன சின்னப் பிள்ளையா? எதற்கெடுத்தாலும் புத்தி சொல்வதும், என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாது என்று போதிப்பதும் எரிச்சலாக இருக்கிறது. ஆண்ட்ரூ! நீ அம்மாவுக்கு அடங்கின பிள்ளையாக இருக்கப்போகிறாயா? அல்லது மனைவிக்கு நல்ல கணவனாக இருக்கப்போகிறாயா?" என்று முகத்தில் அடித்தாற்போல கேட்டே விட்டாள்.

ஆண்ட்ரூ பொறிகலங்கிப் போனார். சாள்ஸ்சுக்கும், ஆண்ட்ரூவுக்கும் பல விஷயங்களில் வேறுபாடு இருந்தாலும் ஒரு விஷயத்தில் ஒற்றுமை இருந்தது.

தங்கள் மனைவிகளைவிட தாய் சொல்லைத்தான் வேதவாக்காக எடுத்துக் கொள்வார்கள்.

தப்போ, சரியோ என்றுகூட பார்க்கமாட்டார்கள். ஆரம்பத்தில் அதனை சகித்துக் கொண்ட சாரா, பின்னர் சலித்துக்கொள்ள ஆரம்பித்தாள்.

தனக்கு ஆதரவாக டயானாவையும் இழுக்கப் பார்த்தாள். ஆனால் டயானாவுக்கு சாராமேல் நல்லபிப்பிராயம் குறைந்து கொண்டு வந்தமையால், சாராவைவிட்டு சற்றுத் தள்ளியே நின்று கொண்டாள் டயானா.

சாரா அரண்மனையைவிட்டு அடிக்கடி வெளியே சென்றுவரத் தொடங்கினாள். ஆண் நண்பாகளுடன் காணப்பட்டதாகவும் செய்திகள் எட்டத் தொடங்கின.

பின்னர் அச் செய்திகள் பத்திரிகைகளிலும் வரத் தொடங்கின.

மகாராணி முகம் சுளித்தார். சாராவிடம் முகம் கொடுத்துப் பேசுவதையும் குறைத்துக் கொண்டார்.

ஆனால் சாரா பணிந்துபோகும் சுபாவம் கொண்டவள் அல்ல. "அரச குடும்பத்திமிரை என்னிடமா காட்டுகிறார்கள்? பாடம் படிப்பிக்கத்தான் போகிறேன். நீ வேண்டுமானால் பூச்சி மாதிரி கிடந்து நசிபட்டுக் கொள்!" என்று டயானாவிடம் ஒருநாள் கூறினாள்.

### இரகசிய உரையாடல்

சாள்ஸ்-கமீலா இடையே அந்தரங்க நட்பு இருப்பதை அறிந்து பிரிட்டிஷ் மக்கள் பலர் முகம் சுளித்தனர்.

தங்கள் மனம் கவர்ந்த அழகான இளவரசிக்கு சாள்ஸ் துரோகம் செய்வதை அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை.

சாள்ஸ் – கமீலா உறவை ஆதாரபூர்வமாக நிரூபிக்கப் பத்திரிகைகள் முனைந்தன. சாள்ஸ்சும், கமீலாவும் இணைந்து காணப்படும் புகைப்படங்கள் மட்டும் ஆதாரமாக அமையாது;

'நாங்கள் நல்ல நண்பர்கள். கமீலா குடும்ப நண்பி. ஆணும் பெண்ணும் நண்பர்களாக இருப்பதும், தனியாகச் சந்திப்பதும் தப்போ?' என்று சாள்ஸ் கேட்கக்கூடும்.

அதனால் சாள்ஸ்சின் தொலைபேசியை ஒட்டுக்கேட்க ஏற்பாடு செய்தது ஒரு பத்திரிகை நிறுவனம்.

பலநாள் முயற்சியின் பின்னர் அந்த நாள் வந்தது.

செஷையர் என்ற இடத்தில் தன் நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த சாள்ஸ், அங்கிருந்து கமீலாவுடன் ரெலிஃபோனில் உரையாடினார்.

1989 டிசம்பர் 19ம் திகதி இரவு நடைபெற்ற அந்த உரையாடல் இரகசியமாக டேப் ரிக்கார்டரில் பதிவாகிக் கொண்டிருந்தது.

கமீலாவின் ரெலிஃபோனைத்தான் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

குளிரான இரவு. இதமான 'மூட்'. தங்கள் பேச்சு ஒட்டுக் கேட்கப்பட்டுக் கொண்டிருப்பது தெரியாமல் இருவரும் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

**சாள்ஸ்: சில சமயம் ஜாக்கிரதையாகத்தான் இருக்கவேண்டும். இந்த மாதிரி விஷயங்களில் தட்டித் தடவித்தான் நடந்து கொள்ள வேண்டும்....**

கமீலா: ம் ம் ம்... தடவுவதில் நீங்கள் சூரப்புலி அல்லவா?

**சா: அப்படியா...?!**

க: யெஸ்! டியர், நீங்கள் இல்லாத ஞாயிறு ராத்திரிகளை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

**சா: எனக்கும் நீ வாரம் முழுக்க வேண்டும்.**

க: எனக்கும்தான்.

## இரகசிய உரையாடல்

என் உள்ளத்தை அழுத்திக்கொண்டிருந்த பெரும் சுமை ஒன்று நீங்கிவிட்டதைப் போன்ற உணர்வினை பொழுது விடிந்ததும் உணர்ந்தேன்.

மூன்று நாட்களின் பின்னர் சாள்ஸ்சின் தனி அறைக்குச் சென்றேன்.

என்னைக் கண்டும் காணாததுபோல இருந்தார். அருகே சென்று அவருடைய இரு தோள்களையும் பின்புறமாகப் பற்றியவாறு: "டார்லிங்! கமீலாவிடம் அன்று நான் என்ன கூறினேன் என்பதை ஒளிவுமறைவின்றி உங்களிடம் கூறுகிறேன். நான் எதையும் மறைக்க வேண்டிய அவசியமில்லை!" என்றேன்.

சாள்ஸ் எதுவும் பேசாமல் உயிரற்ற பொம்மைபோன்று அசையாமல் இருந்தார்.

நான் தொடர்ந்து, "அவளிடமே நீங்கள் கேட்டுப்பாருங்கள். 'நான் அவரை மனப்பூர்வமாக காதலிக்கிறேன்', என்றேதான் அவளிடம் கூறினேன். அதில் என்ன தவறு? நான் உங்கள் மனைவி. உங்கள் இரு குழந்தைகளுக்குத் தாய். இதனை யார்தான் மறுக்க முடியும்?" என்று கூறினேன்.

அப்படிக்கூறி முடித்தது எனக்கு பரமதிருப்தியாக இருந்தது.

### பொய்க் கதைகள்

எங்கள் மணவாழ்க்கை சிறப்பாக அமையாததுக்கு நான் ஒரு நோயாளி என்ற காரணத்தை சாள்ஸ் பலரிடம் கூறியிருந்தார் என்று அறிந்தேன்.

ஆனால் எத்தகைய நோயால் பீடிக்கப்பட்டேன் என்பதை அவர் கூறவில்லை.

இப்படியெல்லாம் என்னைப் பற்றிய

**சா: உன்னைப்பற்றி நினைக்கிறபோது எனக்கு எத்தனை பெருமையாக இருக்கிறது தெரியுமா?**

க: அப்படிப் பெருமையாகப் பேசும்படி நான் என்ன செய்துவிட்டேன்?

**சா: என்னை காதலிக்கிறாயே அது ஒன்று போதாதா?**

க: அது என்ன பெரிய விஷயம்?

**சா: எத்தனை கெட்ட பெயர். எத்தனை பிரச்சனைகள், அத்தனையையும் எனக்காகப் பொறுத்துக் கொள்கிறாயே!**



கமீலா

க: கிறுக்குத்தனமாகப் பேசாதீர்கள். உங்களுக்காக நான் எதனையும் பொறுத்துக் கொள்வேன். அதுதான் காதல். காதலின் பலம் அதுதான்.

**சா: (முத்தம் கொடுக்கும் ஒலி)**

க: ஐ லவ் யூ

**சா: அது வரும் நேரமாகிவிட்டது.**

க: அங்குமா வந்திருக்கிறது?

**சா: ஆமாம். பின்னர் மறுபடி பேசுகிறேன் (முத்தம் கொடுக்கும் ஒலி) குட்நைட்.**

க: (முத்த ஒலி) குட்நைட்.

'அது' என்று குறிப்பிட்டது டயானாவை. இந்த உரையாடலை பதிவு செய்தவர்கள் அரச குடும்பத்தை தொடர்பு கொண்டனர்.

அரச குடும்பம் ஆடிப்போனது. வெளியிடாமல் தடுக்க சகல முயற்சிகளும் செய்தது.

அதனால் இந்த இரகசியப் பேச்சை இரண்டு ஆண்டுகள் சென்று 1992 டிசம்பரில் தான் பத்திரிகைகள் வெளியிட்டன.

(அடுத்த வாரமும் வரும்)

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? டிக்கோயா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் — திருமதி வை. கிருஸ்ணவேணி, சலங்கண்டி தோ., டிக்கோயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



www.padippakam.com

www.padippakam.com

## அவள் பூபாளம்...! நான் முகாரி....!

கண்ணாடித் துண்டுகளாய்
நினைவுச் சில்லுகள்–என்
மனதைக் கிழிக்கின்ற
கிறக்கமான மாலை நேரம்....
இன்னும் இமை மூடாத
என் விழிகளில்...
நினைவுத் தொட்டில் கட்டியபடி...
பௌர்ணமி இரவுகளை
பாலைவனச் சகாராவாக்கி
சந்தோசம் காண்கின்ற
சந்தர்ப்பவாதியாய் நீ!

நித்தம் நித்தம்
தூது செல்லும் பெருமூச்சுக்கள்
சத்தமாய் செவியிலறைந்து செல்லும்.
இரண்டு இரத்த அணுக்கள்
சந்தித்துக் கொள்ளும்போதும்
உன்னைப் பற்றித்தான்
உரையாடிக் கொள்ளும்...!

பூமியில் உன் புன்னகைக்கு
நிகரான பூவேது...?
பின்னெதற்கு...
இதழ் மொட்டுக்குப் பூட்டு...?
இலக்கியமெல்லாம் எழுதும்
உன்னிதழால் இறப்புக்குமுன்
எனக்கொரு பதில் எழுதக்கூடாதா?

உன்னிடத்தில்
காதல்ப்பூ மலர்வதற்காய்
தண்டவாளத்தில் தவம்
செய்துகொண்டிருக்கிறது...
இரு பட்டாம் பூச்சி...
என்ன வரம் வேண்டுவது..??
ஒப்பாரியா? தாலாட்டா?

புன்னகையால் குட்டுவைக்க
நீ– தயாராய் இல்லாததால்...
விஷப் பூக்களோடு மட்டும் சிநேகமாய்..
பூபாளம் பாடப்பழகிக்கொண்டது...
இந்தச் சின்னஞ்சிறு தேனீ!!!

விடிந்த பின்னும்
உன்னால் அணைக்கப்படாத
விளக்கினோடுதான்...
விளையாட முடிந்திருக்கிறது
இந்த விட்டிலுக்கு!!

இத்தனை நாளும்...
சித்திரவதை செய்த நீ
இந்தப் பூந்தோட்டத்திடம்
எப்பொழுது பூக்கேட்கப்போகிறாய்!!!
காட்டுத் தீ...
வேட்டுவைத்த பின்னா?

அகன் கபிலன்– வவுனியா.

## கண்ணீரை மட்டும்தான்....!

நிலா நனைந்த இரவில்
பாடும் என் தனிமையின்,
முகாரி ராகம் அவள்!
உயிருக்குள் தெறிக்காமல் இருக்க...
மலரின் மனதுக்கு மதில்
கட்டிவிட்டார்கள்!

நீரில் மூழ்கி சுவாசத்திற்கு
தவிக்கும் எனக்கு காற்றின்
கதவுகளுக்குப் பதிலாக கண்ணீர்
குழாய்கள் மட்டுமே திறக்கப்படுகிறது!

எட்டுத் திசையாலும் அவள்
இதயத்தின் வாசல்களை தட்டிய
என் விரல்கள் இப்போது
சோகம் எனும் மோதிரம்
அணிந்தே சோர்ந்து போயின!

பனி சொட்டும் இரவுகளில்
பசித்து அழும் அவள்
நினைவுகளுக்கு கருணையுடன்
பாலூட்டுவது...
பரிதாபக் கண்கள்
மட்டும்தான்!

பூஜைக்கு ஆசைப்பட்ட
மலரொன்று, மனதுக்கு
விலங்கிடப்பட்ட நிலையில்
புதை குழியை நோக்கி
விரட்டப்படுகிறது!

நாணப்பட்ட பெண்மையும்
நயனம் இசைத்த விழிகளும்..
இரு நரகத்துக்குள்
சிறையிடப்பட்டதால்
என் வசந்தம்
ஒரு புகை மண்டலத்தில்
சிதைந்துபோனது!

மனிதர்களே!
உங்களால் தீர்க்க
முடிந்தது என்
கண்ணீரை மட்டும்தான்...
காதலை அல்ல!

பர்ஸான்–யடவத்த,
நிகவொன்ன.

## காதலர் தினம்

'வேலன்டைன் டே'– காதலர் தினம்– பெப்ரவரி 14ம் திகதி உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. 'காதலர் தினம்' கொண்டாடும் வழக்கம் எங்கு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்ற வரலாற்றைக் கொஞ்சம் பார்ப்போமா?

* காதலர் தினம் கொண்டாடும் வழக்கம் 17ம் நூற்றாண்டிலேயே ஆரம்பித்து விட்டது.
* முதன் முதலாக ரோம் நாட்டில் 'லூபர்கேலியா' என்ற பெயரில் காதலர் தினம் கொண்டாடப்பட்டது.
* சென்ட் வேலன்டைன் என்ற துறவியைக் கௌரவிக்கும் வகையில் இந்த விழா கொண்டாடப்படுகிறது. (துறவிக்கும் காதலுக்கும் என்ன சம்பந்தம், என்று தெரியவில்லை.)
* இங்கிலாந்து மன்னராக இருந்த ஆரிலினை? கோமகன்? 1415ம் ஆண்டு ஃபிரான்ஸில் இருந்த தன் மனைவிக்கு, தன் கைப்பட ஒரு வாழ்த்து அட்டை தயார் செய்து, அதில் ஒரு காதல் கவிதையையும் எழுதி அனுப்பினார். அது முதல் காதலர் தினத்திற்கு வாழ்த்து அட்டை அனுப்பும் முறை ஏற்பட்டது.
* ஃபிரான்ஸ் நாட்டில்தான் முதன் முதலில் இதய உருவத்தை உருவகப்படுத்தி வாழ்த்து அட்டை தயார் செய்தனர். அதிலிருந்து காதலுக்கு இதய உருவம் அடையாளமாக நிலைத்து விட்டது. (காதல் இதயத்தோடு சம்பந்தப்பட்டது தானே!)

## என் சுவாசத்தோடு...

மனசு முழுவதையும்
சுருட்டி மடித்து
உசத்திப் போனது
அந்த பதினாறு வயது
தென்றல்!
**
வெளியே விட்டுவிட்டு
உள்வாங்கும்
மூச்சோடுதான்
உறவாடிப் போனது
என் சுவாசத்தோடு...!
**
பருவம் சுமந்து
பாவாடை தாவணியில்
இதயக் கடலில்
மையல் கொண்டது
சூறாவளியாக..
**
இதயப் பூ
காற்றோடு
காதல் கொண்டது.
**
தென்றலின்
சக வாசத்தால்
வசந்தப் பூக்கள்
பூத்துக் குலுக்கும்!
**
என் சுவாசம் மட்டும்
ஒட்சிசனைத்தான்
தரம் பிரிக்கும்;
உன்னையல்லடி
கண்மணி!

என். சஹாப்தீன்–
ஒட்டமாவடி.

## தேன் கிண்ணம்



## காதலின் சின்னம்

ஜப்பானில் காதலர் தினமான பெப்ரவரி 14ம் திகதியை வித்தியாசமாகக் கொண்டாடுகிறார்கள். அன்று, தங்களுக்கு அறிமுகமான ஆண் நண்பர்கள், மற்றும் காதலர்களுக்கு விலையுயர்ந்த சொக்லேட்டுக்களை– செலவைப் பொருட்படுத்தாமல் வாங்கி வழங்குகின்றனர் பெண்கள். காதலை வெளிப்படுத்தும் இந்த சொக்லேட்டுக்கு 'ஸுகி சொக்லேட்' என்று பெயர்.



## எவர்கள் எப்படி?

காதல் விஷயங்களில் வெவ்வேறு நாட்டுப் பெண்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பற்றி விவேகானந்தர் கூறியதைப் படித்துத்தான் பாருங்களேன்:

* ஜெர்மனியர்களும் ரஷ்யர்களும் காதலைப் பற்றிக் குடும்பத்துடன் உட்கார்ந்து பேசுவார்கள்.
* ஃபிரெஞ்சுக்காரப் பெண்கள் தலை குனிந்து கொள்வார்கள்.
* இங்கிலீஷ்காரப் பெண்கள் சங்கடப் படுவார்கள்.
* அமெரிக்கப் பெண்கள் தந்தையிடமே விவாதம் செய்வார்கள்.
* நம் நாட்டுப் பெண்கள் காதல், திருமணம் என்ற பேச்சு எடுத்தாலே வெட்கப் பட்டு தூர ஓடி விடுவார்கள்.

## சிவப்பு ரோஜா

ஜெர்மன் நாட்டில் ஒரு போதும் சிவப்பு ரோஜாவை, நீங்கள் விருந்தளிப்பவர்களுக்கோ, அங்குள்ள வேறு நண்பர்களுக்கோ கொடுத்துவிடக்கூடாது. சிவப்பு ரோஜா அங்கு காதலர்களுக்கு மட்டுமே அளிக்கப்படும் அன்புச் சின்னமாக விளங்குகிறது.

## வசந்தமே வா....!

உயிரை அடகு வைத்து
உள்ளத்தை(க்)
கேட்கிறேன்;
மறுக்காதே கிளி–
நனைகிறது விழி.
••
நிம்மதியை விற்று– உன்
நினைவினை வாங்கி
வாழ்கிறேன் நான்
வசந்தமே வா..!
••
கனவின் மலர்வில்–உன்
காலடிச் சத்தம்
கேட்குது நித்தம்!
••
நிழலாய் போன– உன்
தரிசனங்களாலே
நெஞ்சோடு யுத்தம்
கண்ணீர் முத்தம்!
••
கனவுகள்
இனிக்கவில்லை!
காரணம் நீ
சிரிக்கவில்லை!
இனிமைகள்
எனக்கில்லை;
இதயம் நீ
தரவில்லை!
••
என் வாழ்க்கையது
ஜொலிக்க வேண்டும்;
வசந்தமே நீ
என் வாசல் வர
வேண்டும்!
••
காமத்தின் தேடலல்ல–
என்
இதயத்தின் பாடல்–அது!
அன்பின் ராகம்
ஆத்மாவின் கீதம்.
••
என் வைகறையே
நீயிதை அறிவாயா?
வசந்தமே என்
வாசலுக்கு நீ வருவாயா..?

கே.எம். மர்சூக்,
தோப்பூர்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(15.02.1998 தொடக்கம் 21.02.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, பிரயாண கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| சனி- பயனுள்ள செயல், பெரியோர் சகவாசம். | பி.ப. | 2? | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- அந்நியர் சகவாசம், கௌரவ மிகுதி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், வீண் பிரயாணம். | மு.ப. | 10 | மணி |
| சனி- கடன் சுமை, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பலவித நன்மை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பயனற்ற செயல். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் முயற்சி, பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- கடன் சுமை, கௌரவக் குறைவு. | மு.ப. | 10 | மணி |
| புதன்- தொழில் கஷ்டம், வீண் முயற்சி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- இனசன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, மனக் கலக்கம். | பகல் | 12 | மணி |
| வியாழன்- வீண் முயற்சி, உறவினர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | பகல் | 11 | மணி |
| சனி- கடன் தொல்லை, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், செவ்வாய், புதன், வியாழன், கேது. |
| மீனம் | - சனி. |
| சிம்மம் | - இராகு. |
| தனு | - வெள்ளி (வக்கரகம்) |

★ சந்திரன்- கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, பண வரவு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, இனசன நன்மை. | பி.ப. | 1 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், அந்நியர் சகவாசம். | பி.ப. | 1 | மணி |
| சனி- பலவித கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- உறவினர் இழப்பு, மனக் கவலை. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், வீண் முயற்சி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன் - காரியானுகூலம், பொருள் வரவு. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், உயர்ந்த நட்பு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- செலவு மிகுதி, கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், தொழில் கஷ்டம். | மு.ப. | 10 | மணி |
| சனி- காரியானுகூலம், உறவினர் பகை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-6

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- கடன் சுமை, உறவினர் பகை. | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |
| சனி- பெரியோர் சகவாசம், மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழிலில் பிரச்னை, பணச் செலவு. | பகல் | 11 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் மந்தம், வீண் விரயம். | பி.ப. | 1 | மணி |
| புதன்- கடன் சுமை, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- தொழில் மந்தம், பணச் செலவு. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பிரயாண மிகுதி, கௌரவம். | பகல் | 11 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- தொழில் நஷ்டம், மனக் கவலை. | பகல் | 11 | மணி |
| சனி- அந்நியர் உதவி, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பெரியோர் நட்பு. | பகல் | 12 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, கௌரவ மிகுதி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் சகாயம், உறவினர் உதவி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், முயற்சித் தடை. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- இனசன மகிழ்ச்சி, பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| சனி- அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





ஏதெது கொண்டு வருகுது
காற்றிவை
எண்ணி லகப்படுமோ?
சீதக் கதிர்மதி மேற்சென்று
பாய்ந்தங்கு
தேனுண்ணு வாய், மனமே!
–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# உண்மைகள் கசப்பானவை

ஒருநாள் வேலன் என்னும் இளைஞன் தனது வீட்டிற்கு முன்னால் உள்ள வேப்ப மரத்தின் கீழே உட்கார்ந்திருந்தான். அவன் சோகமாக உட்கார்ந்திருப்பதைக் கண்ட வேப்பமரம் அவனிடம்,

"ஏன் தம்பி சோகமாய் இருக்கிறாய்?" என்று கேட்டது.

இதைக் கேட்ட வேலன், வேப்ப மரத்திடம்,

"என் அப்பாவும், அம்மாவும் என்னை எப்போதும் 'படி படி' என்று பாடாய்ப் படுத்துகிறார்கள். அதுமட்டுமன்றி, கண்டபடி என்னை ஊர் சுற்றக் கூடாது என்று சொல்கிறார்கள்.

நான் இந்த வயதில் இப்படி இல்லாமல், எப்போது சந்தோஷமாக இருப்பது? என் நண்பர்கள் எல்லோரும் தினமும் கடற்கரை, பூங்கா, சினிமா என்று எவ்வளவு சுதந்திரமாக இருக்கிறார்கள் தெரியுமா? எனக்குத்தான் எந்த சுதந்திரமும் இல்லை!" என்று கண் கலங்கியபடி சொன்னான்.

இதைக் கேட்டதும்,

"ஓ... இதுதான் உன் பிரச்சனையா? நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன் கேள்," என்ற வேப்பமரம், "நான் வேப்ப மரம் தானே...?" என்றது.

"ஆம். அதற்கென்ன இப்போ?" என்றான் வேலன்.


"என் பாகங்கள் எல்லாம் எப்படி இருக்கும்?" என்றது வேப்பமரம்.

"கசப்பாகத்தான் இருக்கும்!" என்றான் வேலன்.

"சரி என் உறுப்புக்கள் கசப்பாக இருக்கும். ஆனால் என்னை மருந்தாகப் பயன்படுத்திப் பலர் சாப்பிடுகிறார்கள் அல்லவா? அதையே தொடர்ந்து உண்டு வந்தால் நான் நோய்களைக் குணப்படுத்தி விடுவேன்.

நான் கசப்பாக இருந்தாலும் என்னால் பலன்தான் கிடைக்குமே தவிர, தீமை ஒன்றும் ஏற்படாது.

அது போலத்தான் பெற்றோர்கள் உங்களுக்குச் சொல்லும் அறிவுரைகள் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கும். ஆனால் அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி வந்தால், வாழ்க்கையில் நீங்கள் முன்னேறலாம்.




உன் பெற்றோர்கள், உன்னைக் கண்டபடி ஊர் சுற்றாமல் கவனமாகப் படிக்கச் சொல்வது உன் முன்னேற்றத்திற்காகத் தானே" என்று கூறியது வேப்ப மரம்.

இதைக்கேட்ட வேலன் வேப்ப மரம் கூறுவது நூற்றுக்கு நூறு சரி: உண்மைகள் கசப்பாகத்தான் இருக்கும் என்பதை உணர்ந்தான்.

புதுத்தெளிவுடன் வேப்ப மரத்திற்கு நன்றி சொல்லிவிட்டு பாடங்களைப் படிப்பதற்காக வீட்டிற்குச் சென்றான் வேலன்.


# அதிசயம்–ஆனால் உண்மை!



**டடிலோங் லெக்ஸ்:**

→ ஐவரி கோஸ்ட் நாட்டில் உள்ள வெட்டுக்கிளி இனத்தைச் சேர்ந்த இந்த உயிரினம், தன் கால்களால் சிலந்தி வலை போல பின்னிக்கொண்டு எதிரிகளிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்கிறது.

**நோர்த்தெக்ஸ் செடி:**



→ துருக்கியில் உள்ள இச் செடியின் தண்டில் உலர்ந்த சதைப் பற்று உண்டு. இதை வெளியே எடுத்து இருட்டில் வைத்திருந்தால் பலமணி நேரம் பிரகாசமாக இருக்கும்.

**கைவெட்டு:**

↓ ஜெர்மனியில் உள்ள அரசாங்க அலுவலர் ஒருவர், பொய்யான பத்திரங்களில் கையெழுத்திட்ட குற்றத்திற்காக அவரது கை துண்டிக்கப்பட்டது. ஏனைய அலுவலர்களை எச்சரிப்பதற்காக 400 ஆண்டுகளாக



துண்டிக்கப்பட்ட அந்தக் கை, பார்வைக்காக அங்கு வைக்கப்பட்டிருக்கிறது.



**தங்கச்சிலுவை:**

← கிறிஸ்து பிறப்பதற்கு 835 ஆண்டுகளுக்கு முன்பே அஸிரிய மன்னன் நான்காம் ஸம்ஸிவுல் தங்கச் சிலுவையை அணிந்திருந்தார்.

# வாரம் ஒரு நாடு

## காபோன்



தலைநகர்– லிப்ரவில்லே
பரப்பு–2,67,667 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை– 13 இலட்சம்
மொழி– ஃபிரெஞ்சு, பாண்டு கிளைமொழிகள்
எழுத்தறிவு– 65%
சமயம்– கிறிஸ்தவம் மற்றும் பழங்குடி நம்பிக்கைகள்
நாணயம்– ஃபிராங்க்
தனிநபர் வருமானம்– 4,400 டொலர்.

**அமைவிடம்:**

மேற்கு மத்திய ஆபிரிக்க நாடு. அட்லாண்டிக் கடற்கரையில் அமைந்துள்ள காபோனின் கிழக்கே கொங்கோவும்; தெற்கில் ஈக்வடோரியல் கினியாவும்; வடக்கில் காமரூனும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

ஃபிரான்ஸிடமிருந்து 1960ல் சுதந்திரம் பெற்றது. 111 உறுப்பினர் கொண்ட பாராளுமன்றத்தை உடையது. அதிபர் 7 வருடங்களுக்கு ஒருமுறை தெரிவு செய்யப்படுகிறார்.

**பொருளாதாரம்:**

கனிப்பொருட்கள் பெருமளவில் கிடைக்கின்றன. மங்கனீஸ், எண்ணெய், யுரேனியம், டிரேனியம் சுரங்கங்கள் அதிகம் உள்ளன. சீனி, தாவர எண்ணெய் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.02.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 232
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 230

பரிசுக்குரியவர்:
பி. ரகுநாதன்,
சித்திவினாயகர் கல்லூரி, மன்னார்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ம. வேஜினியா, புனித சிசிலியா பெண்கள் பாடசாலை, மட்டக்களப்பு. | ம. கோமதி, விஷ்ணு மகா வித்., பெரிய நீலாவணை–01, கல்முனை. |
| ஏ.எம். ஸவ்பீக், பு/எருக்கலம்பிட்டி மு.ம.வி. பாலாவி. | கே. ஸ.ப்ராஸ் மொஹமட், ழுஹவெலமுல்ல முஸ்லிம் வித். வெள்ளவாய. |
| கமலநாதன் நிசோபன், அ.த.க. பாடசாலை, பாலையூற்று, திருகோணமலை. | எம். தினேஷ்குமார், ரோ.க. தமிழ் பாடசாலை, அம்பிட்டிய, கண்டி. |
| கீத்தா தவபால், இறம்பைக்குளம் மகளிர் மகா வித். வவுனியா. | பானுஷன் இராஜமோகன், யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். |
| ச. அன்பு இளஞ்செழியன், புனித அந்தோனியார் மகா வி., மாதம்பிட்டி. | ஏ. காயத்திரி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு–04. |

# பறக்கும் அணில்கள்

உலகின் பல நாடுகளிலும் அணில்கள் வசிக்கின்றன. அணில்களில் நில அணில்கள், மர அணில்கள் என இரு வகைப்படும்.

மர அணில்கள் மரப்பொந்துக்களில் குச்சிகளையும், இலைகளையும் கொண்டு கூடு அமைத்து வசிக்கின்றன. மர அணில்களில் சிவப்பு அணில் என்னும் ஒரு வகை இனம் மிகவும் தீங்கு விளைவிப்பவை. இவை பறவைகளின் குஞ்சுகளையும், முட்டைகளையும் உண்கின்றன.

ஆனால் பெரும்பாலான மர அணில்களின் உணவு விதைகளும், பழவகைகளும்தான்.

மர அணில்களில் பறக்கும் அணில்கள் எனப்படும் ஒரு வகை அணில்கள் மற்ற அணில்களை விட மாறுபட்ட உடலமைப்பைக் கொண்டவை. இவற்றின் இரு பக்கங்களிலும் தோல் தடித்துக் காணப்படும். இவை கால்களை நீட்டும்போது விமானத்தின் இறக்கைகள் போல் காணப்படும். இவற்றின் உதவியால்தான் இவைகள் ஒரு மரத்தில் இருந்து இன்னொரு மரத்திற்குப் பறந்து செல்கின்றன.



வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களில் மிக வெப்பமான பகுதிகளில் பறக்கும் அணில்கள் வாழ்கின்றன. இவற்றைப் பகலில் காணமுடியாது. பகல் முழுவதும் உறங்கி இரவில்தான் இவை நடமாடும்.

# சாணக்கியன்



சிறந்த இராஜதந்திரிகளை சாணக்கியன் என்பார்கள். யார் இந்த சாணக்கியன்?

இவருடைய இயற் பெயர் கௌடில்யர். இவர் கி.மு.350ல் இருந்து 270 வரை வாழ்ந்தவர். இவர் சந்திர குப்த மௌரிய மன்னருக்குக் குருவாக இருந்தவர்.

பிந்துசாரர் என்ற மன்னரின் அரச சபையில் முதலமைச்சராக இருந்தவர்.

இவர் 'அர்த்த சாஸ்திரம்' என்ற நூலை எழுதினார். இந்நூல் 3 பெரும் பிரிவுகளாக உள்ளது.

முதல் பிரிவு அரச துறைகளை விளக்குகிறது. இரண்டாவது பிரிவு குற்றச் சட்டத்தைக் குறிக்கிறது. மூன்றாவது பிரிவு அரசியல் திறன், போர் ஆகியவற்றைப் பற்றி விளக்குகிறது.

சமஸ்கிருதமொழியில் எழுதப்பட்ட இந்நூல் சிறந்த இராஜதந்திர நூல் என்று போற்றப்படுகிறது. இருப்பினும் அரசியலில் வெற்றி பெற இலஞ்சம், ஏமாற்று, இரகசிய வழிகளில் எதிரியை வீழ்த்துவது போன்றவையும் இதில் எழுதப்பட்டுள்ளது.

# டவுனிங் வீதி

• டவுனிங் வீதி எங்குள்ளது?
இங்கிலாந்தில் இலண்டன் மாநகரில் உள்ள வெஸ்ட் மினஸ்டர் என்ற இடத்தில் உள்ளது.

• இந்த வீதி எதனால் புகழ் பெற்றது?
இங்கிலாந்தின் பிரதமர் மற்றும் நிதியமைச்சர் ஆகியோர் இந்த வீதியில் உள்ள பங்களாவில்தான் வசிப்பார்கள். டவுனிங் வீதியில் உள்ள 10 வது இலக்க வீட்டில் பிரதமரும், 11வது இலக்க வீட்டில் நிதியமைச்சரும் இருப்பார்கள்.



• இதற்கு டவுனிங் வீதி என்ற பெயர் வந்தது எப்படி?
சேர் ஜோர்ஜ் டவுனிங் என்பவர் 1600ம் ஆண்டுகளில் வாழ்ந்தவர். அப்போது அந்த வீதியிலுள்ள பல வீடுகளை அவர் கட்டியதால், அவருடைய பெயரையே அந்த வீதிக்கு வைத்து விட்டார்கள்.

• 10ம் இலக்க வீட்டில் வசித்த முதல் பிரதமர் யார்?
சேர்.ரொபேட் வால்டோல்.

• தற்போது இந்த வீட்டில் வசிப்பவர் யார்?
இங்கிலாந்தின் தற்போதைய பிரதமர் டோனி பிளேயர்.

# பயோப்சி

உயிருடன் உள்ள உடலில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட தசையை நுண் ஆராய்ச்சி செய்வதற்கு பெயர் பயோப்சி.

உதாரணமாக- உடலில் ஒரு கட்டி இருந்தால், அது புற்றுநோயாக இருக்குமோ என சந்தேகப்பட்டு, அந்தக் கட்டியின் ஒரு பகுதியை வெட்டி எடுத்து நுண்ணுயிர்க்காட்டி மூலம் ஆராய்ச்சி செய்யப்படும்.





www.padippakam.com

www.padippakam.com

எழுத்துச் சித்தர் பாலகுமாரன் தனது வழக்கமான பாணியில் இருந்து விலகி 'சஸ்பென்ஸ்' கலந்து எழுதிய விறு விறு நாவல்.

# புதிய தொடர் 10




"யார் சொன்னா என்ன, கூலிங்கிளாஸ் நீ போடறதில்லை அமுதா."

"ஆமா போன வாரம் போட்டேன்."

"ஏன்?"

"வெய்யில்."

"வேற காரணம்?"

"என்ன காரணம் இருக்க முடியும் கூலிங்கிளாஸுக்கு!"

"கண் மறைக்கறதுக்கு- உன் முகம் மறைக்கறதுக்கு- உன் வெட்கம் மறைக்கறதுக்கு."

"கடவுளே!"

"நீ இன்னும் மனசு விட்டு பேசலை அமுதா. நீ வாசுவை லவ் பண்ணினியா? பண்ற மாதிரி நடிச்சியா? ஜஸ்ட் டாவடிச்சியா?"

"ஐயோ கடவுளே!"

"புலம்பாத அமுதா."

"நான் புலம்பறேனா? வெளிப் படையா எல்லாம் சொல்லியாச்சு. திரும்பத் திரும்ப சந்தேகப் படற மாதிரியே



எழுத்துச் சித்தர் பாலகுமாரன்

கேக்கறீங்களே! பொலிஸ்காரன் புத்தி போவுமா? நானா ஸ்விம்மிங் போக ணும்னு துடியா துடிச்சேன்? அங்கேர்ந்து ஃபோன் பண்ணி சேர்த்துடு சேர்த்துடுன் னீங்க! வீட்ல கட்டிருக்கிற கசங்கின புடவையோட வெளியே கிளம்பிட முடியுமா? கொஞ்சம் நீட்டாத்தான் போகணும். எதேச்சையாக விபரீதமா நடந்து போச்சுன்னா உடனே நீ அதிகமா பேசின. அலங்காரமா போயிருக்கேன்னு குதர்க்கமா பேசினா- நான் புலம்பாம என்ன பண்றது?

இத்தனை வருஷமா பொண்டாட்டிய முழுசா புரிஞ்சுக்காம என்ன குடித்தனம் பண்ணியிருக்கீங்க? நான் நல்ல மூட்ல இருக்கும்போது, நான் சந்தோஷமா இருக்கிற நேரத்துல- பாதில உத்தியோகம் அழைக்குதுன்னு எழுந்து போயிடுவீங்க. உங்களுக்கு முதல்ல உத்தியோகம், ரெண்டாவது புள்ளை, மூணாவதா நேர மிருந்து-மூட் இருந்தா பொண்டாட்டி பக்கம் திரும்புவீங்க. உங்களுக்குள்ளே உள்ளுக்குள்ள உறுத்தினால் பொண்டாட்டிய சரியா வச்சுக்காம, அவ டாவடிக்கிறாளோன்னு, கேள்வி!"- அமுதா கோபமாய் எழுந்தாள். உள்ளே போய் கதவு சாத்திக் கொண்டாள்.

"அமுதா!"

"ப்ளீஸ் என்னைத் தனியா விடுங்க."

'நிஜமாகவே கோபமா... இல்லை குற்ற உணர்வை மறைக்க கத்துகிறாளா?' செல்வா தவித்தான். 'நடுநிசியில் பேரம் பேசுவோம்.' மணி என்ன? எட்டு பத்து. அதற்குள் மடக்குகிறேன்.

ஒரே எதிரி கந்தசாமி. வெளியே வந்தான். தோட்டக் கதவு திறந்து மூடினான். காரில் ஏறி உட்கார்ந்தான்.

ஸீட்டுக்குக் கீழே மொட மொடத்தது. சட்டென்று விலகி கார் லைட் போட்டான்.

அதேபோல பிளாஸ்டிக் கவர். நுனியை மெல்லத் தூக்கி சாய்த்தான். ஒரு காபினட் ஸைஸ் போட்டோ இருந்தது. அதில் அமுதா நிர்வாணமாய் இருந்தாள். செழுமையான மார்புகள். படர்ந்து இருந்தன. பின் கை தூக்கி இருந்தாள். கேசம் கலைந்திருந்தது. கண்களில் கலக்கம் இருந்தது. தொப்புளுக்கு கீழே சற்று இடம்விட்டு போட்டோ கத்தரிக்கப்பட்டிருந்தது. போட்டோவைத் திருப்பினான்.

'நடுநிசி பேரம் பேசலாம்!' அதே இடது பக்க ஆங்கில எழுத்து. செல்வா பையை உதறினான். உள்ளேயிருந்த சின்ன துண்டுபேப்பர் காற்றில் பறந்து சீட்டுக்கடியில் விழுந்தது. செல்வா குனிந்து எடுத்தான். லேபிள். பிராந்தி பாட்டில் லேபிள்.

'கந்தசாமி.... கந்தசாமியா?' புயல்மாதிரி போக் ரோட் பக்கம் போனான். பெரிய தோட்டக் கதவு நேரே வண்டி நிறுத்தி இறங்கி, கதவுகள் விரியத் தள்ளி, வண்டியில் ஏறி விரைவாக்கி, உள்ளே போய் போர்டிகோவில் நிறுத்தினான்.

வாசலில் இருந்து தபதபவென்று ஆட்கள் வந்தார்கள்.

பொலிஸ். அட்டை காட்டினான்.

"கந்தசாமி எங்கே?"- படியேறினான்.

"ஐயா படுத்துட்டாருங்க."

"எழுப்பு."

"எதுக்கு."

"எழுப்புடா." இடது பக்கமிருந்த ரிவால்வரை உருவினான். ஆட்கள் சிதறினார்கள். மூன்று நிமிடத்தில் கந்தசாமி கீழிறங்கி வந்தார்.

"செல்வராஜ், வா உட்கார்."

"என்ன, இப்பவே பேரம் பேச வந்துட்டான்னு பாக்கறீங்களா?"

"பேரமா?"

"என் பொண்டாட்டிய தாயக்கட்டையா வச்சி ஆரம்பிச்சீங்களே... அந்த பேரம்."

"உன் பொண்டாட்டிய தாயக் கட்டை யாவா? புரியலை."

"பொய் சொல்லாதீங்க கந்தசாமி, நடிக்காதீங்க. ஆம்பளையா இருந்தா என்கிட்ட வாங்க சண்டைக்கு."

"நான் ஆம்பளை செல்வராஜ். உன்னை அடிக்கணும்னு நினைச்சா சொல்லிச் சொல்லி அடிப்பேன்."

"அப்ப ஏன் என் பொண்டாட்டி போட்டோ அனுப்பனீங்க?"

"என்ன சொல்ற? தெளிவா சொல்லு. டேய், குடிக்க ஏதாவது எடுத்தா."

"ஐயா! இவரோட கார்ல இந்தக் கவர் இருந்ததுங்க. உள்ள துப்பாக்கி வச்சிருப் பாரோன்னு எட்டிப் பார்த்தேன். இது கிடைச்சுது."

பெரியவர் வாங்கி கவர் திறந்து பார்த்தார். திரும்பவும் கவரைக் கீழே வைத்தார். வாய் பொத்தி மௌனமாய் இருந்தார்.

"செல்வராஜ்! என் பையன் மேல சத்தியமா, என் குலதெய்வம் சாட்சியா இது நானில்லை. இது ஈனப்புத்திக்காரன் வேலை. இரண்டு ஆள்வுட்டு உன்னை கைவேற கால்வேறயா வாங்குவேனே தவிர, இது கந்தசாமி செய்யமாட்டான். ஏன்னா எனக்கு மூணு பொட்டப்புள்ளைங்க இருக்கு. மனசால கூட இந்தமாதிரி காரியம் பண்ணமாட்டேன். எடுத்துக்கிட்டு போ. நடுநிசி பேரம் பேசலாம்னு போட்டிருக்கு. போய் பாரு. என்னன்னு கேளு."

செல்வா தலை குனிந்தான். போட்டோ எடுத்தான். இவர் இல்லை. இவ்வளவு சத்தியம் இவர் செய்ய மாட்டார். இவர் வரி ஏமாற்றுகிறவர். கள்ளக்கடத்தல் ஆள். ஆனால் பொய் சொல்ல மாட்டார். ஒரு மெல்லிய தர்மம் உண்டு.

"போ. செல்வராஜ். போய்ட்டு ஃபோன் பண்ணு. நீ மட்டும் வந்திருக்கே. உங்க டிபார்ட்மெண்ட் வரலை. ஆக, அவனுங்களுக்குத் தெரியாம நீயே வந்திருக்க. சரி. எப்படி இதை டிபார்ட்மெண்ட்ல காட்ட முடியும்? புரியுது. ம்ம்.. யாருன்னு முதல்ல தெரிஞ்சுக்க. பொலிஸுக்கு, போறவன் வரவன் எல்லாம் எதிரி. தேவைன்னா எனக்கு ஒரு ஃபோன் பண்ணு. ஒண்டியா மாட்டாதே! நான் ஆள் அனுப்பறேன். பெரிய போட்டோ எடுத்து கவனமா கட் பண்ணிருக்கான். முறைப்பு காட்டாதே! மஃப்டில வூட்டுக்கு ஆள் போட்டிருக்கியா?"

"இல்லை."

"டேய், இவங்க பேட்டைக்கு ஃபோன் பண்ணி உடனே வீட்டுக்கு ரெண்டு ஆள் அனுப்பு. கழுத்துல வெள்ளைத் துண்டு போடச் சொல்லு. ஒரு அடையாளம். அதுக்குத்தான். ரெண்டு நிமிஷத்துல அவரு வூட்டு வாசல்ல ஆள் இருக்கணும்." கந்தசாமி எழுந்தார். கை கூப்பினார். வாசல்வரை வந்தார்.

"மறுபடி சொல்றேன். இதெல்லாம் நான் செய்ய மாட்டேன். நான் ஆம்பளை. குடித்தனம் பண்ற பொம்பளையை அசிங்கப் படுத்தமாட்டேன். உன் சந்தேகம் நியாயம். ஆனா, யார் எது பண்ணுவாங்கன்னு ஒரு கணக்கு வேணாமா?"

"இந்த லேபிளை வச்சுத்தான்."

"எது?"

பிரித்துப் பார்த்தார்.

"பிளாஸ்டிக் பைல இருந்துச்சு."

"எங்க அது?"

"இதோ."

"இது எல்லா பிராந்திக் கடைலயும் பாட்டில் போட்டுக் கொடுக்கிற பை. குடிக்கிறதுக்கு வாங்கியிருப்பான். அதுல போட்டு அனுப்பியிருப்பான். எப்படி வந்துச்சு?"

"வீட்டு வாசல்ல கார்ல போட்டிருக்கான்."

"அப்ப கிட்டதான் ஆள் இருக்கு. வீட்ல தனியாவா வுட்டுட்டு வந்தே... டேய்."

"அனுப்பிட்டேன் ஐயா, ஆள் கிளம்பிடுச்சு."

"சரி. செல்வராஜ் கிளம்பு. போய் ஃபோன் பண்ணு. பேமானிங்க."

வீட்டு வாசலில் கார் நின்றபோது இரண்டு பேர் எழுந்து நின்றார்கள்.

"பெரியவர் அனுப்பிச்சாரு."

"சரி."

"என்னாங்க தொந்தரவு?"

"ஆளுங்க வூட்டுக்குள்ள நுழைய ட்ரை பண்றாங்க."

"சந்தேகமானா அமுத்திருட்டுங்களா?"

"வேணாம். அடையாளம் பார்த்துக்க."

"நல்லதுங்க." கும்பிட்டார்கள்.

செல்வராஜ் உள்ளே போனான். தெரு முனையில் உள்ள காருக்குள் இருந்தவன் சகலமும் கவனித்தான். காரை மெல்ல திருகிக் கிளப்பினான். செல்வாவின் வீட்டைக் கார் கடந்து போயிற்று.

"சாப்பிட வர்றீங்களா?"- அமுதா சமையலறையிலிருந்து கேட்டாள்.

"வேணாம். பசியில்லை. பால் மட்டும் போதும்."

பால் ஆற்றி எடுத்து வந்தாள்.

"ஏதாவது கிடைச்சுதா?"

"இல்லை."

"எம்மேல கோவமா?"

"இல்லை."

"நான் பேசினது தப்பா?"

"எனக்குப் புரியலை."

"எது?"

"எதுவுமே."

அமுதா பேசாது பால் ஆற்றி மேஜையில் வைத்தாள். எதிர் நாற்காலியில் உட்கார்ந்தாள். மேஜையில் தலை கவிழ்ந்து கிடந்தவனை மெல்லத் தடவினாள்.

நடுநிசிக்கு காத்திருந்தான். பன்னிரெண்டு பத்துக்கு ஃபோன் மணி அடித்தது. செல்வா தயாராக இருந்த டேப் ரெக்கார்டர் எடுத்தான். ஃபோனோடு பொருத்தினான். நிதானமாய் ரிஸிவர் தூக்கினான். உடம்பு மொத்தமும் காதாய் மாற்றி 'யெஸ்' என்றான்.

"ரிஸீவ்ட் போட்டோ?"

"யெஸ்."

"வீர் ஆர் மிலிடண்ட் குரூப், பஞ்சாப்."

"அடப் பாவிங்களா!"

"யெஸ்."

"எங்களுக்கெதிரான ஸி.பி.ஐ. நடவடிக்கை பற்றி எங்களுக்குத் தகவல் வேண்டும்!"

"நான் ஸி.பி.ஐ. இல்லை. பொலிஸ்."

"நீ யாரென்று எங்களுக்குத் தெரியும். வெட்டிப். பேச்சு பேசாதே!"

"சொல்."

"உன் முதல் ஒத்துழைப்பாய் எங்கள் தோழர்களைத் தகனம் செய்த இடம் தெரிய வேண்டும்."

"எனக்குத் தெரியாது. ஆபீஸில் கேட்க வேண்டும்."

"கேட்டுச் சொல்."

"மறுத்தால்?"

"உன் தெருவில் முதல் வீட்டுக்கு உன் மனைவியின் போட்டோ அவள் மட்டும் நிர்வாணமாய் இருக்கும் போட்டோ அனுப்பப்படும். படிப்படியாய்."

"படிப்படியாய்...?"

"நீ சம்பந்தப்பட்ட எல்லா இடத்துக்கும் போட்டோ போகும்."

"தகவல் எங்கே சொல்வது?"

"ஒரு நிமிடம்." எதிரே மௌனம் நின்றது. மௌனத்தின் பின் ஒரு ஒலி கேட்டது.

"தகவல் எங்கே சொல்லு."

"நாளை சொல்கிறோம்."

"எப்போது?"

"நடுநிசியில்"- ஃபோன் துண்டிக்கப் பட்டது.

செல்வா ஃபோனை வைத்தான். அவசரமாய் டேப்பை ரிவைண்ட் செய்தான். பெரிதாக்கினான். காதில் வைத்துக் கொண்டான்.

"தகவல் எங்கே சொல்லு?"

"லவ் லவ் என்பதா
சொல் சொல் மன்மதா
சொன்னால் போதுமா
தாகம் தீருமா?"

'நடுநிசியில் ரேடியோ உண்டா? இல்லை. அப்படியானால் இது டேப்ரிக் கார்டர். பஞ்சாப் மிலிடண்ட் இந்த பாட்டு கேட்பானா? தமிழ்பாட்டு. ஏன் கேட்கப் போகிறான்? டீக்கடை ஓட்டல். எந்த டீக்கடையில் பாட்டு?' செல்வா ஃபோன் சுழற்றினான்.

"ஐயா."

"நான்தான் சொல்லு செல்வராஜ்."

"பஞ்சாப் மிலிடண்ட்..."

"ம்மாள... நீ எப்படி இதுல...?"

"அவங்க கோவில்ல போன மாசம் சண்டை. நான் தான்... முதல்ல உள்ள பூந்தேன்."

"என்னவாம்?"

"தகவல் சொல்லணுமாம்: எங்க ஆபீஸ் நடவடிக்கை பத்தி... இல்லேன்னா எல்லோருக்கும் போட்டோ அனுப்புவான்."

"ம்ம்."

"ஐயா, அக்னி நட்சத்திரம் பாட்டு கேட்குது நடுவுல கேளுங்க." ரிவைண்ட் பண்ணி, டேப் ரெக்கார்டரை ஃபோன் வாயில் பொருத்தினான்.

"ஒன்று செய்!"

"கார் எடுத்துக்கிட்டு சரசரன்னு எல்லா இடமும் ஒரு ரவுண்ட் அடி. உடனே ஓடு. இது தொடர்ச்சியா பாட்டு வருமில்ல. இடம் குறிச்சுக்க. நான் என் ஆளுங்களை அனுப்பறேன். நாலாபக்கமும் அனுப்பறேன். டீக்கடை பசங்க டேப் போட்டிருப்பாங்க. அரை அவர் பொறுத்து மறுபடி ஃபோன் பண்ணு."

கந்தசாமி வீட்டு நாலு ஃபோனும் சுழற்றப்பட்டன. ஆட்கள் எழுப்பப்பட்டு பாட்டு ஒலிக்கும் டீக்கடை தேடினார்கள். கந்தசாமி வீட்டை விட்டு இறங்கினார்: கார் ஏறினார். **(தொடர்ந்து வரும்)**

---

## காதலர் தின ஸ்பெசல்

நெஞ்சத்திலே நீ நேற்று வந்தாய்
நேற்று முதல் ஓர் நினைவு தந்தாய்
நினைவு தராமல் நீ இருந்தால்
கனவுலகில் நான் வாழ்ந்திருப்பேன்!

-கண்ணதாசன்.

கண்டதும் காதல் என்பதை சினிமாவில் மட்டுமே நாம் காணமுடியும். சினிமாவில் காதலர்களாக நடித்தவர்களில் பலர் நிஜ வாழ்விலும் காதலில் கட்டுண்டிருக்கின்றனர்.

ஜெமினி கணேசன் பாப்ஜியை மணந்து 57 ஆண்டுகள் ஆகிறது. இதற்கு நடுவே அவர் புஷ்பவல்லி, சாவித்திரியோடு குடும்பம் நடத்தினாலும் அதிகாரபூர்வ 2வது மனைவியாக வெளிச்சத்திற்கு வந்து அங்கீகாரம் பெற்றவர் சாவித்திரியே. அது அவர் திறமையும், புகழ்மிக்க நடிகையாகவும் இருந்த காரணத்தாலே சாத்தியமாயிற்று.

நகைச்சுவை நடிப்பில் நான்கு தலைமுறைகளை கண்டது தங்கவேலு- எம். சரோஜா ஜோடி. சரோஜா, தங்கவேலுவின் 2வது மனைவி என்றாலும் இவர்களது மணவாழ்வின் வயது நீண்டது. அந்த வகையில் குருவான என்.எஸ்.கே. யைப் போலவே நடிப்பில் மட்டுமின்றி குடும்ப வாழ்விலும் வெற்றி கண்டவர் தங்கவேலு.

'பத்மினி பிக்சர்ஸ்' பி.ஆர். பந்துலு நாடக உலகில் இருந்தபோது அவரோடு நடித்த ஆண்டாள் அவரது மனைவியானார். பந்துலு படங்களைத் தயாரித்த போது அவரது படங்களில் தொடர்ந்து நடித்து வந்த 'அம்மா' நடிகையான எம்.வி. ராஜம்மா அவரது 2வது மனைவியானார். ராஜம்மா கதாநாயகி அளவில் ('வேலைக்காரி' விதிவிலக்கு) பெரிதாக புகழ்பெறாவிட்டாலும் அவரது அழகால் கவரப்பட்டவர்கள் திரை உலகில் நிறையபேர் உண்டு. பந்துலுவுக்கு முன்பே ராஜம்மாவுக்கு வீராசாமி என்று ஒரு கணவர் இருந்தார்.

எஸ்.எஸ். ராஜேந்திரன், தி.மு.க. சார்பு நடிகர்களில் ஒருவராக விளங்கிய டி.வி. நாராயணசாமியின் சகோதரியை மணந்து கொண்டவர். விஜயகுமாரியுடன் நடித்தபோது அவரை காதலித்து 2வது மணம் புரிந்தார். ஜெமினி-சாவித்திரி போல் இந்த ஜோடியும் புகழ்பெற்றது. ஆனால், ஐந்தாறு ஆண்டுகளிலேயே இவர்களுக்கு மனக்கசப்பு உண்டாகி பிரிந்து போனார்கள். இதற்கு பின் எஸ்.எஸ். ஆர், மூன்றாவதாக ஒருபெண்ணை திருமணம் புரிந்து அவருடனேயே குடும்பம் நடத்துகிறார். மூன்று மனைவிகள் மூலமாகவும் அவருக்கு வாரிசுகள் உண்டு.

நடிகை ராஜ சுலோசனாவின் முதல் கணவர் டைரக்டர் சி.புல்லையாவின் மகன் பரமசிவம். அவருக்குப் பின் டைரக்டர் சி.எஸ்.ராவ் அவரது 2வது கணவரானார். இந்த ஜோடிக்கு இரண்டு பெண்கள். ஒரே பிரசவத்தில் இரட்டையர்களாகப் பிறந்தார்கள்.

நடிகை எம்.என். ராஜம் முதலில் தட்சிணாமூர்த்தி என்ற நடிகரை காதலித்து மணந்தார். அவர் கார் விபத்தில் பலியானதால், பக்கத்து வீட்டில் குடியிருந்த பின்னணிப் பாடகர் ஏ.எல்.ராகவனோடு காதல் வயப்பட்டு மணந்து கொண்டார்.

கவிஞர் கண்ணதாசன், சினிமாவில் நடிக்க வந்த பார்வதியை காதலித்து 2வது மனைவியாக ஏற்றுக்கொண்டார். அதற்கப்புறம் வள்ளியம்மை (விசாலியின் தயார்).

கவிஞர் வாலி, 'பணம் தரும் பரிசு' என்ற படத்தில் அறிமுகமாகி நடித்த ரமண திலகத்தை காதலித்து மணந்தார்.

பல படங்களைத் தயாரித்தவர் பாலாஜி. அந்த படங்களில் நடித்த கே.ஆர்.விஜயாமீது வேலாயுதம் மையல் கொள்ள, அந்த

### திரையுலக ❤❤ காதலர்கள்



காதலுக்கு பாலாஜி உதவினார் என்றாலும் விஜயா- வேலாயுதம் குடும்பம் நடத்தத் தொடங்கி நீண்ட நாட்களுக்குப் பின்பே அவர்களது மண வாழ்க்கையை வெளியுலகம் கண்டது.

குரூப் நடனப் பெண்களில் ஒருவராக வந்து, பின் சிறு வேடங்களில் நடித்த சாந்தி, ஐ.வி.சசியின் 'அவளோட ராவுகள்' மலையாளப் படத்தில் சீமாவாக- செக்ஸியாக அறிமுகமாகி அந்த நட்பில், காதலில் அவரது மனைவியானார்.

பீம்சிங் இயக்கிய படங்களில் தேவிகா நடித்த போது அவருக்கு வசனம் சொல்லிக் கொடுக்க வந்த உதவி இயக்குநரான தேவதாஸின் தோற்றம், செயல் அவரைக் கவர காதலித்தார். மணந்து கொண்டு பெற்ற மகள்தான் நடிகை கனகா.

'உன்னிடம் மயங்குகிறேன்' என்ற படத்தில் முதன் முதலாக ஜோடி சேர்ந்த விஜயகுமார்- மஞ்சுளா தலைப்பை நிஜமாக்கி ஒன்று சேர்ந்தாலும், அதை 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்ற ரீதியில் பத்திரிகையாளரிடம் மறுத்தாலும்- கடைசியில் வழக்கம்போல கணவன்- மனைவியாக புகைப் படத்திற்கு காட்சி தந்தனர்.

'டார்லிங் டார்லிங் டார்லிங்' படத்தில் பூர்ணிமா ஜெயராம் நடித்தபோது பாக்யராஜுடன் அவரை இணைத்து எவ்வித கிசு கிசுவும் வெளியாகவில்லை. படப்பிடிப்பு முடிந்து யூனிட்டெல்லாம் ஊட்டியை விட்டு சென்னை வந்தபின் பாக்யராஜை பூர்ணிமாவோடு இணைத்து பலமாகவே செய்திகள் பரவின. அதற்கு முன் நடிகர் மோகனுடன் இணைத்து பேசப்பட்டவர் பூர்ணிமா. அப் போதும் அதை மறுத்த பூர்ணிமா, பாக்யராஜுடன் இணைத்து செய்திகள் வெளியிட்டவர்களை மட்டுமின்றி, பார்க்கிற பத்திரிகையாளர்களிடம் எல்லாம் 'காதலும் இல்லை, கத்தரிக்காயும் இல்லை' என்றார் கோபமாக. பேட்டியென்றாலே மறுத்தார்.

பிரவீணா திடீரென்று உடல் நலக் குறைவுற்று மருத்துவமனையில் சேர்க்கப் பட்டபோது அவரை அடிக்கடி சென்று பார்த்தார் பூர்ணிமா. பிரவீணா மரணமடைய, பாக்யராஜ்-பூர்ணிமாவை மணப்பது பகிரங்கமானது.

ரேவதி காதலித்தது ஒரு சுரேஷ். மணந்து கொள்ள நினைத்தது வேறொரு சுரேஷ். மணந்து கொண்டது ஒளிப்பதிவாளர் சுரேஷ் மேனனை.

ஆனால், பரபரப்பு ஏற்படுத்திய காதலர்கள் பார்த்திபன்-சீதா. பெற்றோருக்குத் தெரியாமல் பார்த்திபன் வீடு சென்று சீதா அவரை மணந்து கொண்டது, சினிமாவை நிஜமாக்கிய செயல்.

நளினி-ராமராஜன் திருமணமும் கிட்டத்தட்ட இப்படித்தான். இரண்டு திருமணங்களுமே பலத்த போராட்டங்களை சந்திக்க வேண்டியதாயிற்று.

இந்த சினிமா காதலர்களின் வரிசை இப்படி போய் கொண்டேதான் இருக்கும். முடிவே இருக்காது. இப்போதைக்கு நிறுத்திவைப்போம்!



படிப்பகம்




17

## பட்டுக்கோட்டை பிரபாகர்

மதுமிதாவின் முகத்தையே சில வினாடிகள் அமைதியாகப் பார்த்தான் சந்திரசேகர். பெருமூச்சு விட்டான்.

அவன் சொல்லப் போகும் பதிலுக்காக அவள் காத்திருந்தாள். அவள் தலையை இதமாகக் கோதி விட்டான் சந்திரசேகர்.

"சொல்லுங்க சந்திரசேகர்!"

"என்ன சொல்லச் சொல்றே?"

"இந்த ஆஸ்பத்திரிலயே நாம கல்யாணம் செய்துக்கிட்டா என்ன சந்துரு?"

"நீ ரொம்ப குழம்பிப் போயிருக்கே மது."

"எங்கம்மாவைப் பத்தித் தெரிஞ்சதாலதான் அவசரப்படறேன்."

"நீ அவசரப்படறதுக்கு வேற ஒரு காரணம் இருக்க முடியுமான்னு நான் யோசிக்கிறேன் மது."

"என்ன?"

"என் மேல உனக்கு நம்பிக்கை குறைஞ்சிருக்கு- அப்படித்தானே?"

"சேச்சே! அப்படி இல்லைப்பா."

"அப்படித்தான் எனக்குத் தோணுது. இந்தக் கல்யாணம் நீயும், நானும் சம்பந்தப்பட்டது. ரெண்டு பேரும் அதில உறுதியா இருக்கோம். மூணு வாரத்தில யார் மனசை யார் கலைச்சிட முடியும்?"

"உங்களுக்கு ஈஸ்வர் பத்தித் தெரியலை. அந்தாளு ஒரு நரி. குறுக்குத்தனமா ஏதாச்சும் யோசிப்பாரு. அதெல்லாம் யோசிச்சுப் பார்த்துத்தான் ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டு, அப்புறம் சமூகத்துக்கு தெரிவிக்கலாம்னு சொன்னேன். நீங்களும் ஒத்துக்கிட்டீங்களே..?"

"நடிகர் சுபாஷோட படப்பை பங்களால பிள்ளையார் கோவில்ல கல்யாணம் பண்ணிக்கலாம்னு பேசினோம். இப்ப என்னடான்னா, ஆஸ்பத்திரில தாலி கட்டுன்னு சொல்றே. உங்க சினிமால வர்ற சீன் மாதிரி இருக்கு."

"நான் ஆஸ்பத்திரி இருக்கறப்ப அவங்க ஏதாச்சும் சதி செஞ்சிடுவாங்கன்னு நான் ரொம்ப பயப்படுறேன் சந்துரு. ப்ளீஸ்... எனக்காக இந்தத் திட்டத்துக்கு நீங்க சம்மதிங்க. அற் எனி காஸ்ட், உங்களை நான் மிஸ் பண்ணத் தயாரா இல்லை. என்னை ஒரு பொருளா, இயந்திரமா பார்த்த உலகத்தில பெண்ணாப் பார்த்தவர் நீங்க மட்டும்தான். என் மனசை துல்லியமாப் புரிஞ்சுக்கிட்டவர் நீங்கதான், ப்ளீஸ் சந்துரு!"

மதுமிதாவின் கண்கள் கலங்கி துளிகள் உருண்டன.

"ஏய்! என்னம்மா இது? எதுக்கு இப்ப கண் கலங்கறே? ஓ.கே. படப்பை பங்களாலயும் ரகசியமாத்தான் பண்ணிக்கிறதா இருந்தோம். இங்கயும் ரகசியமாத்தான் பண்ணிக்கப் போறோம். இடம்தானே மாறுது? ரைட்டு. அது சரி, எலெக்ஷன்ல எம்.ஜி.ஆர். படுத்துக்கிட்டே ஜெயிச்சாரே, அந்த மாதிரி படுத்துக்கிட்டே தாலி கட்டிக்கப்போறியா? அட்லீஸ்ட் நீ

"முகூர்த்தப் புடவை, வேஷ்டி, சட்டை எடுத்துட்டு வந்துடறேன். ரெண்டு மாலை வாங்கிட்டு வந்துடறேன். தாலி செஞ்சிட்டு வந்துடறேன். வேற?"

"உங்ககிட்ட இருக்கிற ஸ்டில் கேமிராவும், வீடியோ கேமிராவும் எடுத்துட்டு வந்துடுங்க. சுபாஷ் சார் எடுத்துக்கொடுப்பாரு. அதான் நமக்கு ரெக்கார்ட். ரெஜிஸ்டர் பண்றதுக்குத் தேவைப்படும்."

"அய்யர்- மந்திரம் எல்லாம் வேணாமா?"

"எனக்கு அவசியம்னு தோணலை. வேணும்னா நாதஸ்வரம் மட்டும் கேஸட்ல போட்டுக்கலாம்."

"ஆஸ்பத்திரிக்குள்ளே கல்யாணம்னு இப்ப நினைச்சாலும் விநோதமாத்தான் இருக்கு மது."

"அவசியத்துக்காகத்தானே இப்படிப் பண்றோம்?"

"ரைட்டு. ரைட்டு. பிரஸ்மீட்வெச்சு அறிவிக்கிறது எப்போ?"

"அது நான் டிஸ்சார்ஜ் ஆகிற அன்னைக்கு. எழுந்து நடக்கிற நிலைமைக்குக்கூட வர வேணாமா?"

"டாக்டரைக் கேட்டுட்டேன். இன்னும் நாலு நாள் கழிச்சு என்னை ரூமுக்குள்ளேயே நடக்க வைப்பாங்களாம். அதனால வர்ற வெள்ளிக்கிழமை காலைல பத்து மணிக்கு இதே ரூமில நமக்கு கல்யாணம் சரியா?"

"ரைட்டு. ரெண்டு பேர் சாட்சி வேணும்."

"சுபாஷ் எப்ப கூப்பிட்டாலும், எங்க கூப்பிட்டாலும் வர்றேன்னு சொல்லியிருக்கார். அவர் ஒருத்தர் கிட்டதான் இதுபத்தி மனசு விட்டுப் பேசியிருக்கேன்."

"இன்னொருத்தரா எங்க ஆபிஸ்ல வேலைபார்க்கிற தேசிகாச்சாரியைக் கூப்பிட்டுக்கறேன். என் மேலே பிரியமும், அக்கறையும் உள்ளவரு."

"போதும். இந்த ரெண்டு பேர் போதும். அந்த சமயத்தில இந்த ஹாஸ்பிடல் டாக்டரையும் கூப்பிட்டுக்கலாம்."

"ரிசப்ஷன்?"

"அது பிரஸ் மீட்டுக்கு அப்புறம் வர்ற ஏதாச்சும் சண்டே."

"அதையாச்சும் கிராண்டா வைக்கணும் மது."

"கண்டிப்பா. புதுமையாவும் ஏதாச்சும் செய்யலாம். என்டெர்டயின்மெண்ட்ல வழக்கமா கர்நாடிக் இல்லை. லைட் மியூசிக்தான் எல்லாரும் வைக்கிறாங்க. நாம வேற ஏதாச்சும் ஏற்பாடு செய்யணும். இங்கு ஆஸ்பத்திரில சும்மாதானே இருக்கேன். நல்லா யோசிச்சு வித்தியாசமான ஐடியாஸ் பண்றேன். அப்புறம் சந்துரு, உங்ககிட்ட எனக்கு ஒரு பர்மிஷன் வேணும்."

"என்ன?"

"கல்யாணத்துக்கப்புறம் நான் கண்டிப்பா நடிக்கப் போறதில்லைன்னு ஏற்கனவே முடிவு செஞ்சாச்சு. அதே சமயம் என் நேரத்தை வீட்ல சமையல் பண்றதில செலவு செய்ய விருப்பமில்லை. சமூகத்துக்கு உபயோகமா ஏதாச்சும் பிஸியா செய்யணும்."

"உனக்கு எப்படி இஷ்டமோ அப்படிச் செய்யின்னு ஏற்கனவே நான் சொல்லிட்டேனம்மா"

"முதல் கட்டமா ஒரு பத்திரிகை ஆரம்பிக்கணும்னு நினைக்கிறேன் சந்துரு. சர்க்குலேஷன் கம்மியா போனாலும் பரவாயில்லை, ஒரு வீரியத்தோடு அந்தப் பத்திரிகை வரணும். கவிதைகளுக்கு அதிக முக்கியத்துவம் தரணும்."

சந்திரசேகர் மெல்லச் சிரித்தான்.

"என்ன சந்துரு சிரிக்கறீங்க?"

"எங்க ஆபீஸ்ல சாரின்னு இருக்காருன்னு சொன்னேனே, அவர் இப்ப இங்க இருந்து நீ சொல்றதைக் கேட்டாருன்னா மயக்கமே போட்டு விழுந்துடுவாரு. அதை நினைச்சிக்கிட்டேன்."

"ஏன் அப்படி?"

"அவர் நடிகைகள் மேல வெச்சிருக்கிற அபிப்பிராயம் அப்படி!"

"என்ன அவரோடு அபிப்பிராயம்!"

"வேணாம். அது உனக்கு முக்கியமில்லை."

"சும்மா சொல்லுங்க."

"நான் உன்னைப்பத்தி என்ன அபிப்பிராயம் வெச்சிருக்கேன்கிறதுதான் உனக்கு முக்கியம். விட்டுடு. அப்ப நான் புறப்படறேன். அப்பப்ப ஃபோன் பண்றேன். சும்மா எதையாச்சும் யோசிச்சுக்கிட்டே இருக்காம நல்ல ரெஸ்ட் எடு. என்ன?"

சந்திரசேகர் எழுந்து கொண்டு அவள் நெற்றியில் முத்தமிட்டு கன்னத்தில் தட்டி விட்டு நடந்தான்.

★★★

புரொடக்ஷன் மேனேஜர் செல்லப்பன் பவ்யமாக நின்று கொண்டிருந்தான்.

சோபாவில் கால்மேல் கால் போட்ட மர்ந்தபடி கணக்கு நோட்டைக் கண்ணாடி போட்டு வரிவரியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் துர்க்கா.

"என்னையா இது, ஒரு ஃபைட் சீனுக்கு ஐநூறு ஜூனியர் ஆர்ட்டிஸ்டா? எதுக்குய்யா அவ்வளவு பேரு?"

"திருவிழாவுல நடக்கிற சண்டைம்மா. அதனாலதான் டைரக்டர் அத்தனை பேரு கேட்டாரு."

"அவருக்கென்ன இஷ்டத்துக்கு கேட்டுடுவாரு! இங்க என்ன பணம் அருவி மாதிரி கொட்டிக்கிட்டு இருக்கா? அந்தாளு சொந்தப் படம் எடுத்தாரே.... அதில் இப்படித்தான் ஐநூறுபேர், ஆயிரம் பேர்னு ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்ஸ் யூஸ் செஞ்சாரா? அடுத்தவங்க காசுன்னா விளையாடிப் பார்க்கறதா?"

"இல்லைம்மா. அப்பதாம்மா ரிச்சா கிராண்டா தெரியும்?"

"நூறுபேரை வெச்சுக்கிட்டே ஐநூறு பேர் இருக்கிற மாதிரிக் காட்டலாம். அதுக்கெல்லாம் கொஞ்சம் வித்தை தெரியணும். நாளைக்கும் இருக்கா ஃபைட்டு?"

"ஆமாம்மா"

"அஞ்சி நாளாவா ஒரு ஃபைட்டை எடுக்கறாரு?"

"கொஞ்சம் பெரிய ஃபைட்டும்மா"

"டைரக்டரை நாளைக்குக் காலைல செட்டுக்குப் போறதுக்கு முன்னாடி இங்க வரச் சொல்லு!"

"எதுக்குன்னு கேட்டா?"

"ஃபர்தர் ஷூட்டிங் பத்தி டிஸ்கஸ் செய்யணும்னு சொல்லு. நான் செட்டுக்கு வந்தா எனக்கு டென்ஷன் ஏறிடும். நாலு பேர் இருக்காங்களேன்னு பார்க்காம கத்திடுவேன். அது நல்லா இருக்காது. நீ வரச் சொல்லு. நான் பேசிக்கறேன்."

"சரிங்கம்மா"

செல்லப்பன் கணக்கு நோட்டை வாங்கிக்கொண்டு அகல, துர்க்கா கண்ணாடியைக் கழற்றி மடக்கி வைத்தாள்.

கார் வந்து நின்று ஈஸ்வர் அதிலிருந்து அவசரமாக இறங்கி உள்ளே வந்தார்.

"துர்க்கா, இப்படி வா!"

தனியறைக்கு அவர் நடக்க, அவளும் தொடர்ந்தாள்.

"கைகொடு சொல்றேன்."

"எதுக்குங்க?"

"கொடு சொல்றேன். அந்த சந்திரசேகர் யாரு, என்னன்னு கண்டு பிடிச்சிட்டேன்."

முகமலர்ந்தாள் துர்க்கா, "அப்படியா? யாருங்க அவன்?"

"கொஞ்சம் பசையுள்ள பார்ட்டியாத்தான் பிடிச்சிருக்கா. பெரிய ஸாமில்லு வெச்சிருக்கான். மரவியாபாரம் ஹோல் சேல். எம்.பி.ஏ. படிச்சிருக்கான். அப்பா, அம்மா இல்லை. அவனை வளர்த்தது ஒரு கிறிஸ்டியன். ரொஸாரியோன்னு பேரு. அவரு இண்டர்நேஷனல் பிஸினஸ்மேன். பல வியாபாரம் பல நாட்ல. பறந்து கிட்டே இருக்கிறவரு. அவருக்குத் தனிக்குடும்பம், குழந்தைங்க உண்டு. இவனை வளர்த்து, படிக்க வெச்சி மெட்ராஸ்ல உள்ள பிஸினஸ மட்டும் ஒப்படைச்சிட்டாரு."

"இதெல்லாம் நமக்கெதுக்குங்க. நாம என்ன சம்மந்தம் பேசப்போறமா? மதுமிதா மனசுல இருந்து அவனைப் பிடுங்கித் தூரப்போடணும். இல்லை அவனை கரெக்ட்செஞ்சு இவளை விட்டு விலக வைக்கணும். அதுக்கு என்ன வழி?"

"ஒரு யோசனை சொல்றேன். சரியா வருமான்னு பாரு!" என்றார் ஈஸ்வர்.

(தொடரும்)



> "அப்பா, அம்மா பாத்திரங்களில் நடிப்பவர்களை நினைத்தால் பாவமாய் இருக்கிறது. புராணப்படமாக இருந்தால் நல்ல உடைகளை- போனால் போகிறதென்று கொடுப்பார்கள். சமூகப் படமென்றால் வீட்டிலிருந்தே தயாராக வரவேண்டியதுதான். கேவலம் ஒரு முகப்பவுடருக்குக்கூட விதி கிடையாது."
>
> -ஒரு கட்டுரையில்... 'கலை'- நவம்பர், 1949 இதழில்-


## யார் இவர்?



யார் இந்தச் சிறுமி? இன்று பிரபல நடிகையாக இருப்பவர்தான் இவர். காதல் என்று ஆரம்பிக்கும் தமிழ் படத்திலும் கதாநாயகியாக நடித்தவர். இந்தியாவில் தேசிய விருது பெற்றவர். இவர் தமிழ்ப் படங்களில் நடித்தாலும் நிரந்தரமாக நடிப்பது வேறு மொழிப்படங்களில். என்ன, கண்டுபிடித்து விட்டீர்களா? விடை உதவி 18ம் பக்கம்.

## கவியரசு கண்ணதாசன்

## நில்-கவனி-முன்னேறு



இன்றைய இளம் பருவத்தினருக்குச் சிலவற்றை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நமது மூதாதையர்கள் முட்டாள்களல்ல.

காலையில் குளித்து, விபூதி பூசி, கடவுளைத் தொழுது, காலைப் பலகாரம் உண்டு, கடமையைத் தொடங்கி, மாலையில் சிறிது தூரம் நடந்து, விளக்கு வைத்ததும் கொஞ்ச நேரம் படித்து, ஒன்பது மணிக்கு முன் உணவருந்தி அமைதியான தூக்கத்தில் ஆழும் முறையான வாழ்க்கைத்தான் ஒருவனை நோயற்றவனாகவும், கவலையற்றவனாகவும் வைத்திருக்கும்.

காலம் தவறிய, முறை தவறிய எதுவும் உடலைக் கெடுத்து உள்ளத்தின் நிம்மதியை அழித்துவிடும்.

கடந்துபோன காலங்களை எண்ணி நான் நொந்து வெந்து கொண்டிருக்கிறேன்.

சில பழக்கங்களைப் பழகாமல் இருந்திருந்தால், சில சேர்க்கைகளைச் சேராமல் இருந்திருந்தால் இன்று நான் உலகத்தில் ஒருவனாக நிமிர்ந்திருப்பேன்.

செய்த தவறுகள் எதிரொலிக்கின்றன.

'அவசரத்தில் கல்யாணம்; சாவகாசத்தில் சங்கடம்' என்றாகி விட்டது.

புகை பிடிப்பது கொடிய பழக்கம். பழகிவிட்டேன்; நிறுத்த முடியவில்லை!

மதுப்பழக்கம் உடலைக் கெடுக்கிறது; மறக்க முடியவில்லை!

பல்லாயிரக் கணக்கான வருமானமும் போதவில்லை; நிம்மதியும் இல்லை.

நேரடியாகக் கவனிக்க முடியாத நிலையில் சில தொழில்களை ஆரம்பித்தேன்.

என்னிடம் வேலை பார்த்தவன் பணக்காரனாக இருக்கிறான்.

நான் கடன்காரனாக இருக்கிறேன்.

மோசமான மனிதர்களை நண்பர்களாகப் பெற்றேன்; பொருள் அழிவும், அவமானமும் மிச்சம்.

ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு முள் குத்துகிறது.

இன்றைய இளைஞனுக்கு என்னுடைய வாழ்க்கை ஓர் எச்சரிக்கை.

பழைய பண்பாடுகளை அவன் மறந்து விடக்கூடாது.

புகை, மது போன்ற கொடிய பழக்கங்களைப் பழகிக் கொள்ளக்கூடாது.

தனக்குத் தெரியாத தொழிலில் ஈடுபடக்கூடாது.

நாணயம் கெட்டவர்களை வேலைக்கு வைக்கக்கூடாது.

தனக்காகக் கையெழுத்துப் போடும் உரிமையை எந்தப் பங்காளிக்கும் தரக் கூடாது.

வேறு வழியில்லாத கடுமையான நிலை இருந்தாலொழியக் கடன் வாங்கக் கூடாது.

வாங்கினால் கடனை மொத்தமாகத் திருப்பிக் கொடுத்து 'புரோநோட்'டைத் திருப்பி வாங்கிவிட வேண்டும்.

இல்லையென்றால் அந்தக் கடனே ஆயுள் காலக் கடனாகிவிடும்!

வரவுக்குமேல் செலவிட்டால் மானமிழந்து, மதியிழந்து, செல்லுமிடமெங்கும் 'திருடன்' என்று பேர் வாங்க நேரிடும்.

ஒருவனைப் பற்றிச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், அவனைப் புகழ்ந்து பேசி விடக்கூடாது.

பல வருஷ காலம் நம்பிக்கையாக இருந்த ஒருவனைத் திடீரென்று சந்தேகிக்கக்கூடாது.

ஒவ்வொரு பைசாவும் எதிர் காலத்துக்கு உதவுமே என்று சேமிக்க வேண்டும்.

அயோக்கியர்களின் சாகசத்தைக் கண்டு இரக்கப்பட்டு விடக்கூடாது.

ஒவ்வொரு நாளும் என்ன செய்தோம் என்பதை அன்றிரவே கணக்குப்போட்டுப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஆத்திரத்தில் ஓர் ஆபத்தான பொய்யைச் சொல்லிவிட்டால், உடனே பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும்.

இன்றைய இளைஞன் இவற்றை மனத்திலே கொண்டு வாழ்ந்து பார்க்கட்டும்; எந்தக் கட்டத்திலும் அவனுக்குத் தோல்வியில்லை, அவமானமில்லை.

மேற்கண்ட ஒன்றையும் நான் சரியாகக் கடைப்பிடித்ததில்லை; அதன் விளைவு கேவலமான, துயரம் மிகுந்த பாபச் சின்னங்கள் என் கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கின்றன. இனி நான் இளமையில் இருந்து வாழ்க்கையைத் தொடங்க முடியாது.

இன்றைய இளைஞனுக்கு அந்த வாய்ப்புகள் இருக்கின்றன.

அவன் அவற்றை மறந்துவிடக் கூடாது.

மேற்காணும் தவறுகளைச் செய்யாமலிருந்தால் ஒவ்வொருவருமே 'மகாத்மா' வாகி விடலாம்.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கண்ணனை நம்புங்கள்; கவலைகள் குறைந்து விடும்.




www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## காதலர் தின ஸ்பெசல்

# காதலிக்க வயது

கஹுவாஞ்சிக்குடி யோகன்
அவுஸ்திரேலியா

வேலாயுதம் 'மாஸ்ரர்' என்றால் ஊருக்குள் பல பேருக்குத் தெரியாது; ஆனால் மிதுளாவின் அப்பாவென்றால் இளசுகள் முதல் பெரிசுகள் வரை அத்தனை பேரும் அவரை அடையாளப் படுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

அந்தளவிற்கு தந்தையை மகள் அங்கீகாரப்படுத்தியிருந்தாள். இதற்கு மிதுளாவின் அழகான தோற்றந்தான் முக்கிய காரணம். இயற்கையாகவே அழகுப் பெட்டகம்போல் காட்சியளித்த அவளது உருவமே காரணியாக அமைந்தது.

பருவப் பெண்கள் கொஞ்சம் அழகாக இருந்தாலே போதும்; ஆடவர் கூட்டம் பின்னாலே அலை மோதத் தொடங்கும்.

**"முதன் முதலாக என்னை சலனப்படுத்தியவர் நீங்கள். நான் காதலிக்கும் முதல் பெண்ணும் நீங்கள்தான்!"**



மிதுளா போன்றவர்களுக்கு நிலமையைச் சொல்லவும் வேண்டியதில்லை. அவளின் மனதில் இடம் பிடித்துக்கொள்ள பலபேர் களத்தில் குதித்திருந்தனர். அதில் சேகரும் ஒருவன். அவன் அந்தப்பாடசாலைக்கு கிட்டத்தட்ட புதிதாகவே வந்த மாணவன்.

விளையாட்டுத் துறையாகட்டும், 'கிற்றார்' போன்ற மியூசிக் துறையாகட்டும், 'கம்பியூட்டர்' போன்ற தொழில் நுட்பத் துறையாகட்டும் அத்தனையிலும் முதன்மை மாணவனாக வலம் வரத் தொடங்கியிருந்தான் சேகர்.

அவனது துடிப்பிலும் உற்சாகத்திலும் பல மாணவிகள் அவன் பக்கம் சாய நினைத்தது உண்மை.

சேகரைப் பார்த்து மிதுளாவும் மனதைப் பறிகொடுத்துத்தான் இருந்தாள். ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் மௌனமாகவே இருந்து கொண்டாள். இந்த நேரந்தான் அவளின் விருப்பம் கேட்டு சேகர் கடிதம் கொடுத்தான். அவனது கடிதம் கண்டு மிதுளா உள்ளூர மகிழவே செய்தாள். தன்னைச் சலனப்படுத்திய ஒருவன் தானாகவே வந்து விருப்பம் கேட்கும் பொழுது அவளுக்கு சந்தோஷமாக இருந்தது.

மிதுளா- சேகர் இருவரின் மனமும் ஒன்றாக இணைய ஆரம்பித்தது. அவர்கள் காதலர்களாக வலம் வரத் தொடங்கினார்கள். பாடசாலை தவிர்ந்த பல இடங்களில் இருவரும் தனிமையில் சந்தித்தார்கள். காதல் வாசகங்களை அள்ளி வீச ஆரம்பித்தார்கள்.

"மிதுளா, நான் விரும்பிய முதற் பெண்ணும் நீர்தான்; நான் எழுதிய முதல் காதல் கடிதமும் உமக்குத்தான், நாமிருவரும் இணைந்தது உண்மையில் பூர்வஜென்ம பந்தமாகத்தான் இருக்கவேணும். இனி எம்மை யாராலும் பிரித்துவிட முடியாது மிதுளா, என்று தனது அன்பை சேகர் அடிக்கடி வெளிப்படுத்துவான். அவனது அன்பு வார்த்தைகள்- அரவணைப்புப் பேச்சுக்கள் மிதுளாவைச் சிறைப்படுத்திப் பைத்தியமாக்கியிருந்தன.

அவனை மிகவும் நேசிக்கத் தொடங்கினாள் மிதுளா. அவளுக்குச் சேகர் என்றால் உயிர். சிலநேரங்களில் அவன் அவசரப்படும் சபலப்புத்தியை நினைத்து மிதுளா பயப்படுவதுண்டு. இருந்தும் இவையெல்லாம் பெரிதாக- ஒரு பொருட்டாக அவளுக்குத் தெரிவதில்லை. மொத்தத்தில் சேகர் இன்றி அவளால் உயிர் வாழ முடியாது என்ற நிலை உருவாகிக் கொண்டு வந்தது.

அப்பொழுது பாடசாலை விடுமுறை தொடங்கியிருந்தது.

"இன்று மாலை அம்மன் கோயில் குளக்கட்டுக்கு வரவும்," என்று சேகர் மிதுளாவிற்குத் தூது அனுப்பியிருந்தான்.

அவளுக்கு கண்கள் கலங்கி அழுகையே வந்துவிட்டது. அன்றுமாலை அவளுக்குச் சேகரைச் சந்திக்க முடியாத சூழ்நிலை உருவாகியிருந்தது.

பக்கத்து நகரிலுள்ள பெரியம்மாவின் வீட்டுக்குப் போவதற்கு மிதுளாவின் பெற்றோர் தயாராகிக் கொண்டிருந்தார்கள்.

'பெரியம்மாவின் மகள் பெரியவளாகி விட்டாளாம்.' அந்தச் சடங்கிற்கு மிதுளாவும் போக வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்திருந்தது.

"நான் வீட்டிலிருந்து படிக்கிறேன் அம்மா," என்று அவள் மறுத்துப் பார்த்தாள்.

"ஒருநாள் படியாவிட்டால் ஒன்றும் குடி முழுகிப் போகாது!" என்று தாயார் அவளையும் இழுத்துக்கொண்டு போயிருந்தாள்.

பெரியம்மா வீட்டில் மிதுளா, பகீரதியுடன் விரும்பிப் பழகுவாள். இருவருக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுடையதால் கூடுதல் நெருக்கம் உருவாகியிருந்தது. இத்தனைக்கும் பகீரதி அவர்களுக்குச் சொந்தக்காரி இல்லை. கிராமமொன்றை பிறப்பிடமாகக் கொண்ட பகீரதி, பெரியம்மா வீட்டில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து படித்துக் கொண்டிருந்தாள். இந்த பகீரதி சில நேரங்களில் பாட்டிமாதிரி பேசி புத்திமதிகள் கூறுவாள். இது மிதுளாவிற்குப் பிடிக்கும்.

அன்றும் மிதுளா தன் காதலைப் பற்றி பகீரதியிடம் அவிழ்த்துவிடத் தொடங்கினாள்.

"நீ சேகரைப் போல் ஒருத்தரைப் பார்த்திருக்க மாட்டாய், அந்தளவிற்கு அழகு, குணம் எல்லாம் அவரிடம் நிறைந்திருக்கு, அவர் ஒரு நிமிடங்கூட என்னைக் காணாமல் இருக்கமாட்டார். எனக்கும் அதே நிலமைதான், கல்யாணமென்று ஒன்று எனக்கு நிகழ்ந்தால் அது சேகருடன்தான்!" என்று கூறிய மிதுளா அவனைப் பற்றிய முழுத் தகவல்களையும் பகீரதிக்குச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

பகீரதி புன்னகையுடன் கேட்டபடியிருந்தாள்.

"நீ ஒருவரையும் காதலிக்கவில்லையா?" என்று பகீரதியிடம் வினவிய மிதுளா "ஓ உனக்குத்தான் காதல் என்றால் பிடிக்காதே" என்றாள்.

"யார் சொன்னது எனக்குக் காதல் பிடிக்காதென்று?"

"எல்லாவற்றிற்கும் ஒரு வயது வரம்பு வேணும்!"

"இது காதலிக்கிற வயது இல்லை!"

"சரி அறுக்கத் தொடங்கிவிட்டாய், சும்மா அறுக்காமல் இரு தாயே, உனக்குச் சேகரைத் தெரியாது, நீ அவரைப் பார்த்தால் என்னிடமிருந்து கொத்திக் கொண்டு போய்விடுவாய்" என்றாள் மிதுளா.

பகீரதி எதுவுமே கதைக்கவில்லை. மெதுவாக எழுந்து அறைக்குள் போய் ஒரு காகிதம் எடுத்துவந்து, "வாசித்துப்பார்!" என்று நீட்டினாள்.

*என் உயிரில் கலக்கத் துடிக்கும் பகீரதிக்கு, முதன் முதலாக என்னைச் சலனப்படுத்தியவர் நீங்கள். அதனால் நான் விரும்பும் முதற்பெண்ணும் நீங்கள்தான்! நான் எழுதும் முதற் காதல் கடிதமும் உங்களுக்குத்தான்! வாழ்க்கையில் நாமிருவரும் ஒன்றாக இணைய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அப்படி இணைந்தால் அது நான் செய்த பூர்வஜென்ம புண்ணியம் என்றுதான் சொல்வேன்....*

வாசித்துக் கொண்டு போன மிதுளாவிற்குத் தலை சுற்றியது.

முத்து முத்தான அதே எழுத்துக்கள், கொப்பி அடித்தாற்போல் தனக்கு எழுதிய அதே வாசகங்கள், இறுதியில் கே.ஜி.சேகர் என்ற அதே அழகான கையெழுத்து. மிதுளா தடுமாறிப்போனாள்.

"இது எப்படி உனக்கு?" கேட்டாள்.

"கம்பியூட்டர் கிளாசுக்குப் போகிறேன் என்று சொல்லியிருந்தேன் அல்லவா? அங்கே இந்தச் சேகரும் வருவான், அப்போதுதான் எனக்கு இதைத் தந்தான்."

"நீ அவரை விரும்பவில்லையா பகீரதி?"

"அதுதான் சொன்னேனே இப்பொழுது அதிலெல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. நான் மறுத்துவிட்டேன். நீ இல்லாவிட்டால் சேகர் உயிர் வாழ மாட்டார் என்றாயே! இதெல்லாம் வெறும் பிரமை. இந்த வயதில் உருவாகுவது காதலல்ல; ஒருவகைக் கவர்ச்சி. இதில் யாரைப் பார்த்தாலும் ஆசைதான் உண்டாகும். அனுபவித்துப் பார்க்கச் சொல்லித்தான் மனசு துடிக்கும். ஒரு சிலர் இதற்கு விதி விலக்காக இருக்கலாம். ஆனால் சேகரைப் போன்ற ஆண்கள் அப்படியிருக்க மாட்டார்கள், இப்பொழுது நீ ஒழுங்காகப் படிப்பில் கவனம் செலுத்து! காதலிக்கவும் ஒரு நேரம் வரும்; ஒரு வயது வரும்..." என்று நீட்டிக்கொண்டே போனாள் பகீரதி. மிதுளாவிற்குப் பலமாக யோசனை உருவாகத் தொடங்கியிருந்தது.

"நீ ஒருத்திதான் நான் விரும்பிய பெண், உன் ஒருத்திக்குத்தான் நான் கடிதம் எழுதினேன், என்பதெல்லாம் எவ்வளவு பொய்"

'இப்படி எத்தனை பெண்களுக்குச் சொல்லி எத்தனை பெண்களுடன் தொடர்பு கொண்டிருப்பாரோ?'

பெரியம்மாவின் வீட்டிலிருந்து திரும்பும்போது மிதுளாவின் மனதிலிருந்து சேகர் கொஞ்சங் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தான். ■

# இளமை என்றால்...

ரூபா

அந்தக் கல்லூரியின் மரங்கள், மலரை தூவி அவளை வரவேற்பதைப் போலிருந்தது. வராண்டாவில் தன் குதி உயர் செருப்புத் தாளம், நாட்டிய கச்சேரிக்கு நட்டுவாங்கம் போல் ஒலிக்க, ஒரு அரபி குதிரையின் அழகுடன் நடந்து சென்றாள்.

பின்னாலிருந்து ஒரு குரல் அந்த கச்சேரியை தடை செய்தது. "ப்ரீதி நில்லு."

நின்று திரும்பினாள். கூப்பிட்டவன் ஒரு கணம் தடுமாறினான். அவளின்



கண்களில் இருந்த ஏதோ ஒன்று அவனை அப்படிச் செய்திருக்க வேண்டும்.

"என்ன?" என்றாள்.

"நான் கேட்டதற்கு பதில் என்ன? சொல்ல மாட்டாயா?"

"ராஜா! நான் பதிலை என்றோ கூறிவிட்டேன். இதெல்லாம் நடக்காத ஒன்று. நீ நிறைய சினிமா பார்க்கிறாய் என நினைக்கிறேன்."

"ஏன் நடக்காது? உன் வீட்டில் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று பயப்படுகிறாயா?"

"இல்லை, என் வீட்டில் எனக்கு முழு சுதந்திரம் உண்டு.

"பின் ஏன் தயக்கம்?" என்று கேட்டான்.

"ராஜா, இந்த வயதில் உனக்கு எந்தப் பெண்ணை பார்த்தாலும் அப்படித்தான் தோன்றும். யாராவது உன்னை மதித்து ஒரு வார்த்தை பேசினாலே அது காதல்தான்னு தோணும்."

"இல்லை- அப்படி இல்லை எனக்கு புரிகிறது. இது காதல்தான்."

'கலகல'வென சங்கீத சலங்கையாய் சிரித்தாள் ப்ரீதி.

"போனவாரம் முதலாண்டு படிக்கும் காயத்ரிக்கு கொடுத்த பரிசு, என்ன சகோதர பாசத்திற்கு அடையாளமா?"

"அது... அது... நான் தவறு செய்து விட்டேன். உண்மையில் அதுதான் நீ சொல்லும் 'வயதுப் ப்ராபளம்!"

"இதே... இதே தான் நீ நாளையும் உணரப் போகிறாய். அவள் உன்னை 'இன்சல்ட்' செய்ததும், அவள் மீது இருந்த 'கவர்ச்சி மயக்கம்' குறைந்து விட்டது. இதே போல்தான் நானும். ஆனால், நான் உன்னை 'இன்சல்ட்' செய்யப் போவது இல்லை. ஏனெனில், ஒரு நல்ல நண்பனின் திறமைகள் என்னால் வீணடிக்கப்படுவதை நான் விரும்பவில்லை."

"ப்ரீதி. நீ ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறாய்? நீ இல்லை என்றால் என்னால் உயிர் வாழவே முடியாது."

"அப்படியா! எங்கே உன் உயிரை விடு பார்க்கலாம்," நிதானமாக, புன்னகை தவழக் கூறினாள் ப்ரீதி.

"ராஜா! பிராக்ட்டிக்கலா யோசித்து பார்! உன் பெற்றோர் உன்னைப் பற்றி எத்தனை கனவுகளை தங்கள் மனதில் தேக்கி வைத்திருப்பார்கள். உனக்கு உயிரையும், உணர்வையும் கொடுத்தவர்கள் அவர்கள். அவர்களுக்குப் பயன்படாமல் உன் உயிரை விடுகிறேன் என ஏன் உளறுகிறாய்?"

ஏதோ புரிந்தவனாய் ராஜா மலைத்து நிற்கிறான். அவன் குரல் எங்கோ ஒலிப்பதை போன்ற தொனியில் "இத்தனை தத்துவார்த்தமாக பேசுகிறாயே நீ மட்டும் 'இளமைத் துடிப்புடன்' இல்லையா? உனக்கு எப்பவுமே இப்படி தோன்றியது இல்லையா?"

இதமான புன்னகையுடன், "நான் வளர்ந்த சூழல் என்னை பக்குவப்படுத்தியுள்ளது. எங்கள் வீட்டில் என் நியாயமான வாதங்கள் மதிப்புப் பெறும். ஏன், நான் யாரையாவது காதலித்தால் கூட அதை ஏற்றுக் கொள்வார்கள். என் மீது நம்பிக்கை அதிகம்."- என்றாள் தொடர்ந்து,

"என் பேரன்ட்ஸ், என் சிந்தனையை வளர்த்தனர். ஆனால், நீ இளமை என்றால் 'லவ்' தான் என்னும் மயக்கத்தில் இருக்கிறாய். இன்று நான் இல்லையெனில் வேறு ஒரு சீமாவின் பின் போவாய். நம் உணர்வினை நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டாமா?

நான் கேட்கிறேன். உன் எண்ணத்தில் இளமை என்றாலே 'லவ்'தானா? இளமை என்பது நம் முதுமையில் எண்ணி இறுமாப்பெய்துவதாய் அமைய வேண்டும். நம்மை எதிர்கால சமூக தூண்கள் என்கிறார்களே. நாம் அதற்கு அருகதையாக வேண்டாமா?

"நம் திறமைகள் இந்நாட்டிற்கு, வீட்டிற்கு அவசியம். உன் சிந்தனையை வேறு ஒரு நல்ல காரியத்திற்கு செலவிட்டுப்பார். உலகம் போற்றும் நிலையை அடைவாய்.

ஒரு ஃப்ரெண்ட் என்ற முறையில்தான் உனக்கு இப்படி 'அட்வைஸ்' செய்கிறேன். தப்பாக நினைத்துக் கொள்ளாதே. புரிந்து கொள்வாய் என நினைக்கிறேன். பிறகு சந்திப்போம்!" என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

# மனசின்ணம்'

செழியன்

சீனுவை நினைத்து குழப்பத்திலும், கோபத்திலும் இருந்தாள் வனஜா.

வனஜாவும் சீனுவும் பள்ளியில் ஒரே வகுப்பில்- கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக ஒன்றாகப் படித்துவரும் பால்ய நண்பர்கள்.

பரீட்சையும் நெருங்கி வருகின்றது. எல்லோரும் துயரத்துடன் பிரியும் நேரம்.

'ஏன் இப்படி கடைசி நேரத்தில் போய் தன்னிடம் அநாகரீகமாகவும் பொறுக்கித்தனமாகவும் பழகுகிறான். இத்தனை வருடங்களாக சாப்பாடு முதல் கர்ச்சீப் வரை பரிமாறிக் கொண்டு, கருத்து வேறுபாடு என்பதே அகராதியில் இல்லாமல் ஸ்கூலே வியக்கும் வண்ணம் தன்னிடம் மென்மையாகப் பழகி வந்த சீனுவா இப்படி பொறுக்கித்தனமாக பேசுகிறான்?' என்று இவள் குழம்பிக் கொண்டிருந்தாள். சீனுவினுடைய நடத்தையின் வெளிப்பாட்டை மேலோட்டமாகப் பார்த்தால் மிகவும் வெறுப்பாக இருந்தது.

பெண்களைப் பற்றி தரக்குறைவாகப் பேசுவது, இவள் கூறும் கருத்துக்களை அடிக்கடி முடக்கி வெறுப்பேற்றுவது, காதலை அசிங்கமான வார்த்தைகளால் தூற்றுவது என்று பல அநாகரீக அணுகுமுறைகள்.

அவனுடைய இந்த அணுகுமுறைக்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள விரும்பாமலேயே சீனுவை வெறுக்க ஆரம்பித்துவிட்டாள் வனஜா.



அந்த வெறுப்பில் வளர்ந்த வைராக்கியத்தோடு பரீட்சைக்கு நன்றாகவே படிக்க ஆரம்பித்துவிட்டாள்; அவனை கண்டு கொள்ளவேயில்லை.

இப்போது பரீட்சையெல்லாம் முடிந்து எல்லோரும் பிரிந்துசெல்லும் கடைசி நாள்.

மாணவர்கள் கைகளில் இங்க்கோடு அலைந்து கொண்டிருந்தார்கள். சட்டைகளில் இங்க் மயம்... கண்களில் கண்ணீர் மயம்.

இவர்களிடமிருந்து தப்புவதற்காக வனஜா ஓரமாக ஒண்டியபடியே ஸ்கூலை விட்டு கடக்க முயல,

"வ.... வனஜா!" அழைக்கப்பட்டாள். திரும்பிப் பார்த்தவள், முகம் சுளித்தபடி தலையைத் திருப்பிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

"நில்லு வனஜா!" என்று அழைத்தபடியே வேகமாக ஓடி வந்து இடைமறித்தான் சீனு. வனஜா அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு கோபத்தோடு சீறினாள்.

"ச்சே! உன்னை நான் என்னமோன்னு நெனைச்சேன். கடைசியில இப்படி பொறுக்கித்தனமா நடந்துக்கறியே?"

"வனஜா.. அப்படி நான் நடந்துக்கிட்டது தப்புதான். ஆனா அதுக்கு ஒரு காரணம் இருக்கு. கேளேன். ப்ளீஸ்...!" பொடிவைத்து கெஞ்சிக் கேட்டான் சீனு.

"என்ன?" கேட்டாள்.

"சொல்றேன். இத்தனை வருஷங்களா உங்கிட்டே ஃப்ரெண்டா பழகிட்டு வந்த நான், இப்போ உன்னை விட்டுப் பிரியப் போறோமேங்கிற ஏக்கத்துல என்னையுமறியாம உன்னை நான் காதலிக்க ஆரம்பிச்சுட்டேன். என்னோட எண்ணம். உயிர்மூச்சு எல்லாமே அதிக மார்க்கு வாங்கி பெரிய படிப்பு படிக்கிறது தான். ஆனா எந்த நேரமும் உன் நினைவு. படிக்கவே முடியல என்னால. அதனாலதான், உங்கிட்டே அப்படி நடந்து என்மேல உனக்கு வெறுப்பை வரவழைச்சு வெறுக்க வைச்சேன். நானும் உன்மேல வெறுப்போட வைராக்கியமா படிக்க ஆரம்பிச்சு இப்போ அட்டகாசமா பரீட்சையும் எழுதி முடிச்சிட்டேன். என்ன செய்யறது... லட்சியத்தை அடையறதுக்காக இந்த மாதிரி ஒரு சில தவறுகளை தவிர்க்க முடியாது செய்ய வேண்டியதாப் போயிடுது. இனிமே நான் ஜெயிச்சுருவேன். அப்புறம்? விட்ட காதலை தொடரலாம்னு இருக்கேன். ஹூம்.. எதுக்கும் உன் விருப்பம் வேணுமே!" சொல்லி முடித்துவிட்டு சீனு அவளை ஏறிட,

சிறிது சிந்தித்த வனஜா, பிறகு சிரித்தபடியே தனது பேனாவிலிருந்து இங்க்கை அவன் சட்டையில் பீய்ச்சி அடித்தாள்.

"இது நட்பா.. காதலா..?" அவன் கேட்க,

வனஜா தலைகுனிந்து உடம்பை நெளித்து வெட்கப்பட்டாள். ●



படிப்பகம்

படிப்பகம்

# காதலுக்கு மரியாதை

ரசிகன் தருவது

கருவறையில் இருந்து
பூமிக்கு வந்ததும்
அழுவதற்கு
கற்றுத் தந்தது யார்?

சிரிப்பதற்கும்
சினப்பதற்கும்
சிணுங்கிச் சிவப்பதற்கும்
கற்றுத் தந்தது யார்?

கற்றுத் தராமலேயே
அழுதோம்!
கற்றுத் தராமலேயே
சிரித்தோம், சினந்தோம்!
சிலிர்த்தோம்!

கற்றுத் தராமல்
தானாய் வருவதில் ஒன்று
காதல்!

பசி
தானாக வரும்!
தாகம்
தானாக வரும்!
காதலும்
தானாக வரும்!
காமமும்
தானாக வரும்!
காதல் உற்பத்தியானதும்
உள்ளமெல்லாம் இனிக்கும்!

காமம் உற்பத்தியானதும்
உடலெல்லாம் தகிக்கும்!

காதலுக்கு
உரு இல்லை!
காதலுக்கு
நிறம் இல்லை!
காதலுக்கு
எடை இல்லை!

காற்றைப் போல
எங்கும் நிறைந்தது
காதல்!

காற்றைப் போலவே
தடுக்கவும் முடியாதது
காதல்!

ஒருவர் மனதை
ஒருவர் சுமப்பது
காதல்!

ஒருவர் உடலை
ஒருவர் சுமப்பது
காமம்!

காமத்தை
காதல் செதுக்கும்!
காதலால்
காமம் சிறக்கும்!

உள்ளத்தை
காதல் திருடும்!
உறக்கத்தை
காதல் திருடும்!

காதலுக்கு
இனம் இல்லை!
காதலுக்கு
மதம் இல்லை!
காதலுக்கு
ஜாதி இல்லை!

காதல் சுத்தமானது
காதல் கலப்படமில்லாதது!

அவள் காலில்
முள் தைத்தால்
இவனுக்கு வலிக்கும்!

இவன் காலில்
முள் தைத்தாள்
அவளுக்கு நோகும்!

காதலில்
ஊடல் என்பது
பொய் யுத்தம்!

காதலில்
கூடல் என்பது
மெய் யுத்தம்!

உலகத்தின்
முதல் மொழி காதல்!
உலகத்தின்
முதல் மனிதர்கள்
காதலர்கள்!

முதல் மனிதர்களின்
முதல் இன்பம்
காதல்!

முதல் மனிதர்களின்
முதற் தொழில்
காமம்!

முதல் இன்பமும்
முதற் தொழிலும்
போட்ட விதையில்
முளைத்ததுதான்
இன்றைய மனித குலம்!

நம்மைப் படைத்ததும்
காதல்!
நம்மை வளர்த்ததும்
காதல்!

காதல் இல்லாத
காவியம் உண்டா?
காதல் இல்லாத
சரித்திரம் உண்டா?

காதல் இல்லாத
மனிதர்கள்
சிலர் இருக்கலாம்!

அவர்கள்
சருகுகள் போன்றவர்கள்!

வாழ்க்கையில்
தீப்பிடித்தால்
எரிந்து போவார்கள்!
வாழ்க்கையில்
காற்றடித்தால்
தொலைந்து போவார்கள்!

காதலுக்காக வாழ்பவர்கள்



பச்சை
வாழை மட்டைகள்!
ஈரலிப்பானவர்கள்
காலத் தீயில்
எரிந்துபோக
மாட்டார்கள்!

இன்று
காதலை எதிர்ப்பவர்
பலர்
நேற்றுவரை
காதலை
ஆராதித்தவர்களே!

எதிரிகள் இல்லாத
காதல் அரிதானது!

அப்பா-அம்மா
அக்கா-அண்ணா!....
என்று தொடரும்
பட்டியல்

பிரியமான எதிரிகள்
அதிகம் உள்ள களம்
காதற் களம்தான்!

பிடிவாதமான
சிப்பாய்கள்
போன்ற
காதலர்கள்தான்
இறுதிவரை போராடி
வெற்றிக்கொடி
நாட்டுகிறார்கள்!

இலக்கிய நயம்

தோல்வி கண்ட
காதலர்கள் பற்றிச்
சொல்லிச் சொல்லியே
காதல் வரும் முன்பே
சாதல் வரும் பின்னே
என்று நம்பச் செய்கிறார்கள்!

அதனால் தான்
காதலர்கள் பலர்
மூளையிலேயே தங்களை
கருக்கிக் கொள்கிறார்கள்!

எழுதிய காவியங்களில்
நெஞ்சத்தை கிள்ளுவதற்காக
சொல்லப்பட்ட
சோகக் கதைகளையெல்லாம்
காதலின் தலைவிதி என்று
எடுத்துக் கொள்வானேன்?

காதலில்
தோல்வியும் உண்டு.
வெற்றியும் உண்டு.
எப்படியாகிலும்
என்றும் இறவாத வரம்
காதலுக்கு உண்டு!

காதலின்மீது
இரத்தம் தெறித்ததும் உண்டு
காதலின்மீது
பன்னீர் தெளித்தோரும்
உண்டு!

ஆனால்-ஒன்று
மலைச் சிகரங்களுக்கான
பாதை
மலர்களால் ஆனதல்ல!

எந்த உன்னத வெற்றியும்
போராடாமல், சேதமில்லாமல்
பெறப்பட்டதாக சரித்திரமில்லை!

கல்யாணம் வரைதான்
காதல் என்பது அறிவீனம்!
ஆயுள் உள்ளவரை
காதல் நிலைத்திருக்கும்!

அதுதான்
உண்மைக் காதல்!
அதற்கு உதாரணம்
இந்த ஜோடி.

"புதிதாகப் பார்ப்பதுபோல்
என்ன பார்வை?" என்றாள்.

"தினமும் புதிராக இருப்பதனால்
பூத்த பார்வை!" என்றான்.

"புதிர் என்ன?
ஒளிவுண்டோ மறைவுண்டோ
எம்மிடத்தில்?" என்றாள்.

"ஒளிவில்லை ஆனால்
ஒளியுண்டு!
மறைவில்லை ஆனால்
நிறைவுண்டு!" என்றான்.

"பொடி வைத்தது போதும்"
என்றாள் வெட்கமுடன்.

"உன் கண்கள்
பொறி வைக்கிறதே
என்னைத் தினம்
குறி வைக்கிறதே!"
என்றான்.

"என்ன இது
மணமாகி ஆயிற்று
பல வருடம்!
புது மணமகன்போல்
ஏன் புலம்பல்?"

"மணமாகி ஆண்டுகள் பல
உருண்டோடினாலும்,
என் உயிர் நிலைப்பது
உன்னுடன் கூடுவதால்தானே!
கூடும்போதெல்லாம்
என் ஆயுள் கூடுதடி!
உன் தோள் சேரும்போதெல்லாம்
உயிர் புதிதாகுதடி
அமிழ்தத்தால் செய்த தோளோ
உயிர் தளிர்க்க தூண்டுகோலோ?

எத்தனை புதிர் கண்ணே
எப்போது நான் அறிந்து முடிப்பது?
ஆயுள் போதாது கண்ணே
அடுத்த பிறப்பிலும் நீ வேண்டும்!"

"உறுதோறு உயிர்தளிர்பத்
—தீண்டலால் பேதைக்கு
அமிழ்தின் இயன்றன தோள்"
குறள்-1106, அதிகாரம்-111.

## சிந்தியா பதில்கள்

★ அநுருத்த ரத்வத்தையை இராஜினாமா செய்யுமாறு ஐ.தே.கட்சி கேட்டது நியாயமா?

ஏ.வினோதன், வவுனியா.

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட போது, அன்றைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரை ஜனாதிபதியாக்கி அழகு பார்த்த கட்சி ஐ.தே.கட்சி. எனவே இன்றைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மட்டும், 'தார்மீகப் பொறுப்பு ஏற்கவேண்டும்!' என்று கோர அக்கட்சிக்கு உரிமையில்லை!

★ சிந்தியா! உங்களைக் கவர்ந்த குட்டிக்கதை ஒன்று?

சி. சாந்தி, கொழும்பு-09.

ஜூலியஸ் சீசருக்கு முப்பதாவது பிறந்த நாள். ரோம் நகரமே அதனை ஆர்ப்பாட்டமாக கொண்டாடிக் கொண்டிருந்தது.

ஜூலியஸ் சீசர் மட்டும் தனிமையில் இருந்து அழுது கொண்டிருந்தார்.

நெருக்கமான நண்பர் ஒருத்தர், "என்ன விஷயம்? ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு ஜூலியஸ் சீசர் சொன்ன பதில்:

"இதே முப்பதாவது வயதில் அலெக்சாண்டர் உலகையே வென்றார். நான் அந்தச் சாதனையை முறியடிக்கவில்லையே!"

★ ஆத்திரம் புத்திக்கு எதிரிதானே?

ஆர். கேசவராஜன், கண்டி.

உண்மைதான்!

ஒரு பெரிய நிறுவனம் ஒன்றின் உரிமையாளருக்கு சிகரெட் பிடிப்பவர்களைக் கண்டால் பிடிக்காது. "என் நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் யாராவது சிகரெட் பிடித்தால் வேலையில் இருந்து நீக்கப்படுவர்!" என்று கூறியிருந்தார்.

ஒருமுறை உரிமையாளர் அலுவலகத்தில் நுழைந்தபோது, ஒருவர் புகைப்பிடிப்பதைக் கண்டார். நேராக அவனிடம் சென்று: "உனக்கு வாரத்தில் எவ்வளவு சம்பளம்?" என்று கேட்டார்.

அவன்: "ஐநூறு ரூபா!" என்று கூறினான்.

உடனே உரிமையாளர் ஆயிரம் ரூபாயை அவன் கையில் கொடுத்து, "வெளியே போ!" என்று கூறினார்.

அவன் பணத்தை வாங்கிக்கொண்டு நடையைக் கட்டினான். அவன் போன பின்னர்தான் தெரிந்தது- அவன் அந்த அலுவலகத்தில் வேலை செய்பவன் அல்ல!

★ வாய்ச் சவடால் என்றால் என்ன?

கே. இந்திராணி, மாத்தளை.

இரண்டு சிநேகிதர்கள் சந்தித்தனர். ஒருத்தன் சொன்னான்: "என்னிடம் இரண்டு இலட்சம் ரூபாய் இருந்தால் அதில் பாதியை உன்னிடம் கொடுத்துவிடுவேன்!" என்றான்.

"உன்னிடம் இரண்டு கார்கள் இருந்தால் என்ன செய்வாய்?"

"அதில் ஒன்றை உன்னிடம் தந்து விடுவேன்."

"உன்னிடம் இரண்டு வீடுகள் இருந்தால் என்ன செய்வாய்?"

"அதில் ஒன்றை உன்னிடம் தருவேன்."

"உன்னிடம் இரண்டு சைக்கிள்கள் இருந்தால் ஒன்றை என்னிடம் தருவாயா?" என்று கேட்டான்.

"அதுமட்டும் முடியாது!" என்றான் நண்பன்.

"ஏன் பணம், கார், வீடு எல்லாம் தருகிறேன் என்றாய், சைக்கிளை மட்டும் தர மாட்டாயா?" என்றான் நண்பர்.

அதற்கு நண்பன் சொன்னான்: "இரண்டு சைக்கிள்கள் உண்மையாகவே என்னிடம் இருக்கிறதே!"

★ வயதானால் பக்குவம் அதிகமாகும் என்பது உண்மையா?

என். தவக்குமார், மட்டக்களப்பு.

கவியரசு கண்ணதாசன் கூறிய கதை ஒன்று:

ஒரு தாசியிடம் ஓர் இளைஞன், நடுத்தர வயதுக்காரர், முதியவர் ஆகிய மூன்று பேர் தொடர்பு வைத்திருந்தனர்.

மூவரையும் பற்றி அவளிடம் அபிப்பிராயம் கேட்டபோது, முதியவரையே அவள் பாராட்டினாள்.

ஏனென்று கேட்டதற்கு அவள் சொன்ன பதில்:

"காதல் உணர்ச்சியைவிட சேவா உணர்ச்சியே தெய்வீகமானது!"



★ ஐ.தே.கட்சியின் மாற்று யோசனைகளை தமிழ், முஸ்லிம் கட்சிகள் சில நிராகரித்துள்ளனவே?

கி. ராமநாதன், மட்டக்களப்பு.

இது என்ன பிரமாதம்! பொதுஜன முன்னணி முன்வைத்த பொதியைக்கூட பந்தாடியிருப்பார்கள்; ஆனால் ஆளும் கட்சியாக இருப்பதால் ஒரு மரியாதை, பணிவு கருதி விட்டுவைத்திருக்கிறார்கள். எக்காலத்திலும் பதவியில் உள்ள கட்சி சார்பாக எதிர்க்கட்சியுடன் மன்றாடுவதிலும், மல்லுக்கட்டுவதிலும் தமிழ், முஸ்லிம் கட்சிகள் சளைப்பது கிடையாது!

★ யாழ் மாநகர சபையில் ஏனைய கட்சிகள் கூட்டணியை ஆதரிக்கும்போலத் தெரிகிறதே?

கே. வெற்றிவேல், யாழ்ப்பாணம்.

தீண்டத்தகாத கட்சிகளின் ஆதரவில் பதவியைத் தீண்ட ஆசை! ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் மாநகர சபையைக் கவிழ்த்து மறுபடி தேர்தலை சந்திக்கத் தயக்கம். பிறகென்ன, ஒற்றுமைப் பல்லவிதான்!

★ நடிகர் ரஜினிகாந்த்தை ஜெயலலிதா மீண்டும் பகைத்தது எதற்காக?

எச். நிஷாம், கல்முனை.

'வெற்றி உறுதி' என்ற எண்ணத்தில் கொட்டமடிக்கிறார். 'ரஜினியை எதிர்த்தும் வெல்ல முடியும்!' என்று நிரூபிக்க வேண்டும் என்றும் தலைக்கனம் தூண்டிக்கொண்டிருக்கிறது!

★ யாழ் குடாநாட்டு தேர்தல் ஒரு முன்னுதாரணம் என்கிறாரே சித்தார்த்தன்?

பி. மாதவன், திருமலை.

முன்னுதாரணமான தேர்தலைத்தான் முன்னர் இவர்கள் வெறுத்தார்களா? முதலில் அதற்காக மன்னிப்புக் கேட்டுவிட்டு பின்னர் மனதாரப் பாராட்டலாமே!

★ சிந்தியா! யாழ் தேர்தல் ஆயுதக் கலாசாரத்திற்கு எதிரான தேர்தல் என ஈ.பி.ஆர்.எல்.எஃப். இங்கு அறிக்கை விடுத்துள்ளது; என்ன கூறுகிறீர்?

மா. நந்தகுமார், கொட்டடி.

நான் அறிக்கையைப் பார்க்கவில்லை. அவ்வாறு கூறியிருந்தால், அவலை நினைத்து உரலை இடிக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். 'முன்னாள் போராளிகள்' என்ற முத்திரையை பாவித்துத்தான் இத்தரைமீதில் இன்னமும் நிலைத்திருக்கிறார்கள். அதனை மறக்கலாமா? விழுந்த வாக்குகளும் அந்த அடிப்படையில் தான்!

★ சிம்ரானின் புதிய காதலர் யார்?

எம்.எஸ். சுகிர்தன், பசறை.

விரும்பினால் நீங்களும்; கனவில் மட்டும்!

★ தங்கள் தோல்விக்கு அடுத்தவர்களைக் குறை சொல்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

கே. மகிந்தராஜா, திருமலை.

ஒரு மனிதன் பல தடவை விழலாம். ஆனாலும் அவன் தோற்றான் என்று சொல்ல முடியாது. ஆனால், "என்னை யாரோ தள்ளி விடுகிறார்கள்!" என்று எப்போது அவன் சொல்லத் தொடங்குகிறானோ அந்தக் கணத்திலே அவன் தோற்றான்.

ஸ்போர்ட்ஸ்

## மஞ்ச்ரேக்கர் ஒதுங்குகிறார்



பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் சஞ்சய் மஞ்ச்ரேக்கர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக கடந்தவாரம் மும்பாயில் அறிவித்துள்ளார்.

மும்பாயைச் சேர்ந்த முன்னாள் பிரபல கிரிக்கெட் வீரர் விஜய் மஞ்ச்ரேக்கரின் மகன்தான். சஞ்சய் மஞ்ச்ரேக்கர்.

32 வயதான மஞ்ச்ரேக்கர் 1987ம் ஆண்டு டெல்லியில் விவியன் றிச்சர்ட்ஸ் தலைமையிலான மேற்கிந்தியத் தீவு அணிக்கெதிரான போட்டியில் முதன் முதலாக அறிமுகமானவர். சிறந்த நடுத்தர வரிசை ஆட்டக்காரரான இவர் 1996ம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிராக விளையாடிய போட்டிக்குப் பின்னர் இந்திய அணியில் இடம்பெறவில்லை.

37 டெஸ்ட் போட்டிகளில் மஞ்ச்ரேக்கர் விளையாடி 2,043 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவற்றில் 4 சதங்களும் 9 அரைச்சதங்களும் அடங்கும். இந்த நான்கு சதங்களும் வெளிநாடுகளில் விளையாடிய போட்டிகளில் பெறப்பட்டவை. 1989ல் பாகிஸ்தான் அணிக்கெதிராக லாகூரில் பெற்ற 218 ஓட்டங்களே மஞ்ச்ரேக்கரின் அதிகபட்ச ஸ்கோர் ஆகும்.

74 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இவர் பங்கேற்று 1994 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவற்றில் ஒரு சதமும், 18 அரைச் சதங்களும் அடங்கும்.

மும்பாயில் நிருபர்களிடம் தனது ஓய்வு பற்றி அறிவித்த மஞ்ச்ரேக்கர் மேலும் கூறும்போது:

"இம்மாத இறுதியில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடவுள்ள மும்பாய் அணியில் நான் இடம் பெறுவேன். இதுதான் நான் விளையாடும் கடைசிப்போட்டி. இனிமேல் நேர்முக வர்ணனை செய்வதில் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளேன்." என்று கூறினார்.

## "நான் நிரபராதி"

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் வாசிம் அக்ரம் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் உதவியை நாடவுள்ளார்.

ஆட்டத்தின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் விதமாக இலஞ்சம் பெற்று விளையாடியதாகவும், 'பெட்டிங்'கில் ஈடுபட்டதாகவும் அக்ரமின் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இவரை அணியிலிருந்து காலவரையறையின்றி நீக்கி வைத்தது.

தான் நிரபராதி. தனக்கு நியாயம் கிடைக்கவும், மீண்டும் பாகிஸ்தான் அணியில் இடம்பெறவும் பிரதமர் ஷெரீப்பின் உதவியை நாடப்போவதாகவும் அக்ரம் தெரிவித்துள்ளார்.

## றிச்சர்ட்சன் விலகல்



தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் டேவ் றிச்சர்ட்சன், கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அண்மையில் அறிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க பத்திரிகையாளர்கள் சங்கத்தில் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் றிச்சர்ட்சன் இந்த முடிவை வெளியிட்டுள்ளார்.

38 வயதாகும் றிச்சர்ட்சன் இதுவரை 42 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். 150 கட்ச்களை பிடித்திருக்கிறார். 2 ஸ்டம்ப் அவுட்களையும் செய்திருக்கிறார். இது ஒரு தென்னாபிரிக்கச் சாதனையாகும்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தானில், தென்னாபிரிக்கா சுற்றுப்பயணம் செய்திருந்தபோது 2வது டெஸ்ட் போட்டியில் காயம் காரணமாக றிச்சர்ட்சன் விளையாடவில்லை. தென்னாபிரிக்க அணி மீண்டும் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாட அங்கீகாரம் கிடைத்தபின் இந்த டெஸ்ட் போட்டியை மட்டுமே அவர் தவறவிட்டார்.

டெஸ்ட் போட்டிகளில் றிச்சர்ட்சன் 1,359 ஓட்டங்களைக் குவித்துள்ளார். அதில் ஒரு சதமும், 8 அரைச்சதங்களும் அடங்கும். சராசரி 24.27.

## இவர்தான் அவர்



தபு



www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 121

## மகுடம் புனைவதற்கான முன்னேற்பாடுகள்

இராமபிரானை, அயோத்தி மாநகரின் தென்மேற்குத் திசையிலிருந்த நந்திக் கிராமத்திலிருந்து நகருக்குள் அழைத்துச் செல்வதற்காக, பசும் பொன்னால் உருவாக்கப்பட்டு பலவித இரத்தினங்களால் அழகு படுத்தப்பட்ட இரதம் வந்து காத்து நின்றது. இரதத்தை இழுத்துச் செல்வதற்காக நான்கு வெள்ளைக் குதிரைகள் இரதத்தில் பூட்டப்பட்டிருந்தன.

இரதத்தில் ஏறுவதற்கு முன்னர் கோசல நாட்டை வளப்படுத்தும், அயோத்திமா நகரை அரவணைத்தபடி ஓடும் சரயு நதியில் இராமபிரானும் தம்பிமாரும் சீதாப்பிராட்டியாரும் நீராடினர். பதினான்கு ஆண்டுகள் சீவப்படாமலிருந்த தலை முடிகளை இராமபிரான், இலக்குவன், பரதன், சத்துருக்கன் ஆகியோர் மழித்துக் கொண்டனர். அரச குமாரர்களுக்கும் சீதாப்பிராட்டியாருக்கும் வேண்டிய ஆடை அணிகள் அரண்மனையிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்தன. அவற்றை அனைவரும் பூண்டனர். இராமபிரான் பதினான்கு வருடங்களுக்கு முன்னர் இளவரசுப் பட்டம் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமானபோது இருந்த தோற்றத்தை மூன்று தாய்மாரும் வசிட்டமாமுனிவரும் அயோத்திமா நகரமக்களும் கண்டு களித்திருந்தனர். கைகேயியிடம் சென்ற போதும்கூட இராமபிரான் அந்த அலங்காரத்துடன்தான் சென்றிருந்தார். ஆனால் அன்று அவர் இருந்த தோற்றத்துக்கும், இன்று சகல அலங்கார பூஜிதராகக் காட்சியளித்த இராமபிரானுக்குமிடையில் ஒரு பெரும் மாறுதலை இன்று பார்த்தவர்கள் கண்டுகொண்டனர்.

அன்று சற்று இளையவராகத் தோன்றிய அண்ணலின் முகத்தில் குழந்தைத் தன்மை தெரிந்தது. இன்று அதே முகத்தில் முதிர்ச்சியின் அறிகுறிகளுடன் தனியானதொரு பிரகாசமான ஒளி துலங்கியது. அறிவு, ஆற்றல், அன்புடைமை, அகத் தெளிவு ஆகிய அனைத்தும் அவர் முகத்தில் அழகு ரேகைகளை பன்மடங்கு பதித்துவிட்டிருந்தன.


சீதாப்பிராட்டியார், இளைய பெருமாள் இலக்குவன், தனது அண்ணனைப் போலவே தவ வாழ்க்கை மேற்கொண்டிருந்த பரதன் ஆகியோரிடமும் இராமபிரானின் தோற்றத்தில் காணப்பட்டதைப் போன்ற ஒளியைக் காணக்கூடியதாக இருந்தது.

### ஆரத்தி எடுத்தனர்

ஆடை அணிகளை அணிந்துகொண்டதும் முதன் மந்திரியான சுமந்திரன் அங்கு வந்து அனைவரையும், தேர் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றார். அவ்விடத்திலேயே வசிட்டமாமுனிவரும் நின்றிருந்தார். தாய்மார்கள் மூவரும் அங்கேயே நின்றிருந்தனர். எல்லாரும் ஒருவர் பின் ஒருவராக மாமுனிவரின் தாள் தொட்டு வணங்கி எழுந்தனர். அரண்மனை மங்கையர் பலர் ஒன்று சேர்ந்து வந்து அரச குமாரர்களுக்கும் சீதாப்பிராட்டியாருக்கும் ஆரத்தி எடுத்து, திருஷ்டி கழித்தனர்.

இராமபிரானும் பிராட்டியாரும் இரதத்தில் ஏறியதும் சங்குகள் முழங்கின. தாரை, தப்பட்டை, சமனிக்கை, முழவு போன்ற வாத்தியங்களின் ஒலி எழுந்து வானில் மோதி எதிரொலித்தது.

இரதம் புறப்படுவதற்கு முன்னர் இராமபிரான் தனது தம்பிமாரான பரதன், சத்துருக்கன் மற்றும் அமைச்சர் சுமந்திரன் ஆகியோரை அழைத்து, தன்னுடன் வந்திருந்த சுக்கிரீவன், விபீடணர் ஆகியோருக்கும் அனுமன் முதலான ஏனையோருக்கும் இரதங்களை ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்



### இராஜகுமாரன்

ளனவா, என்று வினவினார். அவர்களுக்கும் தனித்தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தம்பிமாரும் அமைச்சரும் தெரிவித்தனர். அவர்களும் பின் சென்று அவரவருக்குரிய இரதங்களில் ஏறிக் கொண்டனர். ஆனால் ஆஞ்சநேயர் மட்டும் எத்தேரிலும் ஏற மறுத்து இராமபிரான் ஏறிய தேரின் வலது புறத்தில் கூப்பிய கைகளுடன் நடக்கலானார்.

மக்கள் வாழ்த்தொலிகளும் வாத்தியக் கருவிகளும் ஒன்றுடன் ஒன்று கலந்து அந்தப் பிரதேசத்தில் பெருமகிழ்ச்சிக் கடலைப் பெருகவைத்தது.

### அரண்மனை வரவேற்பு

மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் ஆகியன பல்லாயிரக் கணக்கில் எங்கும் காணப்பட்டன. விருந்தாளிகளாக இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கும் கிட்கிந்தையைச் சேர்ந்தவர்களுக்கும்- பரதனும் சத்துருக்கனும் அயோத்தி மாநகரின் அழகிய மாளிகைகளைக் காட்டி விளக்கம் அளித்தனர்.

இராமபிரானும் சீதாப்பிராட்டியாரும் அவர்களுடைய அரண்மனையைச் சென்றடைந்ததும், அங்கும் அவர்களுக்கு ஆரத்தி எடுக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டது. ஏனையோரும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட மாளிகைகளைச் சென்றடைந்தனர். ஆஞ்சநேயர் எங்குமே செல்லாமல், இராமபிரானின் அரண்மனைக்கு முன்புறமாக நின்று கொண்டார்.

அன்றைய விருந்தின்போது, இராமபிரான், அவர்தம் சகோதரர்கள், விபீடணர், சுக்கிரீவன், அங்கதன், ஜாம்பவன் முதலானோரும் வானரத் தளபதிகள் மற்றும் அரக்கப் பிரமுகர்கள் அனைவரும் ஒரே பந்தியில் அமர்ந்து உணவருந்தினர். விருந்து வைபவங்கள் முடிவுற்றதும் இராமபிரானை அணுகிய சுக்கிரீவன், பட்டாபிஷேகத்துக்கான நாளை உடனடியாகத் தேர்ந்தெடுத்து அக் கைங்கர்யத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும், என்று கேட்டுக்கொண்டார். இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இராமபிரான் கண்களில் வசிட்டமாமுனிவர் தன்னை நாடி வருவது தெரிந்தது. எழுந்து சென்று அவருடைய தாள் தொட்டு வணங்கினார்.

"தாங்கள் தகவல் அனுப்பியிருந்தால் நானே தங்களிடம் ஓடி வந்திருப்பேனே!" என்று இராமபிரான் கூற முனிவர், "நாம் இங்கு வருவதற்கு அவசரமும் அவசியமும் ஏற்பட்டமையினால் இங்கு வந்தோம்!" என்றார். முனிவருக்கு ஆசனத்தை அளித்து அவர் அமர்ந்தபின் அவரருகே வாய்பொத்தி நின்ற இராமபிரான், முனிவர் வந்த காரணத்தை அறியக் காத்திருந்தார்.

"இராமா! தந்தையின் சத்தியத்தைக் காப்பதற்காக பதினான்கு ஆண்டுகள் வனவாசம் முடிந்து வந்து சேர்ந்து விட்டாய். இத்தனை காலமும் உன் தம்பி, உத்தமன், பரதன் உமது பாதுகைகளை சிம்மாசனத்தில் வைத்து அரச பரிபாலனம் செய்தான். அப்பாதுகைகள் இப்போது அரியணையில் இல்லை. உமது பாதங்களில் இடம் மாறிவிட்டது. அரியணை காலியாகிவிட்டது. அயோத்தி மாநகரின் அரியணை காலியாக இருப்பது முறையல்லவே! ஆகவே, அரியணை அமர்ந்து, முடி புனைந்து ஆட்சி செய்ய உடன் நீர் தயாராக வேண்டும்!"

முனிசிரேட்டரான வசிட்டர் இவ்வாறு கூறியதும், இராமபிரான் சுக்கிரீவன் பக்கம் திரும்பிப் புன்னகை புரிந்தார். முனிவர் பால் திரும்பி, "மாமுனிவரே! கிட்கிந்தைக் கதிபன் என் அன்புக்குரியவனான சுக்கிரீவன் இதே கருத்தைத்தான் இப்போது பகிர்ந்து கொண்டார். தாங்கள் எத்தகைய முடிவினை எடுத்தாலும் நான் அம்முடிவினை ஏற்கச் சித்தமாய் இருக்கிறேன்!" என்று பணிவுடன் கூறினார்.

### நாள் குறிக்கப்பட்டது

மாமுனிவருடன் வந்திருந்த அயோத்தி அரண்மனை சோதிடர்களும் இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். அவர்களின் சார்பில், வசிட்ட மாமுனிவரே பேசினார். அடுத்த நாள் சூரியோதயத்தின்போது சிம்மாசனம் ஏறி, இராமபிரான் சிரசில் முடி சூடப்படுவதே சிறந்ததாகும் என்று கூறி, அதற்கான காரணங்களையும் விளக்கினார். சீதாப்பிராட்டியாரும் இலக்குமணன், பரதன், சத்துருக்கன் ஆகியோரும் அப்போது அங்கு வந்து சேர்ந்தனர். அடுத்த நாளே முடிசூட உகந்த நாள் என்று வசிட்டமாமுனிவர் அறிவித்ததும் அனைவரும் மகிழ்ந்தனர்.

அன்று பொழுது மறைந்து, அடுத்த நாள் பொழுது புலர்வதற்கு ஆக இன்னும் சில நாளிகைகளே இருந்தமையினால் வாயுவேகம்-மனோவேகத்தில் சகல காரியங்களும் நடைபெற்றாக வேண்டும் என்பதனால், உடனடியாகவே பணிகளை ஏற்று நிறைவேற்றும் தகுதியுடையோரை அழைத்து வர ஆட்கள் அனுப்பப்பட்டார்கள்.

அபிஷேகம் நடைபெற வேண்டும்: அதற்குப் புண்ணிய நதிகளிலிருந்து தீர்த்தங்களும், ஏழு கடல்களிலிருந்து தீர்த்தங்களும் கொண்டுவரப்படவேண்டும். ஆகவே இதற்குரியவர் ஆஞ்சநேயர்தான் என்று அறிந்துகொண்ட சுக்கிரீவன், ஆஞ்சநேயரைத் திரும்பிப் பார்த்தார். குறிப்பால் கருத்தைக் கிரகித்துக்கொண்ட ஆஞ்சநேயர், சற்றும் தாமதியாமல் வானில் தாவினார். அரை நாளிகைக்குள் சகல புண்ணிய தீர்த்தங்களையும் கொண்டு வந்து சேர்த்துவிட்டார்.

அங்கதனும் ஜாம்பவனும் மகுடாபிஷேகத்துக்கான அழைப்போலைகளை எடுத்துக் கொண்டு, உலகனைத்துமுள்ள அரசர்களுக்கு அறிவிக்கக் கிளம்பினார்கள். அயோத்தியை நோக்கி இராமபிரான் போய்க் கொண்டிருக்கிறார் என்ற செய்தி ஏற்கனவே பல மன்னர்களுக்கும் தெரிந்து விட்டமையினால், அவர்களில் பலர், இராமபிரானைக் கண்டு பாராட்டுவதற்காகவே புறப்பட்டு வரத் தொடங்கியிருந்தனர்.

மகுடாபிஷேகத்துக்குரிய மண்டபங்களும் மிக அழகாக அமைக்கப்பட்டுவிட்டன. அயோத்தி மாநகர், இராமபிரானை வரவேற்பதற்காக ஏற்கனவே அலங்கரிக்கப்பட்டிருந்தது. உடனடியாகவே மகுடாபிஷேகமும் இடம்பெறப்போவது தெரிந்ததும் நகரமாந்தர் நகரை மென்மேலும் அழகு படுத்தினர். அயலூர்களிலிருந்து திரண்டு வரப்போகும் விருந்தினர்களை உபசரிக்கவும் ஆயத்தங்களைத் தொடங்கிவிட்டனர்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 119**

**சரியானவிடை:- வஜ்ராயுதம்**

1. ஆர். ஸ்ரீராமச்சந்திரன், 116/2, கம்பளை வீதி, நாவலப்பிட்டி.
2. க. சண்முகப்பிரியா, 82, தோணிக்கல் வீதி, கற்குழி, வவுனியா.
3. எஸ். சாந்தகுமாரி, வேறலபத்தன தோட்டம், மடுல்சீமை.
4. ஏ.சீ.எம். முஸம்மில், [illegible], ஸதாம் வீதி, வட்டதெனிய, கம்பளை.
5. ஏ. பரிசுத்தமகாராஜா, டன்சினேன் தோட்டம், தொழிற்சாலை பிரிவு, பூண்டுலோயா.

**போட்டி இல. 121** கேள்வி:- **கோசல நாட்டை வளப்படுத்தும் நதி எது?**

பெப்ரவரி 21 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி – இல.121, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# இலண்டனில் இருந்து இலங்கைக்கு

**இளவரசர் சாள்ஸ் இலங்கை வந்திருந்தார் அல்லவா. அவருடன் கமீலா இலண்டனில் இருந்து ரெலிஃபோனில் பேசுவதாக கற்பனை செய்கிறார் காதிலை பூ கந்தசாமி.**

**கமீலா:** ஹலோ டியர்....! சிறீலங்கா எப்படி இருக்கிறது?

**இளவரசர் சாள்ஸ்:** யாருக்குத் தெரியும். பிரதம விருந்தினரா, பிரதம கைதியா? என்று எனக்கே சந்தேகம் வந்துவிட்டது. அசையவே விடுகிறார்கள் இல்லை. மேலே வானம், கீழே பூமி. அது மட்டும்தான் தெரிகிறது.

**கமீலா:** ஐயோ... எனக்குப் பயமாக இருக்கிறது.

**இ.சா:** பயப்படாதே, அவள் ஆவியாக வரமாட்டாள். நிம்மதியாகத் தூங்கு. இடைக்கிடையே விழிப்பு வந்தால் என்னை நினைத்துக்கொள்.

**கமீலா:** நீங்கள் என்ன பேசுகிறீர்கள்.

**இ.சா:** இங்கிலீஸ்! ச்சா... எங்கள் மொழிக்கு இங்கே என்ன மரியாதை தெரியுமா? கோட்டும் சூட்டுமாக ஒரு கழுதை வந்து நின்று சல் புல் என்று பேசினால்கூட இங்கே பேய் மரியாதை கிடைக்கும் தெரியுமா?

**கமீலா:** அது சரிதான், இல்லாவிட்டால் உங்களை ஏன் அழைக்கப்போகிறார்கள்?

**இ.சா:** ஏய்... ஸில்லியாகப் பேசாதே. நாங்கள் ஒரு காலத்தில் இங்குள்ளவர்களின் முதுகில் சவாரி செய்தவர்கள்.

**கமீலா:** உங்களுக்கு குதிரைச் சவாரிதானே பிடிக்கும்?

**இ.சா:** சும்மா லொள்ளுப் பண்ணாதே, அந்தக் குதிரைக்கு ஒழுங்காகக் கொள்ளுப் போட்டால்கூட இடைக்கிடையே கவிழ்த்து விடுகிறதே தெரியாதா? இங்குள்ளவர்கள் அப்படியில்லையாம், ரொம்ப பயபக்தியோடு எங்கள் மூதாதையர்களை முதுகில் சுமந்து திரிந்தார்களாம். அந்தப் பயபக்தி இன்னமும் போகவில்லை. தம்மை அறியாமலேயே தலைகுனிந்து வணக்கம் தெரிவிக்கிறார்கள்.

**கமீலா:** அப்படியானால் நானும் அங்கு வரவா?

**இ.சா:** நானே எப்பேரதடா திரும்பி வருவேன் என்றிருக்கிறேன். இதில் நீ வேறா? இன்னொரு விஷயமும் கேள்விப்பட்டேன்?

**கமீலா:** என்ன அது?

**இ.சா:** தற்கொலைப் போராளி ஒருவரது சட்டைப் பையில் டயானாவின் படம் இருந்ததை கண்டார்களாம். அதனால் டயானாவில் அவர்களுக்கு அபிமானம் இருந்திருக்கலாமோ என்று சந்தேகிக்கிறார்கள்.

**கமீலா:** இங்கே பாருங்கள் சாள்ஸ். உங்களுக்கு விபரம் போதாது. புலிகளுக்கு எதிராக உங்களை தூண்டிவிடப் பார்க்கிறார்கள். ஜாக்கிரதை. ஏற்கனவே புகைப்படப் பிடிப்பாளர்களின் துரத்தல் போதாதா? புலிகளை ஏன் பகைக்க வேண்டும்? வாயை மூடிக்கொண்டு இருங்கள்.

**இ.சா:** ஆமாம் அதுதான் சரி. நானும் முதலில் சும்மா விளையாட்டாகத்தான் நினைத்தேன். வந்து பார்த்தால்தான் தெரிகிறது, பொல்லாத பிரச்சனை என்றுதான் நினைக்கிறேன். நாடே ஃபயராகிக் கொண்டிருக்கிறது. எங்கேயும் 'மூட் சரியில்லை' வெரி வெரி பேட்.

**கமீலா:** எனக்கொரு சந்தேகம்?

**இ.சா:** வழக்கமாக எனக்குத்தானே அது வரும்? சரி சரி கேள்.

**கமீலா:** சிறீலங்காவின் நிறமே இன்னமும் சரியாகத் தெரியவில்லை என்கிறீர்கள். இறங்கியும் இறங்காத கையோடு சிறீலங்காப் பெண்களைப்பற்றி ஏதோ கொமண்ட் அடித்தீர்களாமே!

**இ.சா:** ஹிஹிஹி... அதையுமா பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள்?

**கமீலா:** பத்திரிகைகளில் எதை வேண்டுமானாலும் போடுவார்கள் என்பது இன்னுமா தெரியாது?

**இ.சா:** ஆமாம். அதுவும் சரிதான். என்ன போட்டிருக்கிறார்கள்?

**கமீலா:** அதை என் வாயால் சொல்ல வேண்டுமாக்கும்?! சிறீலங்காப் பெண்களை ரொம்ப பிடித்தமானவர்கள் என்றீர்களாமே? ரொம்பத்தான் வழியாதீர்கள். துடைத்துக் கொள்ளுங்கள்.

**இ.சா:** அடிக்கடி துடைத்துக்கொண்டுதான் இருக்கிறேன், வெய்யில் வாட்டி எடுக்கிறது. வெரி ஹீட். வெரி வெரி ஹீட்.

**கமீலா:** அதனால்தான் அந்த கொமாண்ட்றா?

**இ.சா:** திருப்பித் திருப்பி அதையே ஏன் சொல்லித் தொலைக்கிறாய்? வேறு ஏதாவது பேசு கண்ணே பேசு.

**கமீலா:** கொண்டாட்டத்தில் அமர்ந்திருந்ததை ரி.வி.யில் பார்த்தேன்.

**இ.சா:** எப்படி... ஜம்மென்று காட்சியளித்தேனா?

**கமீலா:** ம்ஹூம் சகிக்கவில்லை. கறுப்புக் கண்ணாடியும் ஆளுமாக, கொடுத்த சுதந்திரத்தை பறித்துக் கொண்டுவர போனதுமாதிரி அமர்ந்திருந்தீர்கள்.

**இ.சா:** காலை வாருகிறாயே கண்ணே. ஒரு ஜலாவது வீச. ஹிட்டாக இருக்கிறது.



**கமீலா:** பக்கத்தில் இருந்த பிரதமர்கூட உங்களை ஏன் என்று கேட்கவில்லையே. ஏறெடுத்தும் பார்க்கவில்லையே?

**இ.சா:** கண்ணே, அதொன்றுமில்லை, யாராவது எதையாவது கையில் எடுத்துக் கொண்டு வருகிறார்களா என்றுதான் எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதுதான் என்னை ஏறெடுத்துப் பார்க்க நேரம் இல்லாமல் போயிருக்கும். ஹலோ மிஸ்ஸிஸ், டோண்ட் மிஸ் அண்டர்ஸ்டாண்ட்.

**கமீலா:** நீங்கள் விசேட விருந்தாளியா, வேண்டாத விருந்தாளியா என்று எனக்கு விளங்கவில்லைப் போங்கள்.

**இ.சா:** இறுதியாகச் சிரித்துப் பேசினார்களே?

**கமீலா:** சும்மா போங்கள். ஒப்புக்காகச் சிரித்தார்கள். ஒப்பனைப் புன்னகை.

**இ.சா:** அது என்ன கண்ணே, ஒப்பனைப் புன்னகை?

**கமீலா:** டயானாவும் நானும் சந்தித்த போதெல்லாம் புன்னகைத்தோம் அல்லவா. அதுதான் ஒப்பனைப் புன்னகை.

**இ.சா:** சரி கண்ணே, அதிக நேரம் அளவளாவ அனுமதி இல்லை.

**கமீலா:** என்ன இது அக்கிரமம், போர் செய்யப் பணமிருக்கிறது, ஃபோன் பில் கட்ட மட்டும் பணம் இல்லையாமோ?

**இ.சா:** உன் மிஸ் அண்டர்ஸ்டாண்ட்டுக்கு அளவே இல்லையா கண்ணே? இது செக்கண்ட் ரைம்! ஃபோன் பில் கட்டப் பணம் இல்லாவிட்டால் நான் கட்டமாட்டேனா? இது பாதுகாப்புப் பிரச்சனை.

**கமீலா:** என்ன கண்டறியாத பாதுகாப்பு பிரச்சனை?

**இ.சா:** என் நகர்வுகள் யாவும் இரகசியமாக இருக்கவேண்டுமாம். நிகழ்ச்சிகள் யாவும் யாருக்கும் தெரியக்கூடாதாம்.

**கமீலா:** நீங்கள் அங்கே கெஸ்ட்டாகப் போனீர்களா? கெரில்லாவாகப் போனீர்களா? பேசாமல் திரும்பி வந்துவிடுங்கள்.

**இ.சா:** ஆமாம், என் செயலாளர் ஏதாவது எழுதித் தந்தால் மட்டும்தான் பேசுவேன்.

**கமீலா:** பார்த்துப் பேசுங்கள்.

**இ.சா:** நான் எப்போது கண்ணே உரைகளைப் பார்த்துப் பேசியிருக்கிறேன். உன்னை மட்டும்தானே பார்த்துப் பேசியிருக்கிறேன்.

உன்னைக் காணாத
கண்ணும் கண்ணல்ல.
உன்னை எண்ணாத
நாளும் நாளல்ல.
நீ இல்லாத நாடும்
நாடல்ல!
இங்கு நான் ஒரு கைதி
நீ ஒரு கள்ளி.
லங்காவும் பீஸும்
ஒன்றல்ல, ஒன்றல்ல.

**கமீலா:** திரும்பி வா உயிரே
திரும்பி வா.
விரும்பி வா உயிரே
விரும்பி வா!

(தொடர்பு 'கட்' டாகிறது.)

**காதிலை பூ கந்தசாமி**



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/21/NEWS/98)




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு
436331








SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு,-கொழும்பு
323657


➘ உலகில் நடந்த விபத்துக்களில் மாபெரும் கடல் விபத்து 1994ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28ம் திகதி பால்டிக் கடலில் நடந்தது.

'பாதை' என்று அழைக்கப்படும் பிரமாண்டமான பயணிகள் படகுதான் கடலில் மூழ்கியது. பயணிகளை மட்டுமன்றி வாகனங்களையும், பொருட்களையும் ஏற்றிச் சென்று கரைக்கு சேர்க்கக்கூடிய பிரமாண்ட 'பாதை' (படகு) அது.

அதன் எடை 15 ஆயிரத்தி 318 தொன். ஃபின்லாந்துக்கு சொந்தமான இப்படகில் 912 பேர் இருந்தனர். இடைநடுவே திடீர் கோளாறு. கடல் நடுவே படகு கவிழ்ந்தது. ஆபத்தான சந்தர்ப்பத்தில் திறக்கவேண்டிய அவசரக் கதவுகள் திறக்கமாட்டோம் என்று அடம்பிடித்தன. அதனால் பயணிகள் அனைவரும் படகுக்குள் சிக்கி பலியாகினர். யாரும் தப்பவில்லை. பலியானோர் தொகை எவ்வளவு தெரியுமா? 912 பேர். 300 அடி ஆழத்தில் படகு கவிழ்ந்தது.

கவிழ்ந்த படகை மாபெரும் கிரேன் உதவியுடன் மீட்கும் காட்சிதான் இது. ஐரோப்பாவில் நடைபெற்ற மிகப் பெரிய விபத்தாக இது கணிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்கள் அனைவரும் ஃபின்லாந்துக்காரர்கள். விபத்துக்குள்ளான படகின் பெயர் எஸ்ரோனியா.

அவசரக் கதவுகள் ஏன் திறக்கவில்லை? விபத்தின் காரணம் என்ன? போன்ற விபரங்களை அறிவதற்காகவே படகின் பாகங்களை பலத்த முயற்சி செய்து மீட்டெடுத்தனர். ஆனால் இதுவரை காரணம் கண்டறியப்படவில்லை.




← பட்டை தீட்டத் தீட்டத்தான் வைரம் ஜொலிக்கும் என்பது தெரிந்ததுதான். உலகிலேயே அதிகளவு பட்டை தீட்டப்பட்ட மாபெரிய வைரம் இதுதான். என்னமாய் ஜொலிக்கிறது பாருங்கள்.

இந்த வைரம் இருக்கும் இடமும் ரொம்பப் பெரிய இடம். தாய்லாந்து அரசரின் செங்கோலில் பதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து மன்னரின் பொன் விழா கொண்டாட்டத்தின்போது தாய்லாந்து வர்த்தகர் குழு ஒன்று நினைவுப் பரிசாக மன்னருக்கு கொடுத்த வைரம் இது.

சுரங்கத்தில் இருந்து பெறப்பட்ட 755.50 கரட் எடையுள்ள வைரக் கல்லில் இருந்து 545.67 கரட் எடைக்கு நவீன வெட்டுச் சாதனங்கள் மூலம் வடிவமைக்கப்பட்டது. அதுதான் நேர்த்தியான வடிவத்தில் காணப்படுகிறது.




↑ அழகான பெண்களை வைரச்சிலை என்பர். இந்த வைரச்சிலையின் விரல்களுக்கிடையே ஒளிர்வது வைரம். மிகச் சின்னதாக இருக்கிறதே என்று அலட்சியமாக நினையாதீர். உலகிலேயே மிகப் பெறுமதி உடைய வைரக்கல் இதுதான் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஈட்டி முனையின் வடிவத்தை உடைய இந்த வைரம் 100.10 கரட் எடையுள்ளது. மிக முக்கியமாக மாசு மருவில்லாதது. சுவிற்ஸர்லாந்தில் ஜெனிவா நகரில் உள்ள சோத்பே ஏல விற்பனை நிலையத்தில் 1995ம் ஆண்டு மே 17ம் திகதி விற்பனைக்கு விட்டனர்.

சவுதி அரேபியாவைச் சேர்ந்த செல்வந்தரான ஷேக் அகமத் என்பவர் கட்டுக்கட்டாக பணத்தை வீசி தனக்கு சொந்தமாக்கிக் கொண்டார். அவர் கொடுத்த விலை ஒரு கோடியே 5 இலட்சத்து 7 ஆயிரத்தி 143 ஸ்டேர்லின் பவுன். யப்பா எழுதவே இத்தனை நீளம். எண்ணிப் பார்த்தால் (நம்மூர் பெறுமதிப்படி 107 கோடியே 17 இலட்சத்து 28 ஆயிரத்து 586 ரூபாய்கள்) உலகிலேயே மிக அதிக விலைக்கு விற்பனையான வைரக்கல் இதுதான்.




## பிறந்த நாள் வாழ்த்து

திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்டவர்களும், ஜேர்மனியில் வசிப்பவர்களுமான ஜேந்திரா-தயாளினி தம்பதியினரின் செல்வக்குழந்தைகள் சங்கீத் தனது 4 வது பிறந்தநாளை 14.03.98 இலும்,

### செல்வன் சங்கீத், செல்வி சங்கவி

சங்கவி தனது 1வது பிறந்தநாளை 26.02.98 இலும் Bergheim (Germany) இலுள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா, இலங்கை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, ஜேர்மனி காசிமாமா, லோஜி அத்தை, இலங்கை கஜேந்திரா பெரியப்பா, ஸ்ரீ பெரியம்மா, சுவிஸ் விஜேந்திரா பெரியப்பா, ரதி பெரியம்மா, ராதாமாமா, பவானி அத்தை, இலங்கை ரகுமாமா, விக்கி அத்தை, பரிஸ் ராஜன் மாமா, பத்மா அத்தை, ஜேர்மனி நகுலேஸ் சித்தா, இலண்டன் தெய்வேந்திரம் பெரியப்பா, றேகா பெரியம்மா, பரிஸ் தயாபரன் பெரியப்பா, பாமா பெரியம்மா, இலங்கை ஈசன் மாமா, தச்சி அன்ரி, மச்சான்மார்கள் மஞ்சு, ஐங்கரன், அபி, நிலோஜன், நிருபன், ரம்யன், சகோதரர்கள் லக்ஷி, யது, சஜந்த் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இறைவன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க, வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ஜேந்திரா, தயாளினி (Germany)

➡ சனத் ஜெயசூர்யா போன்றோ, அரவிந்த டி சில்வா போன்றோ ரொஷான் மகாநாம ஒரு சூப்பர் ஸ்டாராக இல்லாமல் இருக்கலாம், ஆனால், அணியின் நம்பிக்கை நட்சத்திரம் என்பதில் சந்தேகம் இல்லை.

சகலதுறை ஆட்டக்காரரான மகாநாம இலங்கை அணியை தோல்வியில் இருந்து காப்பாற்ற பலமுறை கைகொடுத்திருக்கிறார்.

1987ல் இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்த இலங்கை அணி இந்தியாவுடன் மும்பாயில் நடந்த சர்வதேச ஒருநாள் போட்டியில் விளையாடியது. 40 ஓவர்களில் 299 ஓட்டங்களை சேகரித்தாக வேண்டும். படுதோல்விதான் என்ற கட்டத்தில் அணி இருந்தபோது களம் புகுந்த மகாநாம 98 ஓட்டங்களை குவித்தார். அதனால் 289 ஓட்டங்களுடன் கௌரவமான தோல்வியுடன் சமாளித்தது அணி.

கடந்த ஆண்டு டெஸ்ட் போட்டியில் இணைப்பாட்ட சாதனையாக 576 ஓட்டங்களை சனத்துடன் இணைந்து படைத்தார். மகாநாம பெற்றது 225 ஓட்டங்கள்.

இலங்கை அணிக்கும் மகாநாம கப்டனாக இருந்திருக்கிறார். இடையே சிலகாலம் ஒருநாள் போட்டிகளில் சறுக்கினார். ஆனால் கடந்த ஆண்டு மகாநாமவுக்கு அதிஷ்டமான ஆண்டு. மறுபடி விளாசலில் இறங்கியிருக்கிறார். பந்துகளை லபக் கென்று அமுக்கிப் பிடிப்பதிலும் மகாநாம கில்லாடி.

அதனால் மகாநாம நிற்கும் திசையில் பந்தை அடிக்கத் துடிப்பாட்ட வீரர்கள் தயங்குவர்.






இப்பத்திரிகை கொழும்பு கிருலப்பனை காலிந்த ப்ளேஸ், 5ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 25, வெல்வா நாவலவில் உள்ள சமலை அச்சகத்தில் பெப்ரவரி 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

www.padippakam.com